V. Thiruvarangam

உ

கணபதி துணை.

கலைமகள் மறைமலர் ௧.

# திருக்குறள் நீதிக் கதைகள்.

## முதற்பாகம்

## இல்லறவியல்.

---

சுதேசமித்திரன் உதவிப் பத்திரிகாசிரியர்

மயில்ரங்கம்-சுந்தர சுப்பிரமணிய ஐயர்

இயற்றியது

---

T. V. சுந்தரேச சாஸ்திரியார், B. A.

வெளியிட்டது.

PRINTED AT THE INDIA PRINTING WORKS, MADRAS

1914.

---

Copyright Registered.

விலை அணா ஆறு
தபாற்கூலி வேறு.

கணபதி துணை

# முன்னுரை.

தமிழபிமானிகளே!

கண்ணுதற் பெருங்கடவுள் சங்கப்புலவருடன் கழக மேற்றமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த நம் தமிழ்மொழியிற் சிறந்து விளங்கும் நீதிநூற்களில் திருக்குறளே முதன்மையானதென்பது வெளிப்படை. 'நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன் தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூன்மொழி' யெனவும், 'நாலும் இரண்டும் (திருக்குறள்) சொல்லுக்குறுதி' யெனவும் பல புலவர் புகழ்ந்திருப்பதால் இத்திருக்குறளுக்கு எந்நூலும் இணையாகாதென்பது தெளிவாய் விளங்குகின்றது. மேலும் திருமால் வாமனவதாரத்தில் மூவுலகங்களையும் தம் படியிணைகளால் அளந்தது போல, திருக்குறள் வெண்பாக்கள் அளவிற் சிறியதாகக் காணப்படினும், பொருளிற் பரந்ததென்பதை வெளிப்படுத்த 'அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என ஔவை சிறப்பித்திருப்பதைப் பலரும் நன்கறிவர். ''ஓதற்கெளிதாய் உணர்தற் கரிதாகி' என மாங்குடி மருதனார் (சங்கப்புலவர்) சிறப்பித்திருப்பதனை, இத்திருக்குறளின் ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தப் பரிமேலழகரென்னும் புலவர் சிகாமணி பாண்டியனவைக்களத்தே சென்று தாமியற்றிய திருக்குறளுரையே செவ்விதென்பப் புலப்படுத்தியும், இப்பரிமேலழகருரை பண்டிதர்க்கே பயனளிக்கின்றதெனவும் மற்றையோர் அதனை எளிதில் அறிய முடியாதெனவும் பெரியோர் கூறுகின்றனர்.

ஆதலின் திருக்குறளின் சொன்னயங்களையும் பொருள் நயங்களையும் பலரும் அறியும்பொருட்டு ஒவ்வோரதிகாரத்தினின்றும் ஓரொருகுறள் தேர்ந்தெடுத்து, அதற்குப் பரிமேலழக ரியற்றியிருக்கும் உரையும், அவ்வுரை [illegible] என் சிற்றறிவிற்கு எட்டியவாறு குறிப்புரையும், [illegible]த்து நன்குபுலப்பட நயபுராணாதிகளிலிருந்து [illegible]களும் எழுதி இந்நூலைப் பிரசுரஞ்செய்ய மேலும் இந்நூலிலுள்ள கதைகளைப் படிப்பதனால் பலரும் நம் முன்னோரின் குணாதிசயங்களையறிந்து பயன் பெறுவரென்பது என் துணிபு

வரன்முறைப்படி எனக்குத் தமிழைப்பாடஞ் சொல்லிவந்த குருவும், வடமொழி தென்மொழி தெலுங்கு இம்மூன்று பாஷைகளிலே பிரபல பண்டிதரும், பாரத இராமாயணப் பிரசங்கியுமாகிய வாழ்க்குடை ம-ள-ள-ஸ்ரீ வேங்கடராம சாஸ்திரிகளின் மலர்ப்பதங்களைக் கனவிலும் நனவிலும் உச்சிமேற்கொண்டு துதித்து வருகின்றேனென்று நான் இங்குரைப்பது முற்றிலும் பொருந்தும். நிற்க,

இத்திருக்குறள் நீதிக்கதைகள் சிலவற்றைச் சுதேசமித்திரன் வாயிலாக வெளிப்படுத்தி [illegible] இக்கதைகளை எவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்களென்று அறிய ஆவல்கொண்டபொழுது சுதேசமித்திரன் பத்திராதிபர் என் வேண்டுகோளுக்கிணங்கி அவ்வாறே கதைகளைப் பிரசுரஞ்செய்தமைக்கு நன்றியை யான் என்றும் மறவேன். மேலும் இச்சிறுநூலை அச்சியற்றுவதற்குப் பணவுதவி புரிந்துவந்த எனது நண்பர் V. சுந்தரேச சாஸ்திரிகள் B. A. அவர்களின் உதவி மிகவும் பாராட்டத்தக்கது. திருமயிலையில் வசித்துவரும் ஹைகோர்ட் வக்கீல் பார்த்தசாரதி அய்யரவர்களும் உதவி செய்திருப்பதை நான் இங்கு

குறிபபிடல அவசியமே. நாடெஙகும புகழபெறறுவரும சுதேசமிததிரன பததிரிகையில என்னுடன உதவிப பததிரிகாசிரிய ராயிருநதுவரும எனது நண்பா விசுவநாதயயரவாகள, இசசிறுநூலை நான எழுதி வருமபொழுது புததி சாதுரியமான யோசனைகள எனககுப புகடடி வநததனால அவருடைய உதவியைநான ஒருநாளும மறவேனெனபது நிசசயம

இனி, நவீன நாவலகளை ஆவலுடன விலைகொடுதது வாஙகிபபடிககும அபிமானிகளும இததிருககுறள நீதிககதையெனனும இநநூலையும வாஙகிபபடிதது எனககு ஊககமளிபபாரகளென நமபி, இதுபோலவே கொடாசசியாயககுறள முழுமைககும நீதிககதைகள எழுதிப பிரசுரஞசெயய உததேசிததிருககினறேனாதலின, இநநூலில காணபபடும குறறஙகளைப பொறுதது, வேணடிய சீாதிருததஙகளை எவரேனும எனககு அறிவிபபாராயின அநநனறியை மிகவும பாராடடுவேன. எனது நூலை அழகாய அசசடிததுத தநத இநதியா அசசுககூடததலைவாககும வநதனமளிதது, எலலாமவலல இறைவன அனைவாககும அருளபுரியுமபடி துதிததுவரும

சென்னை
3—4—14.

அனபன,
மயிலரங்கம் சுநதர சுபபிரமணியன்.

# திருக்குறள் விளக்கம்.

## திருக்குறள் நீதிக்கதைகள்.

### 1-வது கதை. கடவுள் வாழ்த்து.

திருக்குறள்.
மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

பரிமேலழகர் உரை:—மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமை தங்கிய அடிகளை இடைவிடாது நினைந்தார் எல்லா உலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்.

கருத்து:—அன்பால் தன்னைத் தியானிப்பவரது ஹிருதய கமலத்தில் அவரவர் நினைத்த வடிவத்தோடு சென்று வீற்றிருப்பவர் கடவுள்; அத்தகைய கடவுளது பாதாரவிந்தத்தைத் தியானஞ்செய்பவர் முக்தி பெறுவர்.

உதாரணம்:—கடலாடை சூழ்ந்த இக்காசினியில் ஹிரணியன் என்னோர் அசுரன் இருந்தான். இவன் அருந்தவமியற்றி இறைவனது இன்னருளால் மிக்க வலிபெற்றுப் பெருமிதத்துடன் வாழ்ந்துவந்தான். இவன் பெற்றவரமோ மண் விண் இரண்டிலுஞ் சாவில்லை, ஆண் பெண் அலி இவராலும் அழிவில்லை, சுராசுரராலுஞ் சாவில்லை, நீர் நெருப்பு காற்று முதலியவைகளாலும் முடிவில்லை, அஸ்திர

சஸ்திரங்களாலும் அழிவில்லை, வீட்டிற்கு வெளியிலும் உள்ளிலும் உயிர் ஒழிகவில்லை, பகல் இரவு இரண்டிலுஞ் சாவில்லை. சுருங்கச்சொல்லின் மும்மூர்த்திகளாலும் முடிவில்லை. தன் தபோமகிமையால் திரிலோகங்களையும் தன் ஆட்சிக்குட்படுத்தி அனைவரும் திரிமூர்த்திகளது திருநாமத்தை யுச்சரிப்பதைத் தவிர்த்துத் தன் பெயரையே தியானித்து வணங்கும்படி கட்டளையிட்டான். அதுவுமன்றி அந்தணர்களியற்றும் வேள்விகளில் தேவர்பொருட்டு அளிக்கப்படும் அவிர்ப்பாகத்தைத்தானே பெற்றுத் தருக்கியிருந்தான். "பத்து வந்தாலும் பதட்டமாகாது" என்ற ஆன்றோர் அமுதமொழியை இவன் மறந்தனன் என்று சொல்லத்தகையுமோ? இவன் செய்யும் அக்கிரமச் செயல்களைக் கண்டு சகியாத தேவர்முனிவர் இட்ட சாபமும் இவனைச் சார்ந்து வருந்தத் தொழிந்தது. ஆதலின் தனக்கு நிகர் எவருமில்லை யெனக் களித்து அடாத செயல்களைச் செய்துவந்தான். புலியின் வயிற்றில் பசு பிறந்ததுபோல இப்பதிகனுக்கு, பிரகலாதன் என்னுமோர் ஆண்மகவு தோன்றிற்று. இப்பாலனை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துவந்து தக்க பருவமடைந்தது கண்டு வேதியனொருவனை யழைப்பித்து வித்தியாப்பியாசஞ் செய்விக்கச் சொன்னான். அம்மறையோனும் மதலையைத் தன் சாலைக்குக் கொண்டுபோய் வித்தியாரம்பஞ் செய்யப் புகுமுன் வழக்கம்போல் "ஹிரண்யாயநம" என்று துதிக்கச்சொன்னதும் அக்குமாரன் தன்னிரு செவிகளையும் கைகளாற் பொத்தி "ஓ! என்ன ஆச்சரியம்! வேதசாரமாகிய ஓம் நமோ நாராயணாய என்றல்லவோ எண்ணித் துதித்தல் வேண்டும்." என வுரைத்து அத்திவ்ய நாமத்தை ஓதி யுளங்குளிர்ந்தான். இதனைக்கண்ட ஆசிரியன்

"குழந்தாய்! நீயுங்கெட்டாய், என்னையுங் கெடுத்தாய். தேவரும் ஹிரண்யாய நம என்று துதிப்பரேயன்றி நீ சொன்ன மந்திரத்தைக் கனவிலுங் கருதார். இளங்கன்று பயமறியாது என்னும் பழமொழிக்கேற்ப நீ அறியாச் சிறிய வனாகலின் உன் தந்தையின் ஆக்ஞையை அறியாது இவ் விதம் உரைக்கின்றாய்" என்று நடுநடுங்கினான். "ஐயா! ஏன் இவ்வளவு பயம்? ஓம் நமோ நாராயணாய என்ற நாமத்தை நவின்றிருப்பின் யாது கேடுவிளையும்" என்று பிரகலாதன் கேட்க அவ்விப்பிரன் "அந்தோ! நினது தந்தையின் கட்டளையால் மூவுலகத்தோரும் அவரது நாமத்தை யுச்சரித்துப் பின்னரே சகல காரியங்களையுஞ் செய்ய வேண்டும். ஆதலின் நீ இவ்வாறு விளம்புவதை உன் பிதா அறிவரேல் நாமிருவரும் நமனுலகு சேரவேண்டியதுதான். ஆகவே இப்பெயருரைத்து என்னைக் கெடுத்திடேல்" என மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். பின்னர் பேரறிவாளனாம் பிரகலாதன் வேதியப் பிரானை விளித்து "ஆரிய சிரேஷ்ட! ஆதிபகவனது பெயரையன்றி வேறொன்றையும் நான் நாவினால் நவிலேன்" என்னப் புகன்றனன். மறையவனோ மனமறுகி மன்னவனை யடைந்து "இராஜ திலக! மைந்தனே தங்கள் திருநாமத்தைச் செப்பாது இதுவரையில் ஒருவரும் உரைக்காத ஒன்றை யுரைத்து நிற்கின்றான் என் செய்வேன் எங்கோவே! என்று சொல்லி நடுங்கி யழுதான். இதனைக் கேட்ட அவுணராஜன் "அந்தணர் திலக! முன்னர் யாவரும் மொழிந்திடா எம்மொழியை என் பாலகன் பகர்ந்தான்? அதனை யுரைத்தி" என்னும் "அந்தோ! அவ்வுரையை உரைக்க என் நாவெழவில்லை" என்றான் அந்தணன். அக்கொடியோன், என் மகனை என் சமூகம் அழைத்துவருக, என்று

ஏவினான். காவலாளிகளும் காவலனது கட்டளையைத் தலைமேற்கொண்டு கடிதினோடி கணப்பொழுதில் குமரனைக் கொணர்ந்தனர். வந்து வணங்கி நின்ற மைந்தனை வாரியெடுத்து மடிமீதிருத்தி மார்புறத்தழுவி "என்குலக் கொழுந்தே! மறையோனுரைத்த மொழியை மொழியாது நீ பகர்ந்ததென்ன" என்று கேட்டதும் "எங்கும் நிறைந்து எவ்வுயிரையும் இயற்றியற்றி இன்னருள் புரிந்து வரும் எம்பெருமானது ஓம் நமோ நாராயணாய என்னும் திருநாமந்தான்" என்றியம்பினன் பிரகலாதன். அவ்வளவுதான் தாமதம் கண்கள் கனல்களில் கோபாக்கினி ஜொலிக்க, அறிவிலி! திரிலோகவாசிகளும் என் பாத கமலத்தை நினைந்தேத்துகின்றனர். உன் சிறிய தந்தையைக்கொன்ற பாவியின் நாமத்தைப் பகர்வா உன்னைப் பெற்றெடுத்தேன் யான்? என வெகுண்டான். பிரகலாதனும் பிதாவை நோக்கி "உலக மனைத்தையும் படைத்துக் காத்துவரும் கருணாகரனது திருநாமத்தை ஓதியுணர்தலைத் தவிர இப்பந்தத்தினின்றும் கடைத்தேற வேறு வழியுமுண்டோ! மேலும் தாங்கள் இத்தனை வலியும் வாழ்வும் பிறந்தவுடனே பெற்றதுண்டோ? நான்முகனைக்குறித்து நற்றவம்புரிந்து இப்பெருவாழ்வு பெற்றதையும் மறந்தீர் போலும். அங்ஙனமிருக்க, தங்கள் பெயரை எவரும் ஓதி உய்ய வேண்டுமென்பது தகுமோ? என்பப் பணிவுடன் புகன்றான். எதிரில் நின்ற புத்திரன் இவ்விதம் இயம்பியதைச் சகியாதவனாகிய ஹிரணியன் "எனக்கும் என் குலத்துக்கும் ஜென்மப்பகையோனா யிருப்பவனிடம் அன்புபூண்டான் இப்பையல். குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக்காம்பை என் மாளிகையிலிருக்காது எலி தனைக் கொன்று குவிக்கும் அரவின் நாமத்தைத் தொழுவதோ

விருக்கின்றது இவனது அன்பு ஆனதுபற்றி இவன் ஜீவனைச் சடுதியில் போக்குங்கள்" என்றிட்டான் கட்டளை.

உடனே அசுரர் பலர் ஒன்றுகூடி நொடிப்பொழுதில் பிரகலாதன்மீது அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகித்தனர். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது பொய்யா மொழியாகலின், அனவரதமும் அமலனது மலரடிகளில் அன்பு பூண்ட பக்தனைச்சென்று தாக்கி அவ்வாயுதங்கள் முறிந்தனவே யன்றி, சிறுவனது உடலுக்கோர் கெடுதியும் நேரிடவில்லை படைக்கலங்கள் பழுதுபட்டமையை அப்பாவி அறிந்தவுடன் தன் மகனென்கிஞ்சித்தும் இரங்கானாகி "இவனை நெருப்பிலிட்டு நீறாக்குக" என்று உத்தரவளித்தான். அவ்வாறே தீயிலிட்டும் பிள்ளை மேனிக்கு யாதொரு தீங்கும் நேரிடாதது கண்டு அஷ்டமஹா நாகங்களை யேவி, கடிக்கவிட்டுப் பார்த்தான் ஹிரணியன். அவனது எண்ணம் நிறைவேறவில்லை பின்பு அரசனாணையால் தேவேந்திரனது ஐராவதத்தின் காலாலிடறச் செய்தனர் கல்லைக்கட்டிக் கடலில் எறிந்தனர் ஆகாரத்தில் விஷமிட்டும் பார்த்தனர் ஒன்றும் பயன்படவில்லை ஸ்ரீ ஹரியின் நாமத்தைச் சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை என்னும் பழமொழி பொய்க்குமோ? ஆகவே எவ்விதத்திலும் தன் தனயன் இறக்காமைக்கண்ட ஹிரணியன் தானே கொல்வதாக நிச்சயித்தெழுந்தனன் அச்சமயம் புத்திரனும் பிதாவை நோக்கி, "எந்தாய்! என்னுயிரைப் போக்குவது தங்களாலாகும் காரியமன்று உலகையுண்டு பண்ணிய ஒருவனால் தான் ஆகும்" என, "உலகத்தைப் படைத்தவன் யாவன்? மும்மூர்த்திகளா? தேவரா? முனி

வரா? எவர்? அவன் எங்குள்ளான்? எனக் கர்ஜித்தான். கனகனும் மீண்டும் பிரகலாதன் "தந்தையே! உலகத்தையும் அதிலுள்ள சகல சராசரங்களையும் சிருஷ்டித்து சர்வ வியாபியாயிருக்கும் ஈசன் நினைத்து கண்ணுக்குத் தோன்றுவதரிது. எனது நேத்திரங்களால் எளிதில் காணலாகும். அவன் எங்குளானெனின் தூணிலுமுள்ளான் துரும்பிலுமுள்ளான், நீ சொன்ன சொல்லிலுமுள்ளான், அவனை நீ சீக்கிரம் காணினுங் காணலாகும்" என்று பதிலளித்தான். கனகனும் கலகலவென நகைத்து "உலகெங்கும் பரந்துள்ளான் ஒருவன் உள்ளான் என்றாயே அவனை இக்கம்பத்தினிடை இக்கணமே காட்டல் வேண்டும். காட்டிடாயேல் உன் உயிரை மாய்த்து உதிரத்தைப் பருகி உடலையும் உண்பேன்" என்றான். பக்தசிரேஷ்டனாகிய பிரகலாதன் "நான் சொன்ன பரம்பொருள் யான் தொட்ட தொட்ட இடந்தோறும் தோன்றானாயின் என்னுயிரை யானே மாய்த்துக்கொள்வேன். அன்றியும் நானும் அவனடிமையல்ல, அவனும் என் இறைவனல்ல" என்றதும், அரக்கன் அடங்காக் கோபமுண்டு தன்னருகே நின்ற தூணைக் கையாலறைந்து "எங்கடா அவன்? இத்தூணில் உள்ளு" என்று சிங்கநாதஞ்செய்தான். தட்சணமே திரிபுவனமும் கிடுகிடென நடுங்கும் வண்ணம் கோபச்சிரிப்பொன்று கம்பத்தினின்றும் கிளம்பியது. அன்பனும் ஆடினான், பாடினான், அழுதான், தொழுதான், துள்ளினான். தன் பிள்ளையினது அகமகிழ்வைக் கண்ட அவுணனது வெகுளி நெய்பெய்த அனல்போலாயிற்றென்றே சொல்லவேண்டும். "ஆரடா சிரித்தது? ஹரியா? அன்று எனக்குப் பயந்து ஒளித்த கடல் போதாதென்று இக்கம்பத்தினையடைக்கலமாகக் கொண்டனையோ? வலுவிருக்குமேல் போர்புரி

## 1-வது கதை கடவுள் வாழ்த்து

யப் புறப்ப" டென்றான போரிற சிறந்த ஹிரணியன. டனே தூணும திடீரெனப பிளந்து அதனினறு அடி ம முடியும இனனதென்று அறிய முடியாத நரஸிமம மூரததி தோனறினா. தோனறிய வளவில அசுரசேனையும் யுததததிறகுத திரணடது. அரை நொடியில அசுரசேனை யனைததும தீயிறபடட பஞசுப பொதிபோல அழிந்தன. அககாலை ஹிரணியன வெகுணடு தன வயிரவாளையுருவி அவதார மூரததியைத தாககச சென்றான. பெறற மனம பித்து பிளளை மனம கலலு எனற முதுமொழிககு மாறு கப பிரகலாதன தன பிதாவை நோககி "இதோ நிறகும் மூரததியினது வலியையும நிலையையும கணணாரககணடும ஒன்றும உணராதது எனனே! இசசமயம தவறின வேறு சமயம வாயபபதரிது ஆதலின இபபொழுதே இமமூர ததியைப பணிந்து வணஙகினகடைத்தேற மாரககமுணடு" எனறு இரஙகினான. இநநனமொழி செவிடன காதில சஙகூதினது போலானதே தவிர வேறிலலை

"அடே அறிவிலி! யாரையடாவணஙகச சொன்னாய! என் முன்னிற்கும இச செஙகட சீயததை ஆவி துணி தது உனனை அநதகனுலகனுபபிய பினனர் என வெறறி வாளைததொழுவேனே யலலது வேறெவரையும வணங் கேன் எனபதை நனகுணாநது கொள" என்றிடி முழக் கம போல ஈாசசனை செயதான காலனுலகுசேர விருககும னகன. பினனா சநதியா காலததில ஹிரண்யனைத தன திருக்கையால வாரி யெடுதது அரணமனைவாயிற படியில அவனைத தளளித தொடையின் மீதிருததிநகஙகளால் பகொடியோன வயிறறைககீறி னெறா நரஸிமம மூரத தம. இச்சமயம பரநதாமனுக்குத தோனறியிருக்கும கோபாககினி தணியாதெனககண்ட அயன முதல் தேவா

பலரும் பாற்கடலில் அமுதுடன் தோன்றிய திருமகளையும் உடனழைத்து வந்து மனோவாக்குகாயங்களால் ஆடிப் பாடித் துதித்து நின்றனர். அப்பொழுது பக்தியிற் சிறந்த பிரகலாதனை "அன்ப! உன் தந்தையை உன் முன் கொன்ற காலத்தும் நீ சற்றேனும் மனஞ் சலியாது பக்தி பூண்டு நின்றனை. இனி உன் குலத்தார் எல்லையில்லாத குற்றஞ் செய்தாரே யானாலும் உன் மீதுள்ள கருணையால் அவர்களைக்கொல்லேன். யாது வரம் விரும்புகின்றனை" என்றார் எவ்வுலகமும் காத்தருளும் எம்பெருமான். உடனே பிரகலாதன் பரந்தாமனது பாதம் பணிந்து "ஆபத்பாந்தவ! முன்பே நான் பெற்றிருக்கும் பாக்கியத் திறமோர் அளவில்லை. நின் நாமம் தருவதைக்காட்டிலும் நீ தருவது வேறுமுண்டோ? எண்ணில்லாத புழுப்பிறவி நான் அடைந்தபோதிலும் அப்பொழுதுகூட உன்னிடத்து பக்தி மறவாதிருக்கவேண்டும் என்பதே என் வேண்டுகோள்" என வணங்கி நின்றான். அமலநாதனும் அருள் சுரந்து "முன்னமேயே நான் உனக்குத் தொழும்பனாயினேன். பஞ்ச பூதங்கள் முடியுங்காலத்திலும் நீ எந்நாளும் அழிவில்லாது என் போலிருப்பாய். உன்னைத் தொழுதேத்துபவர் என்னைத்தொழுதேத்தி யாது பயன் பெறுவரோ அதனையே பெறுவர். இத்தகைய நீ அசுரர்க்கு அரசென்பது தகாது. சுரர்க்கும் இனி நீயே இறைவன். நானே நீ! நீயே நான்" என்று வரமருளிப்பிரமன் ஓமமியற்ற முனிவர் வாழ்த்தெடுப்பத் தன் கையால் பிரகலாதனுக்கு முடி சூட்டினர்

அன்பர்கள் ஆதலின் இன்னருள் புரியும் ஈசனது உபயபாதங்களை ஊக்கமுடன் எந்நாளும் ஏத்துபவர் ஐய

பொறிகளும் அடங்கி ஒருமையுடன் ஓவிலா மோட்சம் பெறுவார்.

## 2-வது கதை. வான் சிறப்பு.

திருக்குறள்.
சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

பரிமேலழகர் உரை —தேவர்களுக்கும் இவ்வுலகில் மக்களால் செய்யப்படும் விழவொடு பூசையும் நடவாது மழை பெய்யாதாயின்.

குறிப்பு—மழை பெய்யாதாயின் இப்பேருலகில் பஞ்சம் உண்டாகும். அக்காலத்தில் மனிதர் தாங்களே பசியால் வாடும்பொழுது தேவர்க்கு எவ்வாறு பூசை முதலியன நடத்தக்கூடும்.

உதாரணம் —சீவளமும் நிலவளமும் நிரம்பப்பெற்ற செருவிலிபுத்தூரில் வேதியர்களுக்கு முன் ஆதி சைவர் குலத்தில் தோன்றிய புகழ்த்துணையார் என்னும் புண்ணிய புருஷரொருவர் வாழ்ந்து வந்தார். எல்லாம் வல்ல இறைவனிடம் மெய்யன்பு பாராட்டி, பக்தி பூண்டு பரமபத மடைந்த நாயன்மார்களில் இவர் ஒருவர். இப்புகழ்த் துணை நாயனார் அம்பிகை பாகனை ஆகம விதிப்படி இடைவிடாது பூசைசெய்து வருநாளில் ஒருகால் மழைபெய்தலொழிந்து தேசமெங்கும் பஞ்சம் நேரிட்டு அத்தி முதல் எறும்பீறான உயிர் அனைத்தும் பசியால் பரதவித்தன. ஆ! அக்கருப்புக்காலத்தின் கொடுமையை என்னென்று சொல்வது? புல், பூண்டு, செடி, கொடி, மரம் யாவும் கதிரவனது வெம்மையைத் தாங்க முடியாது கரிந்தன. மனிதரோ உண்பதின்பன மிகக் குறைந்தனவாதலின்

பசிப் பிணியைப் பொறுக்கமாட்டாது ஆடுகளும் தின்ன யோக்கியமில்லா அடகு தின்றும் நிலத்தைத் தோண்டி கிழங்காதி கந்தமூலம் புசித்தும் தீப்பசி தணியாது தளர்ந்தனர். அன்றியும் காய் கிழங்கு முதலியனவும் கிடைக்கப் பெறாத பலர் நீரைத் தேடிச் செல்ல அந்நீர் நிலையனைத்தும் சேறாயிருந்தது கண்டு வேசாறினார். மேலும் தாய்மார்கள் தங்கள் அருமைக் குழந்தைகளின் கைகளில் ஏதேனும் தின்பண்டமிருப்பின் அதனைப் பறித்துத் தின்று பசியாற்ற முயன்றனர். முடிவாகச் சொல்லின் பல்லாடப் பசி தீரும் என்றபடி வாய்தனில் இட்டு மெல்லுதற்கு இது தகும் தகாது என்றெண்ணாது கண்ட கண்ட பொருளையெல்லாம் எடுத்து நுந்தப் பார்த்தனர். பார்த்துமென்? பசியின் கொடுமையோ தணிந்தபாடில்லை. வயிற்றுப் பெருமானைத் திருப்தி செய்ய வகைகாணாதாரோ, திருவிழா இவைகளை எங்ஙனம் கொண்டாடுவர்? நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு உண்டோ? தனக்கு மிஞ்சியல்லவோ தான தருமம், இத்தகைய கொடிய பஞ்ச காலத்திலும் நாயனார் மெய் வருத்தமும் பசியும் பாராட்டாது அன்பின் உறைப்பாட்டினால் ஆலய நாதனது பணிவிடைகளில் ஒரு சிறிதும் குறைந்தாரில்லை. "நீர் வரும் இன்னல் தம்மைச் செயினும் செய்யு சிந்தைப் பேரருளாளர் தத்தம் செய்கையிற் பிழைப்பதுண்டோ"? எனவே வழக்கம்போல் புகழ்த்துணையார் சிவபிரானைத் திருமஞ்சனமாட்டுகையில் பசிப்பிணி இவரை வருத்தியது. பசிவந்திடப் பத்தும் பறக்குமாகலின் பசியினால் மிகவும் தளர்ச்சியுற்றார். உடனே கையிலிருந்த திருமஞ்சனக் குடம் சிவபெருமானது திருமுடியில் விழ, தாமும் மெய்ம் மறந்து முன்னவனது பாதார விந்தங்களில் பொத்தென வீழ்ந்த

னார். வீழ்ந்ததும் நித்திரை வந்து பத்தனைப் பணிகொண்டது. அக்காலே உமையாள்பங்கன் உள்ளன்புடைய நாயனார்து கனவில் தோன்றி "பக்த! இப் பஞ்சகாலம் நீங்குமளவும் நினக்கு நாம் நித்தம் ஒரு காசு (சவரன்) தந்தருள்வோம், அதனைப் பெற்று உணவருந்தி மகிழ்ந்திரு உனது பக்திக்கு மெத்தவும் மெச்சினோம்" என்று வரமருளி மறைந்தனர். பொழுது புலருமுன் பக்தன் துயிலொழிந்து எப்பொழுதும்போற் கோயிற் திருப்பணி செய்கையில் சூலபாணியின் பீடத்தின் கீழ் காசு கண்டு கண்ணொளி பெற்ற பிறவிக் குருடனேபோல அடங்கா மகிழ்ச்சி கொண்டு மனம், வாக்கு, காயம், ஆகிய முக்கரணங்களாலும் முதல்வனைப் பணிந்து ஆடிப் பாடினார். பின்னர் அந்நாள்போல எந்நாளும் ஒவ்வோர் காசு பெற்று, சிறப்புடன் சிவனுக்குப் பூசனைபுரிந்து பசிப்பிணியையும் மாற்றிப் பரமானந்தத்துடன் வாழ்ந்து வந்தார். அப்பால் பஞ்சகாலம் நீங்கியதும் செஞ்சடையார்க்கு மெய்யடிமைத் தொழில் பூண்டு வந்த பயனால் பொன்னுட்டில் அமரர் தொழப் புனிதரடி நிழற் சேர்ந்தார்

---

## 3–வது கதை. நீத்தார் பெருமை.

திருக்குறள்.
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

பரிமேலழகர் உரை —நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை நிலவுலகத்தின்கண் அவர் ஆணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டிவிடும்.

குறிப்பு —நிறைமொழி என்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி. முனிவரது சாப அனுக்கிரகங்களைக் கடவுளரும் தடுக்கும் வன்மையுடையரல்லர். இத்தகைய முனிவரது பெருமையை அவர் கூறிய மந்திரங்களே பயனால் பிரத்தியக்ஷமாக உணர்த்தும்.

உதாரணம்.—உலகத்துள்ள பல வகுப்பினரது ஒழுக்க வழக்கங்களை முற்காலத்தில் ஒழுங்குபடுத்தி யாவரும் இன்னின்னபடி நடத்தல் வேண்டுமெனத் திட்டம் பண்ணிய புண்ணியவான் மனுவென்பார். இவரியற்றிய சட்டதிட்டம் இக்காலத்தும் மனுதரும சாஸ்திரம் என்ப பலலோராலும் புகழ்பெற்றுவருவதை நம் நேயர் அனைவரும் நன்கறிவர். இம்மஹான் ஆதித்தன் குலத்திற்கோர் திலகம்போல விளங்கிய முதல்வர். இவரது சந்ததியில் தோன்றி உலகனைத்தையும் ஒரு குடையின் கீழ்ப்படுத்தி மன்னுயிரைத் தன்னுயிர் போலப் பாவித்து ஆண்டுவந்தான் அம்பரீஷன் என்னுமோர் அரசன். இவ்வேந்தன் வசிஷ்டாதி முனிவர்களது பேருதவியைக்கொண்டு அரிய பெரிய வேள்விகள் பல புரிந்து பெரும் புகழ் பெற்றிருந்தான். ஒருகால் இப்பார்த்திபன் புருஷமேதம் செய்யக்கருதி யாகத்திற்கோர் பசுவாம் மைந்தனைப்பெற, பாரெங்குந் திரிந்து வந்தான். எனினும் யாகபசுவாக மைந்தனை மனமொப்பிக் கொடுப்பார் யாவர்? ஏராளமான பொருள் தருவதாகச் சொல்லியும் எவரும் இசைந்தாரில்லை. ஆகவே மன்னவன் அடவிகள் தோறும் சென்று விசாரித்து வருகையில் கடைசியாக இருசிகன் என்னுந் தவசியின் சாலையடைந்தான். அம்முனிவருக்கு மக்கள் மூவர். அவ்விடம் தன் எண்ணத்தை யறிவித்தான் இறைவன். இ

பொழுது முனிபுங்கவர் மிக்க வறுமையால் வாடியிருந்தார். கொடிது கொடிது வறுமை கொடிது ஆதலின் தவசியும் பணத்தின் மேலாசைகொண்டு தன் அருமைப் புதல்வனைக் கொடுக்க மனமிசைந்தார் என்றாலும், மூத்த குமாரன் மீது மிக்க வாஞ்சைகொண்டு முன்னவன் எனக்கு வேண்டுமென்றார். முனிவர் தம் பத்தினியோ இளையவன் எனக்கு என்றனள். மற்றையவனாகிய சுனச்சேபன் பெற்றோரது பிரியமின்மையைக் கண்டு பெரிதும் நகைத்து "என்றைக்காயினும் ஓர் நாள் எவரும் இறத்தல் வேண்டும். இதுகாலை யான் உயிருடனிருந்தும் பயன் என்ன? தாய் தந்தையர் எண்ணியபடியே இப்பொழுது இறைவனுக்கு யாகப் பசுவாக மனமொருமித்துப் போதலேமேல். ஏனெனில், எனக்கு விலையாக மன்னவன் அளிக்கும் தனத்தைக் கொண்டு என்னைப் பின்னோர் இன்பமுடன் வாழ்வர். ஈன்று வளர்த்த தாய் தந்தைக்கு எவரே கைம்மாறு இயற்றுவார்? ஆன்றமதலை நூறு வயதளவும் அடிமைத்திறம் பூண்டு, மூன்று புவனத்துள்ள பொருள்முற்றும் அளித்து முறை முறையே, என்று வழிபாடு இயற்றிடினும் ஒரு நாள் வளர்த்ததற்கு இயையாதே! என்றிருத்தலினால் இச்சமயம் யான் என் அன்னைபிதா இவர்களை அடிமை கொண்டிருக்கும் வறுமைப்பிணியைத் தொலைக்க என் உயிரைக் கொடுத்தல் சாலச்சிறப்பாகும் அன்றியும் "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை, என் நோற்றான்கொல்" என்னுஞ்சொல் என்ற மொழியின் வண்ணம் புகழ் பெறுவதே பொருந்தும்" எனத் தீர்மானித்து, தரணிபாலனை நோக்கி "வேந்தே! என்னை யீந்து வளர்த்த தந்தையின் தரித்திரம் பறந்தோடும் வண்ணம் வேண்டிய அளவு திரவியத்தைக் கொடுப்பாய்" எனப் புகன்று

பிதாவின் பாதங்களில் வீழ்ந்து "தந்தாய்! போய் வருகிறேன். தயைசெய்து ஆசி கூறி விடையளித்தல் வேண்டும்" மெனப் பணிந்து நின்றான். உடனே வேந்தன் தவசிக்கு ஏராளமான பொருளுதவ, சுனச்சேபன் கொஞ்சமேனும் மனம் வருந்தாது தாய் தந்தையரது ஆசீர்வாதத்தையுடன் கொண்டு மன்னவனுடன் தேர்மீது சென்றான். வரும் வழியில் கதிரவன் உச்சிப்பொழுதடைய வேந்தன் நித்திய கருமம் புரிய ஓர் தடாகத்தில் தங்கினன். பெற்றதெல்லாம் பிள்ளையாமா? நட்டதெல்லாம் பயிராமா என்னும் பழமொழியை விளக்க வந்த மைந்தனும் நியமஞ்செய்யும் பொருட்டுச் செல்லுகையில் தன் மாமனாகிய விசுவாமித்திர முனிவரைக் கண்டனன். கண்டதும் அவர் அடியிணைகளில் வீழ்ந்திறைஞ்ச இருஷி சிரேஷ்டர் தன் மருமகனை இனிமையுடன் நோக்கி "குழந்தாய்! நீ இங்கு வரக் காரணமென்ன" என்றதும் நடந்த வரலாற்றை வெளியிட்டான் சுனச்சேபன். அதைக்கேட்ட முனிவர் பிரானும் மைந்தனைக் கருணையுடன் பார்த்தருளி "பிள்ளாய்! எள்ளளவும் கலங்கவேண்டாம். நின்னுயிர்போகாமல் தப்புவது எனக்கு ஒரு பெரிதல்ல" என்று கூறி முன்னர் வசிஷ்டரது கோபக் கனலில் மடியாத தன் புதல்வர் நால்வரையும் நோக்கி "நீங்கள் இவ்வேந்தனுடன் செல்க" என்றதும் அப்புதல்வர் முனிவரது பணியை அலட்சியஞ் செய்தனர். முன்னர் தன் சொல்லை யிகழ்ந்த விண்ணோர் மீது வெகுண்டு அவர்களது பெரும்பதவிகளையும் வான உலகம் முழுவதையும் படைப்பேன் எனச் சிந்தித்த காலையில் இந்திரன் முதல் மும்மூர்த்திகளும் பட்ட பாட்டில் இவர்கள் எந்த மூலை? எனவே விசுவாமித்திரர் மிக்க சினங்கொண்டு "தந்தை மொழியைத் தட்டிய நீங்கள் எல்லோரும் வேடர்

ராகிக் காடுதோறும் அலைந்து திரிக" என்றிட்டார் சாபம். அவ்வாறே புத்திரர் நால்வரும் வனசரர் ஆயினர்.

இது நிறை மொழிக்கு ஓர் உதாரணமன்றோ? பின்னர் பெருந்தவத்தோனாகிய கௌசிகமுனி தன் முன்னவள் குமாரனான சுனச்சேபனை விளித்து இரண்டு மந்திரங்களை யுபதேசித்து "நீ பயமில்லாது பார்த்திபனோடேகி, உன்னை யூபத்து (யாகப்பசுவைக் கட்டுந்தறி) அணைக்கும்பொழுது றுக்கொடுத்த இரண்டு மறை மொழியையும் உச்சரி. உச்சரித்த மாத்திரத்தில் பிரமன், ஹரி, ஹரன், மூவரும் தோன்றுவர் மன்னனது வேள்வியும் இனிது நிறைவேறும். உன் உயிர்க்கும் யாதொரு தீங்கு நேரிடாது" என வியம்பிச் சென்றனர். சிறுவனும் இறைவனுடன் தலைநகரடைந்து தன்னை யாகசாலையில் யூபத்து அணைத்த காலையில் மறைமுனி உரைத்த வண்ணம் மந்திரமொழிகளை உச்சரித்தான் மந்திரமும், தேவும், மருந்தும், குருவருளும், தந்திரமும், ஞானந்தருவார் தமையும், யந்திரமும், மேதினியில் மெய்யென்னில் மெய்யாய் விளங்கு மென்பது திண்ணம். என்னவே திருமால், பிரமன், உருத்திரன், ஆகிய முதல்வர் மூவரும் தேவர் சூழச் சிறுவனது உயிரையும் காத்து அரசனது வேள்வியையும் காத்தனர்.

---

## 4-வது கதை. அறன்வலி யுறுத்தல்.

திருக்குறள். அன்றறிவாமென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை

பரிமேலழகர் உரை :—யாம் இது பொழுது இளையமாகலின் இறக்குஞான்று செய்துமெனக் கருதாது, அறத்தினை நாடோறுஞ் செய்க; அவ்வாறு செய்த

அறம் இவ்வுடம்பினின்று உயிர் போங்காலத்து அதற்கு அழிவில்லாத துணையாம்.

குறிப்பு.—மரங்களில் முற்றியிருந்த கனியிருக்கச் சுழல்காற்றால் காய்களும், பிஞ்சுகளும் உதிர்ந்து விடுகின்றன. அதுவேபோல விருத்தர் பலர் உயிருடனிருக்க, வாலிபர் பலர் இறந்து படுகின்றனர். ஆதலினால் நாம் இச்சமயம் இளமையுடனிருக்கின்றோம். கிழத்தனம் வந்த பிறகே சாவு நேரிடும் எனவெண்ணியிருத்தல் கூடாது. இளமையிலேயே தர்மத்தைச் செய்தல் அவசியம். அவ்விதம் சிறு வயதுமுதல் தானதர்மம் செய்பவரின் உயிர் உடலை விட்டு ஓடுங்காலத்தில் அவ்வறம் அழியாது அவ்வுயிருடனே சென்று மறு பிறப்பில் நன்மை பயக்கும்.

உதாரணம்:—பொன் விளையும் பூமியெனப் பலரும் புகழ்ந்தேத்தும் நன்னாடாம் இந்திய நாட்டின் வடபாரிசத்தில் அற்புதமெனனும் பெயரையுடைய பர்வதம் ஒன்றுளது. அம்மலையின் ஓர் புறத்தில் வசித்துவந்தான் ஆருகன் என்னுமோர் வேடன் அவன் மனைவியின்பெயர் ஆருகி. இவர்களிருவரும் கேவலம் வேடுவர் குலத்தில் தோன்றியிருந்தும் "அரிது அரிது மானிடராதலரிது, புன்னுனிமேல் நீர்போல் நிலையாது மின்போலழியுமுடல். மேலும் இச்சரீரம் இன்றழியும் அல்லது வெகுநாள் சென்று கழியும் என்றெண்ணியிருக்க இடமில்லை. அன்றியும் இன்னார் இன்னகாலத்தில் இறப்பர் என்று ஓர் நியதியுமில்லை. ஏனெனில் கொடுந்தொழிலாளனாகிய கூற்றுவன், தவத்துறை மாக்கள், மிக்க பெருஞ்செல்வர், ஏற்றிளம் பெண்டிர், ஆற்றுப் பாலகர், முதியோர், இளையோர் என்றுன்னது எவரையுங் கொன்று குவித்து வருகின்றான். மாலையில் மஞ்சத்தில் படுத்தயர்ந்தவன் காலையில் கண்விழித்

தெழுந்திருப்பது நிச்சயமன்று. ஆதலின் அனைவரும் செய்தற்கரிய அறங்கள் பல செய்து, துயர்கூர் பிறவியினின்று உய்யும் வகை தேடவேண்டும்" என்ற ஆன்றோர் அமுத மொழிகளை நன்கறிந்து இளமைப்பருவம் முதற்கொண்டு அவ்வற்புதமென்னும் மலையின்சாரலிலிருக்கும் ஆலயத்துள்ள ஈசனுக்கு வந்தனை வழிபாடுகள் செய்வதை நியமமாகக் கொண்டனர். அதுவுமன்றி அவ்வழியே செல்லும் பாட்டைசாரிகளுக்குத் தங்களாலியன்றவரையில் செல்லும் வாயெல்லாம் (திரிகரணங்களாலும்) தக்க உதவி புரிந்துவந்தனர். முடிவாகக் கூறுமிடத்து, "வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைகோலி வையாதார் பெருகுதற்கண் என் செய்வார்' என்றிருந்ததனால், தாங்கள் இறந்துபடுவதன் முன்னமே, போகும் வழிக்கு நல்லவழி தேடியிருந்தார். இங்ஙனஞ் செய்யாது வாழும் மக்களிற்சிறந்த மடவோருமுண்டோ? ஒருநாள் மாலைப்பொழுதில் சடைமுடியையுடைய யோகியொருவர் அவ்வழியே வந்து, ஆலயத்தைக்கண்டு சிறிது நின்றனர். அக்காலை கோயிலின் புறத்தேநின்ற ஆருகி பெரியவர் வரவைக்கண்டதும், அவரிடம் வந்து அஷ்டாங்க தெண்டனிட்டு "ஐயா! தாங்கள் எங்குச்செல்ல வேண்டியதோ! அதனை யறியேனாயினும் இது சமயம் மிகவும் இருட்டிவிட்டது. ஆதலின் இன்றிரவை இங்கேயே கழிக்கலாம்" என்று உபசார வார்த்தைகளை மரியாதையுடன் சொல்லி வேண்டினள். ஜடாதரனோ மடந்தையருடன் பேசக் கூடாதென்ற முறைமையைக் கருதி ஆருகியுடன் பேசாது மௌனமா யிருந்தனர். அச்சமயம் ஆலயத்தினின்று வெளியே வந்தவேடன் அத்தவயோகியைக் கண்டதும் பரமானந்தமடைந்து, அவருடைய சீரடிகளில் வீழ்ந்திறைஞ்சி, 'தேவரீர் எங்கு ஏக

வேணடியவா? இதுபொழுது சுவாமிகளுககு வேண
டுவது யாது?" எனறு பலவாறு நலவாாததை கூற
நினறான. ஒருவருககு வேணடியதொருபொருளைக
கொடுததலினும முகமலாநது இனசொல இயமப
மிகக நலமனறோ? ஆதலின பிராணிகளை வதமபண
ணும வேடா.குலததில உறபவிததும கிராதகனிடததுக
காணபபடும அனபுடைமைககுப பெருமகிழசசி கொணடு
"அபபனே! யான தீாதத யாததிரை செயகினறேன.
இவவிரவு கழிககுமாறு படுததறகு இடம வேணடும, என
ககுவேணடியது மறறொனறுமிலலை" எனறாா. அபபொ
வா அககணமே ஆருகன அததவசிகளைத தன குடிசைக
ககு அழைததுககொணடு போய, தேனும தினைமாவும
கொணாநது மகிழவுடன அளிததான. உடனே அருநத
வததோன வனசரனை நோககி, "அபபா! முபபோது உண
பான நோகி, இருபோதுணபான போகி, ஒருபோதுணபான
யோகியே! எனற முதுமொழியையும மறநதனையோ? ஒ
தன குடிலையடைநதாாககு வேணடிய உபசாரஙகள புரி
யும பொருட்டு, தேவாமிருநதினுமினிய தேனும தினைமா
வும கொணடு வநதனைபோலும! நீ எனககிநத உணவை
அருநதிவதன முனனமே உன அனபு எனனைத திருபதி
செயவிததது. ஆதலின நீ தநத ஆகாரததைத நான
விருமபுவதறகு இடமிலலை" என இனிமையுடன புகன
றதும, வேடன தவசியைக குடிசையில சயனிககசசொலலி
இலலாளை நோககி "நாமிருவரும புறததே நினறு காட
மிருகஙகளால முனிவருககு யாதொரு தீஙகும நேரிடா
காததிருபபோம" எனறான. அமமூவரும படுததயரப
போதுமான விசாலமுளளதலல அககுடிசை. இருவா
இருகக இடமுளளது. யோகியோ "பெண பிளளையை

இராபபொழுதில வெளியே யிருததுதல தாமமன்று" என
லும, ஆததன தனமனைவியை அககுடிசையில தூஙகச
செயது, துஷடபபிராணிகளால இருவருககும எவவித
இடையூறும நேராவணணம வில அமபு முதலிய ஆயுதங
களுடன வெளியே நினறு விழிததிருநதான. அககுடிசை
யிலுள ஆததி நிததிரையிலும யோகி யோகததிலும இரு
நதனரெனறு சொலலவும வேணடுமோ? அறிவிற சிறநத
ஆனறோர அடாது செயவரோ? செயயார! செயயார! நளளி
ரவில பெருமபுலி யொனறு வநது ஆததனை ஆசையுடன
பக்ஷிததுச சென்றது. அநதோ! பாவம! நனமைசெயதா
ாககுத தீமையும விளையுமோ? எலலாம ஈசன செயல!
சூரியனுதிததவுடன யோகி, ஆததன புலிககிரை யானதை
அஙகுச சிநதிககிடநத சினனஙகளால உணரநது, தனககு
உளளே இடமகொடுதத காரணததால மாணடதை நினை
தது நினைககும பொழுதெலலாம பரிதாபபடுகையில, ஆததி
வநது "ஐயனே! வருமவிதி வழியில தஙகுமா? விதி
யின பயனை எணணாமல இறநதனெனனிலும, ஒபபறற
அநதணனுககு உதவி செயதற பொருட்டு ஆவி துறநத
என பாததா நறகதி செனறு சேரவா எனபதறகு ஐயமு
ணடோ" எனறு தவசியைச சமாதானபபடுததி, அவித
துணைவனைன தன கணவனுடன தானும நறபதவி யடை
தல வேணடுமெனப பெருமகிழவுடன தீககுளிகக யதத
னிததாள. தன புருஷன இறபபதறகு யோகி காரண
பூதமாயிருநத போதிலும எளளளவும இருஷியின மீது
சலிததுககொளளாது அவள மனமகிழவுணணம பதில
ளிததகை ஆழநது யோகியபின, மறறைய பெணகளுடன
இவளையும ஒரு பெணணெனறு சேரக கொணணுவதா?
பெணகளுககெலலாம கணணெனத தகும பெணமணி

யன்றோ இவள்? சில பெண்கள் புண் எனப் பெயர் எடுக்கின்றனரே. பரிதாபம்! பரிதாபம்! ஆகுகியின் கலங்கா நிலைமையையும் அறிவையுங் கண்டுகளித்த ஈசன் பிரத்தியக்ஷமாய்ப் "பெண்ணே! நீயும் நின் கணவனும் செய்து வந்த நல்வினைப்பயனால் அடுத்த சன்மத்தில் நீ விதர்ப்ப தேசத்தரசன் குமாரி தமயந்தியாய்த் தோன்றுவை. உன் கணவன் நிஷத தேசத்து ராஜகுமாரன் நளனாகப் பிறந்து இப்பேருலக முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளுவான்! இதோ நிற்கும் யோக புருஷன் இப்பிறவியில் உங்கள் கூட்டுறவைப் பிரித்த நிமித்தத்தால் அடுத்த பிறப்பில் அன்னப் பறவையாய் வந்து உங்களிருவருக்கும் தூது நடத்தி மணவினையை முடித்து வைப்பான், அப்பால் உங்கட்கு வேறு பிறவி யில்லை நிச்சயமாய் முத்தி பெறுவீர்" என்று திருவாய் மலர்ந் தருளிமறைந்தனர். ஆகுகியும் அடங்கா மகிழ்ந்து அக்கினிப் பிரவேசஞ் செய்தனள். பின்னர் நம்பெருமானருளிய படியே மூவரும் முறையே நளன், தமயந்தி அன்னமாகத் தோன்றி அளவிலா ஆனந்தத்துடன் வாழ்ந்தனர்.

## 5-வது கதை. இல் வாழ்க்கை.

திருக்குறள். பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

பரிமேலழகர் உரை:—பொருளைச் செய்யுங்கால் பாவத்திற்கு அஞ்சி ஈட்டி, அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினோர்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்து, தான் உண்டலை ஒருவன் இல்வாழ்க்கை உடைத்தாயின், அவன் வழி உலகத்து எஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தலில்லை.

குறிப்பு —பாவத்தான் வந்த பொருளைப் பகுத்துண்ணின், அறம் அப்பொருளுக்கு உடையவன் மேலும், பாவம் தன்மேலுமாய் நின்று சந்ததி குறையுமாகலின், அனைவரும் அறநெறியிலேயே பொருளைத்தேடி அதனை மேற்கண்டபடி பகுத்துண்ணின் அவன் சந்ததி விருத்தியாகும்.

உதாரணம்:—பொன்னாட்டினும் பொலிவுடன் விளங்கிய மகத நாடு நம் பரதகண்டத்தின் வடபாகத்திலுள்ளது. அந்நாட்டின் திலகம்போல விளங்கி வந்தது புஷ்பபுரியென்னுமொரு பட்டினம். அந்நகரின்கண் அருமறையோர் நற்குலத்தில் அவதரித்திருந்தார் சுந்தர சாமா என்பவர். அவர் இளமையிலேயே அந்தணர்க்குரிய சகல கலைகளையும் தக்க ஆசிரியனையடைந்து கற்று கல்விக் கடலைக் கரை கண்டவர் என யாவராலும் நன்கு மதிக்கப் பெற்றிருந்தார். அன்பு, அருள், அடக்கம், வாய்மை பொறுமை என்னுங் குணங்களைப் பூஷணமாகக் கொண்டவர். இத்துணை ஏற்றமிருந்தும் அனைவருங் கண்டு பரிதபிக்கும் வண்ணம் தாரித்திரம் என்ற மூதாட்டி தனக்கு இருப்பிடமாகக் கொண்டனள் அம்மறைவலோனை. "பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்து, அல்லலுழப்ப தறிதிரேல்—தொல்சிறப்பின், நாவின் கிழத்தியுறைதலாற் சேராளே, பூவின் கிழத்தி புலந்து" என்னும் பண்டைமொழி பொய்க்காதன்றோ? அவ்வேதியப்பிரான் வறுமையால் பீடிக்கப்பட்டும் 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' யாதலின், தக்க பருவத்தில் ஓர் பெண்மணியை நாடி மணந்தனர். இனி இல்லறத்தைச் செவ்வனே நடத்தத் தனம் வேண்டியதைக் கருதி, அந்நகரிலுள்ள பார்ப்பனச் சிறார்க்கு வேதமோதுவித்தலை ஜீவனோபாயமாகக்கொண்டு, அதிற் கிடைத்த தனத்தை அனந்தமெனப் பாவித்து, இல

வாழவான அவசியம செயயவேணடிய தொழிலாம இயல
புடைய மூவாககும நலலுறவியனற உதவிபுரிநது, தென
புலததார, தெயவம, விருநது, ஒககல (சுறறததார) எனற
நானகிடததும நடககவேணடிய அறநெறியையும இய
றறி, எஞசியதைக கொணடு சுகமே வாழநது வநதார.
காலககிரமததில அழகே வடிவெடுததாற போனற புததிர
னொருவனை யடைநது, அவனுககு நடராஜ சாமா
வெனும நாமஞசூட்டி, நாளொரு மேனியும பொழுதொரு
வணணமுமாய வளாததது வருகையில, புதலவன விததை
யில தனனை மிஞசி விடுவான எனபதறகேறற அறிகுறி
களைக கணடு, அகமகிழநதிருநதனா. புலிககுப பிறநதது
பூனையாயப போகுமோ? ஒருநாள ஆசார சீலராகிய
அதிதியொருவா, [illegible]
தனா நாளைத தாமோதரப பூசனைபுரிய வநதார,
அனறு பூஜைககு [illegible], பாலகனை விளி
தது அபிஷேகததிறகுப பாலவேணடும மநதைக
குச சென்றுபோயி இனனும திருமபி வரவிலலை யெனறனள
அநநஙகை உடனே அநதணர திலகர தனனருமைப
புதலவனை நோககி, "குழநதாய! காலையில மேயசசெனற
பசு இதுவரை வீடுவநது சேரவிலலை. ஆதலின சீககிரமே
சென்று அதனைப்பாரததுவா" எனறனா. பையனும கடுகி
நடநது பசுவைததேடி ஓட்டிவருகையில வழியின இரு
மருஙகிலும நிறைநதிருககும பசுமபுறகளைக கணணுறறு,
ஆவின கனறுககு அளிககததகும புறகளை உணண அத
னைச சேகரிததிருககான எதிரபாராமலிருகக விருநதிறகு
வநதிருநத அதிதி, குழநதை சாமாவின பகதி சிரததையைப
பாரததுப பாரதது ஆனநதிதத திருககையில திடீரெனக
கவுளியின சொலலொனறைககேட்டு "ஐயோ! என செய

வேன்? தம் பொருளென்ப தம்மக்கள் என்றபடி இவ்
வந்தணனுக்குச் சிறந்த செல்வமாக உள்ளது ஒரேயொரு
குழந்தை, அப்பையல் சிறிது பொழுதிற்கெல்லாம் ஒரு
நாகத்தால் ஆவிதுறப்பான் எனத்தோன்றுகிறதே! அகா
லத்தில் தன் புதல்வனையிழந்து பரதவிக்கும் வண்ணம் இவ்
வேதியனிடம் யாதொரு அக்கிருத்தியத்தையும் காணேமே
ஆயினும், அந்தணன் அதிசீக்கிரமே புத்திர சோகத்தால்
பிரலாபிக்க நேரிடுதல் நிச்சயம் இதுவும் முன்வினையின்
பயனோ? தெய்வமே!" என்றேங்கியிருந்தனர். சங்
கோஷ சாதாரமாயிருப்பின் எவருந்தம் சொல்ல மனங்
கூசாது இந்தச் சம்பவத்தை வெளியிட எங்ஙனம்
துணிவார்கள்? ஆதலின் வாளாவிருந்தார் என்றே
சொல்லவேண்டும். பிராமண வாலிபன் ஆசையுடன் இளம்
புல்லைப் பிடுங்குகையில் தவறி அருகேயிருந்த துளசிச்
செடியைப் பறித்துவிட்டான். தான் பிடுங்கியது துளப
மெனத் தெரிந்ததும், அறியாமற் செய்த பாபத்திற்கு மெத்
தவும் பயந்து, இனி வருந்திப் பயனில்லையெனத் தோன்று
பூஜாத் திரவியமாக அத்துளபத்தை உபயோகித்தல் உயர்
வுடைத்தாமென உன்னி, முன்னர் தான் சேர்த்து வைத்த
புல்லுடன் வீடு நோக்கித் திரும்பினன். துளசிச்செடியைப்
பிடுங்கிய அக்கணமே காலதூதன் பாலன் ஆயுளைக் கவர
வேண்டி, கருநாகக் குட்டியினுருவமாயிருந்தனன். என
ருலும் நடராஜன் துளசியைப் பூஜைக்காக எடுத்துச்
செல்வதைக் கவனித்து, வீடு சேர்ந்ததும் தீண்டுவோ
மென்று அச்செடியிலேயே மறைந்தது கருநாகம். ஒவ்
வொருவரும் உயிர் துறக்கும்பொழுது பாம்பு கடித்திறந்
தான், சுரத்தால் மாண்டான், பிளவைதோன்றி ஆயுள்
முடிந்தான் என்று பலவாறான காரணங்கள் ஏற்படுகின்றன.

ஆகவே, அனைவர் உயிரையுங் கவர்ந்து செல்லும தென்றி சைத் தலைவன், ஏதேனுமொரு வியாஜத்தைக்கொண்டு உயிர்பருகி வருகின்றான் என மது நம்முன்னோர் கொள்கை நிற்க, ஈசனுக்கு வந்தனை வழிபாடு இயற்றியிருக்கும் சுந் தரருக்கும் பூஜை நடுவே சிற்சில அபசகுனங்கள் தென் பட்டன. அதனை யாழ்ந்தறிந்த சாமர் ஏதோ மகத்தான துக்கம் சம்பவிக்கும் என்றுணர்ந்தும், "எல்லாம் வல்ல இறைவனுள்ளன், நமக்கேன் கவலை? வருவது வந்தே தீரும்" என ஒருவாறு தன் மனத்தையடக்கி மைந்தன் வருகையை நோக்கி யிருந்தார் நடராஜன் புலவர்களுடன் இல்ல மடைந்தான். உள்ளே நுழைந்ததும், சிறுவன் எப்பொழுது சுமையைக் கீழே வீழ்த்துவான் என்று கருநாகம் தன் தலையைத் தூக்கி நாவை நீட்டிக்கொண்டிருந்தது அதனையுற்று நோக்கிய வேதிய அதிதி 'கோ' வென்றலறினார். இவ்வழுகுரலைக் கேட்ட சுந்தரரும் அவர் மனைவியும் 'விருந்தினர்க்கு யாது கேடு விளைந்ததோ' வென ஓடி வந்தனர் தன்னைக்கண்டதும் பேரிரைச்சலிட்டழும் அதிதியைக்கண்டு பிரமித்து நின்றான் நடராஜனும் அதிதியின் அழுகையை ஆற்றமுயன்ற சுந்தரர் சிகிச்சையெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போலாயினவேயன்றி வேறில்லை. ஓயாது கதறும் புதிய வந்தணனது குரலைக்கேட்ட அக்கம் பக்கத்தார் பலரும் பரபரப்புடன் வந்து கும்பு கூடினர் அதிதியின் அழுகைக்குக் காரணம் யாதென அறியமுடியாத அனைவரும் ஒருவர் முகத்தை யொருவர்பார்த்து இன்ன செய்வதென்று தோன்றாது தியங்கி நின்றனர். அக்காலை அங்குள்ளார் கண்டுதிசைக்கும் வண்ணம் கருநாகம் சிறுவன் சிரசினின்றும் சரேலென உடல் வழியாய்க் கீழிறங்கி விரைந்தோடியது. அப்பொழுதுதான் அதிதியின்

ஏழைக்கு ஆதாரத்தை ஊகித்தறியலானர் பலரும். உடனே "சுந்தர! நினது மகன் ஆவி இன்றோடு முடிந்திருக்க வேண்டும். ஆயினும் நீ இதுவரை பாவவழியில் பொருள் தேடாது பார்ப்பனச்சிறார்க்கு மறையோதுவித்தலின்று கிடைத்த ஊதியத்தைக்கொண்டு, இல்வாழ்க்கையை எள்ளளவும் குறைவின்றி விதிப்படி நடத்திவந்தாயாதலின் உன்னருமைப் புதல்வன் உயிர் பிழைத்தான். இனி உன் சந்ததியார் எக்காலத்தும் அழிவின்றி நெடுங்காலம் நலத்துடன் வாழ்ந்து வருவர்" என்றோர் அசரீரி அந்தரத்தினின்றுங் கிளம்பியது. கவுளியின் சொல்லால் நடராஜனுக்கு நேரிடும் தீங்கினைக்குறித்து ஏங்கியிருந்ததையும், பின்னர் மைந்தன் முடிமீது நாகத்தைக் கண்டு புலம்பியதையுங் கூறினர் அதிதி. இதனைக் கேட்டறிந்த அங்குள்ள பலரும் சுந்தரசர்மாவின் இல்வாழ்க்கைத் திறத்திற்கு வியந்தும், அதிதியின் பரிதாபத்திற்குப் புகழ்ந்தும், நடராஜனது புத்திகூர்மைக்கு உளங்களிகூர்ந்தும் பரமனது கருணைத்திறத்திற்கு ஆனந்தித்தும் தங்கள் தங்கள் அகத்திற்கு ஏகினர். அப்பால், சுந்தரசர்மா குறையுடனிருந்த ஈசனது பூசனையை நிறைவேற்றி அதிதிக்கு அறுசுவையுண்டி யளித்து, தானும் உண்டு எந்நாளும் இல்லறத்தை இனிது நடத்திச் சுகமே வாழ்ந்து வந்தார்.

---

## 6-வது கதை. வாழ்க்கைத்துணை நலம்.

திருக்குறள்: தெய்வந்தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யு மழை.

பரிமேலழகர் உரை:—பிறதெய்வந் தொழாது தன் கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்.

குறிப்பு:—தன் கணவனே தெய்வமெனக் கொண்டு அவனது பணிவிடைகளிற் குறையா திருந்து வரும் பெண் மணிக்குத் தெய்வமும் ஏவல் செய்யும்.

உதாரணம்:—பூவுலகில் பலவாயிர மாண்டுகளுக்கு முன்னர் மௌத்கல்யன் என்னுமோர் முனிவர் இருந்தனர். அவரது அருமைப் பத்தினி நாளாயணி என்பாள். அந் நங்கை தன் கணவனைக் கைகண்ட தெய்வ மெனப் பாவித் தது அப்பதிக்குப் பணிவிடை புரிதலே ஈசனுக்குப் புரியும் பூசனை யெனக் கொண்டு அனவரதமும் கண்கேள்வன் மனமகிழும் வண்ணம் நடந்து வந்தனளே யன்றி இக்கா லத்து நாரியர்கள் சிலரைப் போலக் கோவிலென்றும் குள மென்றும், தேரென்றும், திருவிழா வென்றும் கண்டபடி மனம் போன போக்கெல்லாம் போகாது கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி என்னும் முதுமொழிக்கோர் அத்தாட்சியாய் விளங்கி வந்தனள். இவ்வாறு நாடும் ஊரும் நனி புகழ்ந்தேத்த ஒழுகி வரும் மங்கையர்க்கரசி யின் கற்பின் உறுதியையும், அன்பின் நிலையையும் சோதிக் கக் கருதிய முனிவர் பிரான், மிகுந்த குஷ்ட நோயும் அது காரணமாகச் சிதைந்த வடிவமும் மிக்க கிழத்தனமும் எந் நிமிஷமும் பெருங் கோபமும் உடலில் துர்க்கந்தமு முடை யவராகத் தன்னைக் காட்டி வந்தனர். இங்ஙனம் மௌத் கல்யர் பலவாறு கொடுமை செய்யவும் அத்தையல் தன் பர்த்தாவின் பக்கல் அன்பு சிறிதும் குறையாமல் பலவகைத் தான உபசாரங்களையும் வழுவாது இனிய முகத்துட னும் அன்பு நிறைந்த மனத்துடனும் இயற்றி வந்து முறைப் படி அவர் உண்டு மிகுந்த எச்சிலைத் தேவாமிருதமெனக் கருதி அதனையே உண்டு வாழ்ந்திருந்தனள். ஒரு நாள் வழக்கப்படி அவர் உண்ட கலத்தில் அவரது கைவிரலொ

ன்று அற்று விழுந்து கிடக்கக் கண்டு கிஞ்சித்தேனும் அரு
வருப்புக் கொண்டனளோ? இல்லை யில்லை! அவ்வுணவை
அறுசுவையுங் கலந்த உண்டி யென மதித்து உண்டனள்.
இம்மட்டோ அம்மாது தன் தொழுநோய்மாட்டுக் கொண்ட
அன்பு? மேலும் தன் புருஷன் மஞ்சமடைந்ததும் அவ
ரது அடி வருடல் முதலிய சைத்தியோபசாரங்கள் பல
வும் பண்ணி அவர் துயின்றபின் தான் துஞ்சி அவர் கண்
விழித் தெழுமுன்னரே யெழுந்து அவர் யாது பணிப்
பரோ என எதிர் பார்த்திருப்பாள். "கொண்ட கணவன்
குரூபியேயானாலும், பண்டுதான் செய்தபலன் எனவே
கண்டு கொண்டு, குற்றமென எண்ணி மனங்கோணாது
அவன் பணியைப் பற்றி மிகச் செய்வாள் பரிந்து" என்ற
தனிப்பாட்டுக்குத் தானே நிகராயிருந்தனள். இங்ஙனம்
கற்புடைய மங்கையர்க் கெல்லாம் அணி போன்று விள
ங்கிய நாளாயணியின் மனவுறுதியை இனியும் பரீட்சித்த
றிய வேண்டுமென ஆவல்கொண்ட அருந்தவசி ஒருநாள்
தன் மனைவியை விளித்து "மாதே! வேண்டிய சிற்றின்
பத்தினை விலையின் பொருட்டு வழங்கிவரும் மடந்தையின்
வீட்டிற்கு என்னைத் தூக்கிச்செல்லவேண்டும்" மென விரு
ம்ப, அவ்வாறே அப்பெண்மணி தன்கணவனை ஓர் கூடையி
லிட்டுத் தலையின் மீது சுமந்து சென்று திரும்பிவரும்வழி
யில், சிறு பிள்ளையாயிருக்குங்கால் பொன் வண்டின்
உடலநடுவே சிறிய குச்சி யொன்றைச் செருகிய வினையின்
பயனால், திருடர்களுக்கு உடந்தையாயிருந்தன ரென்று
குற்றஞ் சாட்டப்பட்டுக் கழுவி லேற்றப்பட் டிருந்ததனால்
மிகுந்த தொல்லையுடனிருந்த மாண்டவிய ரென்னும்
மஹரிஷியின் காலில் அக்கூடை தாக்க அதனால் கோபம்
மூண்ட மாண்டவியர் "பெண்ணே! முன்னமேயே கழு

முனையில் பாதவித்துக் கொண்டிருந்த என்னை இப்பொழுது நின் கூடையிலேதாக்கி பரமவாதனைப் படும்படி செய்தாயாதலின் பொழுது விடிந்ததும் நீ அமங்கலியாகக் கடவை" என்றிட்டார் சாபம். அக்கொடிய சாபத்தைச் செவியிலேற்ற நாளாயணி "அந்தோ! இறுகாதும கொண்டவனே கடவுளென எண்ணி அனவரதமும பணிவிடைகளில் குறையா திருக்கும எனக்கோ இச்சமபவம் நோவது! மிகக இருள்மூடி யிருந்ததனால மனமறியாது கூடை அவா காலிறபட்டது அதை நோக்காத அந்தணா மிகககொடிய சாபததை விதிததனா. என செயவேனெனப" பெரிதும வருநதி முடிவில "யான் இது வரையில் உததம பததினியா யிருபபது உணமையாயின் பொழுது விடியா திருககக கடவது" எனறு தானும சபித்து வீடு சேர்நதனள். எபபணியால காதலா இனபுறுவரோ அபபணியால காதலரை அககணமே யனைபுறுததி ஒப்ப மனங்குழையும வண்ணம மகிழவிககும பததினிப பெண்டிர் வாததை பொய்ககுமோ? வேதம பொயததாலும் நாதனருள பொய்ததாலும கறபுடைய மஙகையர் சொல பழுதுறு தாதலின நாளாயணியின கடடளைககஞ்சிய கதிரவனும தன கிரணஙகளைக காடடாது மறைநதனன் உடனே தேவா பலா ஒனறு கூடி சூரியனையடைநது ஏன உதயமாக விலலையெனறு வினவ, "என்னாலாவ தொனறுமில்லை. பதிவிரதா ரததினமாகிய நாளாயணியின கட்டளையை மறுக்க வலலே னல்லேன்" என்றுரைததான தினகரன. அககணமே சுரர்க ளனைவரும கறபுக்கணி கலத்தைக கிட்டி வேண்ட, அமமாது சிரோமணி "சூரியனுதயமாயின் நான் மாங்கலயம இழக்க வேண்டி வருமே" எனப் பதிலுரைத்ததும தேவதைகள மாண்டவியரை

யடைந்து அவர் சாபததை மாறறி, பின்னா ளாளாயணி யிட்ட சாபததை நிவர்த்தி செய்தனா. பின்னரே பொழு தும விடிநதது. உடனே தேவாகள் மௌத்கல்யமுனிவ ரது பததினியின் கறபினை திறததிறகு மெச்சி மனமார வாழ்த்திச சென்றனா பிறகு, மௌதகலயா தன்மனைவியின் கறபையும அனபையுங கண்டுகளிதது தன் விகார வடிவ ததைமாறறி அவளை யனபோடு கொண்டாடி "மினனே! உன கறபினுககு அருநததியும ஒவவாள, நீ என்பால் வேணடும வரம யாது?" எனறதும, "நினனேயம எக்கா லததும பிரியாதிருபபதே எனககுத தாஙகள அளிககும வரம" எனறனள. முனிவரும, அவவாறே யாகுக, என்று அருள சுரநதனா பினபு அவவிருவரும பூவும மணமும் போல பெருமையுடன வாழுநது வநதனா. அநநாளாய ணியே மறுபிறபபில பாணடவாது பததினியாய் விளங் கிய பாஞசாலி.

---

## 7-வது கதை. புதல்வரைப் பெறுதல்

திருக்குறள். மகனறந்தைக காறறு முதவி யிவன்றந்தை
எனனோறறான கொலலெனுஞ் சொல.

பரிமேலழகர் உரை:—கலவி யுடையவனுககிய தந்தை ககு, மகன் செய்யும கைமமாறுவது, தன அறிவும ஒழுக் கமுங கண்டாா இவன தநதை இவனைப பெறுவதறகு என்ன தவஞ செய்தான கொல்லோ என்று சொல்லுஞ் சொலலை நிகழ்த்துதல.

குறிப்பு:—பிதா நமமீது அனபு கொண்டு அருமபாடு பட்டு கல்வி கேள்விகளில் நமமை மேமபாடுடையவராகச் செய்கினறனர். அதற்குப் பிரதியாக நாம் அவருக்குச் செய்யவேண்டிய உபகாரம யாது? என்னையெனின்

நமது அறிவு, ஒழுக்கம், தந்தைக்குச் செய்யும் வழிபாடு இவைகளைக் கண்டார் அனைவரும் " இத்தகைய பிள்ளையை யடைதற்கு இவன் தந்தை என்ன தவஞ் செய்தனரோ " என்று கூறும் புகழினை நிலைநிறுத்தல் வேண்டும்.

உதாரணம் :—பூர்வம் சந்திரகுல மன்னர்களுக்கெல்லாம் திலகம்போல விளங்கிவந்து தன் வன்மையால் இப்பரத கண்ட முழுவதையும் தன்னடிப்படுத்தி மனுநீதி பிறழாது செங்கோல் செலுத்தி வந்தான் சந்தனு வென்பான். அவ வேந்தன் சிறிது காலம் தேவகன்னியாம் கங்கையை மனைவியாகப் பெற்று, அவளிடம் இன்பமெய்தி வந்தும் முன்னை வினையின் பயனால் அந்நங்கையைப் பிரிய நேர்ந்தது. ஆயினும் அம்மடந்தையிடமாக, தேவ விரதன் என்னுமோர் ஆண் மகவை யடைந்தான் அம்மதலை, மழுப்படையைத் தரித்த காரணத்தால் பரசுராமனென்னப் பெயர்பெற்ற பரமனையடைந்து படைக்கலப் பயிற்சி பெற்று ஆசானினிலும் மிக்க தேர்ச்சி பெற்றான். அஸ்திர சஸ்திரப் பயிற்சியில் அரசாசாரிய அறிவு, ஆண்மை, மெய்வலி, தீரம், வீரம் முதலியன ஒருங்கே அமையப் பெற்ற தன் மைந்தனை நோக்கி மனமகிழ்ந்தான் சந்தனுவும். பகைவர்களும் வந்து வணங்கி வலுவில் பகுதிப் பொருள் செலுத்தும் வண்ணம் அத்துணைப் பெருமிதத்துடன் தானும் தன் மகனுமாக வாழ்ந்துவரும் நன்னாளில் ஒரு நாள் மன்னவன் தன் புதல்வனுக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டி வேட்டையினிமித்தம் காடு சென்றான். அக்கானகத்து அலைந்து திரியும் துஷ்ட மிருகங்களைக் கொன்று குவித்த களைப்பினால் நீர்வேட்கைகொண்டு காளிந்தி நதிக்கரை சென்று நீர் பருகி, அவ்வாற்றின் கரையில் இடப்பெற்ற கூடாரத்தில் சிறிதுநேரம் அயர்ந்திருந்தான் சந்தனு. அக்காலை

மிருந்த பரிமள மொன்று ஒல்லெனப் பரப்ப, பார்த்திப னும் "இதுகாறும் நாம் இத்தகைய அரிய கந்தத்தை அனுபவித்தோமில்லை தெய்வத்தன்மைப் பொருந்திய வாசனை போலும் இது. இது எவ்விட மிருந்து வருவ தென்பதை யறிய, ஆவல்பூண்டு அந்நாற்றங் கமழுந்திசையே நோக்கிச் செல்லாநிற்க, ஒரு பெண்மணியைக் கண்டனன். கண்டதும் அக்காரிகையின்மீது காதல்கூர்ந்து. "பெண்ணே! யார் நீ? உன் பெற்றோர் யாவர்?" என்றனன் மையல்பூத்த மன்னவன் நாணமென்னும் பேரணியைக் கொண்ட அப்பெண்பால் உடனே தலை சாய்த்து "வேந்த கேள்! இத்துறையில் வருவோரைப் படகிலேற்றி அக்கரை சேர்க்கும் தொழில் பூண்டான் என் தந்தை" எனப் பணிவுடன் புகன்றனள். அச்சமயம் படவோட்டியும் இறைவன் பக்க மணுகி அடிமலர் பணிந்து நின்றனன். இனி அரசன் தன் உள்ளக்கருத்தைத் தோப்பாகனுக்குணர்த்த, அப்பாகனும் பார்த்திவர் பதியைக் கிட்டி "அவனியாளும் வேந்தன் நின்மகளை மணம்புரிய விரும்பினன். இது நின் பெருந்தவமோ! உன் குலத்தோர் புரிந்த தவமோ; அன்றேல் நின் புதல்வி செய்த தவமோ? அறியேன்." என்றுரைத்தவளவில், அப்படவோட்டி "ஐய! பூருவின் மரபிற் பிறந்த கோமகன், தாழ்குலத்தில் உற்பவித்த என்மகளை மனைவியாக இச்சித்தல் மேருவையும் அணுவையும் நிறுக்குமா றொக்கும்; என் குமாரியின் பாக்கியமே பாக்கியம். ஆயினும் நம் பார்த்திபனுக்குப் பகீரதியிடமாகத் தோன்றியதேவவிரதனுளன். அவ்வாசிளஞ் சிங்கத்திற்கே அரசுரிமை யுரித்தாகும்; என் மகள் பயக்கும் பிள்ளை யாது பேறு பெறக்கூடும் என்பதே என் யோசனை" எனப் பதிலளித்தான்.

இக்காலத்தில் பெற்றோர் சிலர் தங்கள் பெண்களுக்குப் புருஷன் என்று ஒருவன் கிடைத்தால் போதுமெனக் கருதி, வரன் குருடோ, செவிடோ, கிழமோ எனக் கிஞ்சித்தும் யோசியாதும், தம் மகளின் கதியையும் அவளுக்குத் தோன்றும் மைந்தர்களது விதியையும் எள்ளளவும் சிந்தியாமலும், பெண்ணிருக்கப் பெண்கொடுத்துப் பின்னர் அத்திக்கற்ற குழந்தைகள் 'ஐயோ! நந்தாய் தந்தையர் படுகுழியில் தள்ளுவது போல நம்மை இப்பாடுகளுக்கு உள்ளாக்கினரே" என்று வருந்தும் படி செய்கின்றனரே,! அந்தோ பெரிதும் பாவம்! இது பற்றியன்றோ, தன் கஷ்டம் சகித்தாலும் பெண் கஷ்டம் கண்டு சகிக்க முடியாது என்னும் பழமொழியும் வழங்கலாயிற்று!

பிறகு, படவு செலுத்துவோன் கூறிய மொழி மார்பிடையே வேல் பாய்ந்த புண்ணில் ஆழப்பெரும் புழையில் கனல் நுழைந்தாலெனச் சந்தனுவின் செவியிற் புகுதலும் ஒன்றுந் தோன்றாது உயிருண்டோ இல்லையோ என்னும் படி நாடடைந்தான் நரேந்திரன். கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரனைப்போல நாளுக்கு நாள் மனோவியாதியால் சந்தனுவுக்கு உண்டாகும் மேனி வாட்டத்தைக் கண்ணுற்ற தேவவிரதன் தன் தந்தையின் வாட்டத்தின் காரணத்தையறிய விரும்பி அடுத்தடுத்துத் தன் பிதாவை வினவியும், அவர் எதுவும் மொழியாது மௌனஞ் சாதித்திருந்தமை கண்டு கடைசியில் சாரதியின் மூலமாய்த் தன் பிதாவுக்கு நேர்ந்த சோகத்தை யறியலானன்.

கேட்டறிந்ததுதான் தாமதம். அக்கணமே கடற்புறத்தரசைக்கண்டு மிகுந்த ஆதரவுடன் அவனை நோக்கி "நீயே யெனக்குப் பாட்டன், என்னைப் பெற்றெடுத்தாள் பகீரதியல்லள், நின்மகளே எனதன்னை இன்றுமுதல், என்

தாயாம் நின் குமரிபால் தோன்றும் பிள்ளைகளே எனது தம்பியா என்னத்தடையுமுண்டோ? இக்கடல் சூழ்ந்த ஞாலமுழுவதும் என் தம்பியா ஞாலம்! இனி நீ நாடுவதென்? இந்நிமிஷமே நின்மகளை நிருபனுக்கு மணவினை நேர்வாய்" எனறியம்பி "இதோ இங்கு நிற்கும் மாந்தர் பலரும் தேவரனைவரும் நான் இதுபொழுது ஏற்கும் விரதத்தினை யறிவாராக! அஃது யாதெனில், என்னுயிர் எனதுடலைவிட்டு நீங்குமளவும் நான் மணவினையை இச்சியேன். அதுவுமன்றி இவ்வுலக வின்பத்தை இன்று முதல் வெறுத்தேன். இது சத்தியம்! சத்தியம்!! புத்திரப்பேறில்லார்தாம் நரகம் மெய்துவார் என மூதோர் சொல்லும் மொழி என்னிடம் பொய்த்துப் போகும்; ஏனெனில் யான் எந்தை பொருட்டு இவ்விரதம் மேற்கொண்டேதலின். நான் நரகத்திசென்று சேர்வேனென்பதற்கு ஈஷத்தேனும் ஐயமில்லை." எனறின்னதுஞ் சொன்னான்; யாவரும் செயற்கரிய சபதத்தைக் கூறிய தேவ விரதனை மனிதர் புகழ்ந்தேத்தினது ஒருபுற மிருக்க, தவ முனிவரும் தேவரும் மற்று முள்ளோரும் உவகையுடன் ஆசி கூறிப் பூமழை பொழிந்தனரென்றால் அவன் பூண்ட விரதத்தின் மேன்மையை எடுத்துச் சொல்ல நம்மாலாகுமோ? இக்காரணம் பற்றி அன்று பீஷ்மன் என்ற பெரும் பெயரும் பெற்றான். பின்னர் தெய்வீக மணங்கமழ்ந்த காரணத்தால் பரிமள கந்தியென நாமஞ்சூடிய கன்னியை, அவள் பிதாவுடன் பலர் சூழ அழைத்துச் சென்று தன் தாதையின் பக்கலில் நிறுத்தி, அவரது இருபாதமலரைத் தொழுது நின்றான். அக்காலை குருகுலக்குரிசிலாம் சந்தனுவுக் குண்டாயின அகமகிழ்ச்சிக்கோர் அளவில்லை. ஆதலின் தன்னருமைப் புதல்வனை மார்புறத்தழுவி உச்சிமோ

ந்து உள்ள முருகி "மாண்புள்ள மைந்த! மக்கட்பேற்றின் பெரும் பேறு முண்டோ? புதல்வர் தந்தையர்க்குச் செய்யும் உதவியின் எனக்குப் பலகோடி மடங்கு உதவினாய் நீ! பிதா பிள்ளைக்கு உதவும் உதவியில் ஒரு சிறிதும் உனக்கு நான் உதவினேனில்லை. என்றாலும் என் மனக்கோளை நன்கறிந்து அதன்படியே நடந்தாயாதலின் முட்டின்றி நீ சுவர்க்கபதவி பெறுவை. அதுவும் நீ எக்காலத்து வேண்டுமென விரும்புகின்றாயோ அக்காலத்தே சித்திக்கும் நீ அவ்வாறெண்ணும் வரையில் காலன் முன்வரான் உன் ஆவியைக் கவர" என்றோர் ஒப்பற்ற வரமளித்தான் சந்தனு தன் மைந்தனுக்கு. பின்னர் படவோட்டி அரசகேசரியை நோக்கி "அரசே! என் மகள் கேவலம் வலைஞர் மாதெனக்கருதேல் அவள் தேவகன்னிகை, இது சத்தியமே" என்றுரைத்ததும், மன்னவன் மகிழ்பூத்து அப்பரிமளகந்தியைப் பரிவுடன் மணந்து சுகித்திருந்தான் நாள் பலகழிந்ததும், சந்தனுவுக்கு, சித்திராங்கதன், விசித்திர வீரியன் எனக்குமரர் இருவர் தோன்றினர் அப்பால் விதியால் சந்தனுவும் விண்ணுலகேறினன். உடனே கங்கையின் புதல்வனாகிய பீஷ்மன் தன் வாக்கு பொய்க்காவண்ணம் தன் தம்பியாக்கே முடிசூட்டினன். இனி காசிராஜன் தன் புதல்வியர் மூவர்க்கும் சுயம்வரம் என்று ஓலையனுப்ப, அக்கணமே பீஷ்மன் புறப்பட்டுத் தன் தம்பியையும் இட்டுக்கொண்டு போய் காசிமன்னன் சபா மண்டபத்தையடைந்ததும், அங்கிருந்த மன்னர் பலர் குரு குலக் கோமான் கூறிய வஞ்சினம் மறந்தனனோ என்று ஐயமுற்றனர். எனினும் பீஷ்மன் சொன்ன சொல் தவறுவனோ? அக்காசிமன்னன் மகளாம் அம்பா, அம்பிகை, அம்பாலிகை என்ற மூவரில் மூத்தாள் சாளுவமன்னனை விரும்பியதனால்

அவனை வென்றது மற்றைய இருவரையும் தன் மெய் வலியால் தன் தம்பிக்கு மணமுடித்து, தான் பிரமசரிய ஒழுக்கத்தினராகவே யிருந்தனர். கடைநாளில் பீஷ்மரது பேரப்பிள்ளைகளாகிய பாண்டவரும், துரியோதனாதியரும் பகைத்துப் போர் செய்யும் பத்தாநாளில் பீஷ்மரது ஆகமெங்கும் அம்புபட்டு உயிர் சோர்ந்திருக்கையில் தருமன் முதல் மன்னர் பலரும் திரண்டு வந்து, பீஷ்மரையணுகி, அவரது பராக்கிரமங்களை மனமார வாழ்த்தி முடிவில் "தந்தை யின்பம் எய்தற் பொருட்டு பிரமச்சரிய தவமே இன்பமாகச் சிந்தை தெளிந்த ஞானச் செல்வா! செஞ்சேவகனே! முந்தை மரபுக்கெல்லாம் முதல்வா! உன்னை யொப்பார் யாவருளர் இப்பிறவியினில், என்றழுது தொழுதவளவில் "மக்காள்! அஞ்சல்! தொல்லைவினையை யாரே விலக்குவார். தேவராலு மாகாது." என்று அவர்களுக்கு அறிவுறுத்தி, அச்சமயம் தக்ஷிணாயன காலமாதலாலும், உத்தராயண புண்ணிய காலத்தில் இறப்பதுவே பெரும் பாக்கியமென நம்முன்னோர் மொழிந்திருத்தலினாலும் அவ்வுரையைக் கடைப்பிடித்து யோகத்தால் தன் உயிர் ஓடாவண்ணம் நிறுத்தி, சூரியன் வடபாலெய்து மளவும் உயிர்விடேன் என்றிருந்தனர். அவ்வாறே தக்ஷிணாயண புண்ணிய காலத்தில் தன் ஆவி நீக்கி உயர்பதவி யடைந்தனர். பீஷ்மர் இத்தகைய மேன்மை பெற்றது தன் தந்தைக்குச் செய்த கைம்மாறின் பயனே யென்பதை நம் நேயர் நன்கறிவர்.

## 8-வது கதை. அன்புடைமை.

திருக்குறள். அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

பரிமேலழகர் உரை :—அனபிலார் தாம் பிறர்க்குப் பயன படாமையின் எல்லாப் பொருளாலும் தமக்கே உரியர். அன்புடையார் அவ்வாற்றானே யன்றித் தம் உடம்பாலும் பிறர்க்கு உரியர்

குறிப்பு:—தெய்வச் சிதம்பர தேவா! உன சித்தம் திரும்பி விட்டால் பொய்வைத்த சொப்பனமாம் மன்னர் வாழ்வும் புவியும் எங்கே? மெய்வைத்த செல்வம் எங்கே? மண்டலீகர் தம் மேடை எங்கே? கைவைத்த நாடகசாலை எங்கே? இது கண மயக்கே!—என்ற அமுதமொழிகளை அனபிலாதார் அறியார். ஆதலினால், அவர்களிடத்து ஏரா ளமான பொருளிருப்பினும் அதனைப் பிறர்க்கீந்து பயன மரம் உள்ளூர்ப் பழுத்தது போலிராது, எனது, எனது என்று தனத்தை இறுக்கி, எச்சிற் கையாலும் காகத்தை ஓட்ட மனம் பொறார் அதுவுமன்றி, "கைக்கரும்பைக் கிழங்கு, வாய்வேப்பங்காய்" என்றபடி இனிய சொற்றான கூறுவரோ? கூறார். மனதிலாவது நற்சிந்தனை யுண்டோ? அதுவுமில்லை யாதலினால்தான், அனபிலாதார் எவ்விதத் திலும் பிறர்க்குப் பயன்படார். அனபுள்ளவரோ வெனில், தங்களது செல்வத்தாலும் பிறர்க்கு உதவி புரிந்து அவசி யமாயின தங்கள் உடல் உயிர் இரண்டையும் கொடுத் துப் பரம உபகாரிகளாய் விளங்குவர்

உதாரணம்:—"நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ நிறைநெடு மங்கலநாணோ" எனப்புலவர்களால் புகழ்பெ ற்ற அயோத்திமா நகரின்கண் சிபி என்னும் அரசனொருவ

னிருந்தான். அவன் சூரிய குலத்தினன். தருமராஜனின் நற்றுறையாவும் நன்குணர்ந்தவன். அறத்தினவேலி மன்னுயிரைத் தனனுயிரெனக் கருதும் தயாளகுணசீலன் மனு நீதிப்படி ஆறிலொரு கடமையே குடிகளிடமிருந்து பெறுபவன். கதிரவனது ஒளிக்கதிர்க் கற்றை இனிதுபடியும் இம்மாநில முழுதும் அவனது தருமசக்கிரம் தடையின்றிச் செல்லா நிற்கும் முடிவாகச் சொல்லின் புலிப்போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீருண்ண உலகனைத்தையும் ஆண்டுவந்தனன். ஒரு நாள் அவ்வரசன் தன் அந்தப்புரத்தின் பூங்காவொன்றில் தென்றல்வாங்க உல்லாசமாய் உலாவியிருந்தான். அக்காலை மிகுந்த வேகத்துடன் பயம் போர்த்த உடலினதாய்ப் பறந்துவந்து குறுநடைப் புறவொன்று அம்மன்னவன் மடிமீதில் விழுந்தது. இறைவனே அப்புள்ளை யெடுத்துச் சேய்மையினின்றும் பறந்து வருவதாலுண்டான வியர்வை நீரினைத் துடைத்துச் சற்றே களைப்பாறியிருக்கையில் பெரிய பருந்தொன்று அவனெதிரில் அந்தரத்தினின்றும் வந்து, தெளிவான மானிட வாக்கினால், "அரசர் ஏறே! இது காலை தங்கள் ஆதரணையிலிருக்கும் புறவை யான் வெகு தொலைவினின்றும் துரத்தி வருகிறேன். இத்தொழிலினால் நாள் மூன்றாகியும் யான் உணவு கொண்டேனில்லை. ஈசன் எனக்கு இதைப் போன்ற சின்னஞ் சிறு பறவைகளின் மாமிசங்களையே ஆகாரமாக விதித்திருக்கிறாரே யன்றி வேறு எவ்விதத்திலும் இதற்கு மாறாக நியதி செய்திருப்பதாய் எனக்குப் புலப்படவில்லை. இதுவுமன்றி, எங்கள் பகுப்பினர் பலரும் மாமிச பட்சணிகளென்பது அனைவரும் அறிந்த விஷயம். இந்த மணிப்புறவாம் எனது உணவினைத் தட்டச் செய்தல் தருமத்தின் வரம்புபோன்ற தங்களுக்கு அழகு

மன்று. ஆண்மையு மன்று. எவ்வகுப்பினரும் தத்தம
க்குரிய தொழிலைச் செய்யாது பிறிதொன்றை விரும்பிச்
செய்தல் முற்றிலும் பிசகென்று தமது அழியாத நீதிநூல்
காட்டகத்தே வாழ்ந்து வரும் என்போன்ற அற்பப் பறவை
கட்கும் இடித்துத் தெரிவிக்கின்றது. எவ்விதத்திலும்
அதனைமறந்து மாறாய நடக்கும் அற்பக் கொக்கினையும்
தமது ஆஞ்ஞாசக்கிரம் இது காறும் தண்டனை செய்யாது
தப்பவிட்ட தில்லை. ஆதலின் விருந்தினனாகிய எனக்கு
யான் விரும்பி வந்த ஆகாரத்தினை அளிக்கப் பிரார்த்திக்கி
றேன்" என்றுரைத்தது. இந்தவசனங்கள் ஒவ்வொன்
றும் சொற்சுவையும் பொருட்சுவையும் பொலிந்து விளங்
கியதனால், மன்னவன் மனம் ஆநந்தத்தில் அழுந்தியது.
பின்பு அந்தப் பருந்தை நோக்கி, "விருந்தாளியாகும்
நினது பசிப்பிணியைக் களையச்செய்தல் இன்றியமையாப்
பெருங்கடனேயாம். நின துணவு மாமிசம் என்பதும்
நான் நன்கறிவேன். இதுகாறும் நீ எடுத்துரைத்த வசன
த்தை உத்தேசிக்கின் உன்னைப் புன்பறவை யென்று மதித்
தல் பொருந்தாது. உயர்ந்த மனிதப் பிறவி யென்றே
உரைத்தல் வேண்டும். ஆதலின் நான் கூறப்போகும் மாற்
றத்தினைக் கவனிப்பாய். உன்னால் இச்சிக்கப்படும் இப்ப
றவை மிகவும் சிறியதென்பது நான் சொல்லாமலே அமை
யும். ஒருகால் உனக்கு இப்புள் உணவாகக் கிடைக்குமே
னும், அதன் இறைச்சி ஓர் வேளைக்கன்றிச் சிறிதும் மிஞ்
சாது. இஃதொன்றை அருந்தியதனால் உனது ஆயுளின்
அளவுகாறும் பசியுபத்திரவம் நீங்கப்போகின்றது மில்லை.
வழிநாள் உணவிற்கு மற்றொன்றைத் தேடியே தீரவேண்
டும். இப்புறவோ என்னை இது சமயம் அடைக்கலமா
கத் தெரிந்தெடுத்துக் கொண்டது. ஆதலின் என்னைத்

தேடி யடைந்த இப்பறவையின் துயரத்தைத் தவிர்க்காது,
பகைவனுகிய உன்னிடம் சமயத்திற் காட்டிக்கொடுத்தல்
மாபாதக மென்பதை நீயே நன்கறிவை. எனினும் பசி
த்து வந்த உனக்கு உணவு நல்காது வாளா வனுப்புதல்
அதனினும் அநீதியாகும். எனவே நின்னால் விரும்பப்ப
டும் இப் புன்புறவின் மாமிசம் ஒன்றை யன்றி வேறெதை
விரும்பினும் இக்கணமே அன்புடன் அளிக்க உடன்படு
கிறேன். ஆகவே, என்னை மகிழ்விக்கு நிமித்தம் மற்றொ
ன்றைத் தெரிந்து வேண்டுவாய்" என்றான் எவ்வுயிரும்
காத்தளிக்கும் இராஜாதி ராஜன். உடனே அப்பருந்து
பார்த்திபனை நோக்கி "அண்ணலே! மன்னுயிர்மீது தம
க்கிருக்கும் பெருங்கருணையினை இதுகாறும் தாங்கள் புக
ன்றவசனமே உள்ளங்கை நெல்லிக் கனிபோல உணர்த்தி
ற்று. அறஞ்செய்வாரைக் காத்தருளி, அல்லன் செய்வாரை
அதப்படுத்தும் அழியாப் புகழ்கொண்ட தமது அறத்தி
றலாழி உருளும் எல்லைக்குள் வாழும் அற்பக் குடியாகிய
அடியேன் தமக்கு மாறு கூறும் ஆற்றலுடையே னவதெ
ப்படி? தமது நன்னீதியினை நோக்கியன்றோ ஞாலம்
யாவும் இனிதே வாழ்கின்றது. எனக்கு உணவளிக்க ஒரு
ப்படுவீர்களாயின் அடியேன் விரும்புவது அந்தப் புறவினது
எடையளவு தமது மதுர மாமிசந்தான். இதனையும் உத
வாது என்னை வறிதே யனுப்புதல் தரும வேலியானோர்க்கு
எத்துணையும் உரித்தன்று" என்று சற்றேனும் பயமில்
லாது பகன்றது. அப்பருந்தின் வசனம் நரேந்திரனுக்கு
அடங்கா வியப்பை யுண்டு பண்ணியது என நாம் சொல்
லவும் வேண்டுமோ? என்றாலும், அரசன் சிறிது போழ்
தாவது காலந்தாழ்த்தனனோ? அன்று! அன்று! உடனே
பூபதி அங்ஙனே யாகுக! என்று துலைக் கோலொன்று தரு

விததான். பின்னர் அரைககணமும தாழ்க்காது, அதது லக் கோலின் ஓர தட்டில் புறவையிட்டு, மறறைததட்டில அதற்குச்சரியான மாமிசத்தினைத தன் துடையினின்றும அறுததது வைததனன். ஆயினும அது புறவிற்குச்சரி யான எடையிருக்க விலலை. சிறிது குறைவா யிருநதது. அதனால மனனா மனனன் கொஞசம மாமிசம மீணடும கொய்துவைததான். அபபொழுதும சரிபபடடதினறு முடிவில மனனவன் மாமிசம அததுணையும அறுததுத தட்டில வைததாயிறறு. அககாலையிலும துலைககோல் சரியாயிருநததிலலை. இதனைககணட வரசன "இது தேவா சோதனை போலும! உடலில எலுமபு தவிர மற றைய மாமிச மெலலாம அறுதததறுதது வைததும தட்டு சரிபபட்டதின்று. ஓர க்ஷததிரிய வரசன கானகததே வாழும அறபப புன்பறவை யொனறுக்குச் செய்து கொடு தத உடனபடிக்கையை நிறைவேறறத தவறினன என்றால் அதனினும இழிவு என்ன விருககிறது?" என்றனனி, இறுதியில தானே தட்டில ஏறினன. அபபொழுதே அந தரததினினறும பலபலவெனப பூமாரியும பொனமாரி யும பொழிநதன. இநதிர ஜாலத் தியறகை யொதது எவ ரும எதிர பாராவண்ணம புறவும பருநதும முறையே தென்றிசைத் தலைவனும இநதிரனுமாய் உருமாறின இவ ரொழிநத மறறும கடவுளர் அனைவரும உடனே ஆஙகு வநது குழுமினர்கள். பினபு அரசனுக்கு வசசிர உடலா குமாறு வரமளிததனர். அப்பொய் வேடம புனைநது வந்த இருதேவர்களும், மறறைத தேவர்களும அரசனு ககு அபரிமிதமான வரமளித்து மறைநதனா. அவ்வேந தனும் அதற்குப்பின் பன்னெடுங் காலம் தருமவரசு புரிந்து வாழ்நது வந்தான். இக்காலத்து எழுத்து வாசனை

யறியாத பெண்டிர் பலரும "பறவையாம மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறுக வழங்கிய சிபிச சககிரவர்த்தியனறோ வரசன்?" என வாயார வாழ்த்தெடுப்பதை அனைவரும் அறிவர்.

## 9-வது கதை. விருந்தோம்பல்.

திருக்குறள். இனைததுணைதது என்பதொன்றில்லை விருநதின்
துணைததுணை வேளவிப பயன

பரிமேலழகர் உரை:—விருந தோம்பலாகிய வேளவி யின பயன இனன அளவிற்று என்பதோர அளவுடைத தன்று, அதற்கு அவவிருநதின தகுதியளவே அளவு

குறிப்பு—வேளவிகள ஐநதுள. அவையாவன:—வேதமோதுதல, ஓமம வளாததல, விருநதோமபுதல, தருப்பணஞ் செய்தல, பலியீதல எனவே, விருந்தோம புதல ஒர வேளவியாயிற்று. விருநது புறநதருவதனால ஒருவர் அடையும பயன இவவளவு தான என்று ஒரு அள வினையுடைய தலல. "பாததிரமறிநது பிச்சையிடு, கோத திர மறிநது பெண கொடு" எனனும பழமொழிக கேறப, சறபாததிரஙகளையறிநது அளிபபின வானைவிட மிகபபெரி தாகும அததருமததின பயன. மேலும விருநதினாக குச் செய்யும உபசாரததின் அளவு பயன பலிககும என றொரு பொருளும தொனிக்கின்றது.

உதாரணம்:—பொன்னாட்டினும மேன்மைவாய்நத நம் பாதகண்டததின நடுபபாகததில விநதம என்றொரு மலையுளது. அககிரியின சாரலில விண்ணுறவோங்கி மண் ணுற விழுதுவிட்டுத தழைதத ஆலமரமொன்றில் ஆணும பெண்ணுமாய் இரண்டு புறாக்கள் வாசஞ்செய்து வநதன.

உடலிரண்டும் உயிரொன்றும் என்று உலகினர் புகலுவது அத்தம்பதிகள் ஆசைப் பெருக்கினை நோக்கியே போலும். இவ்வாறு அவ்விரு புறாக்களும் நகமும் சதையும்போல் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகையில், ஒருநாள் ஆண்புறா தன் பேடைக்கு இரைதேடுவதி னிமித்தம் வெளிச்சென்றிருக்கையில், வில்லும், கோலும் அம்பும் கைதனிற்கொண்ட வேடனொருவன் அம்மரத்தடியை யணுகி, அங்கு தானியங்களை இறைத்துப் பட்சிகளைப் பிடிக்க வலை வீசினான். அக்காலை நிரம்பிய பசியுடனிருந்த பெண் புறா மிகுந்த ஆவலுடன் தானியமணிகளைப் பொறுக்க மரத்தினின்று மிறங்கிவந்து வலையிற் சிக்குண்டது. இனியும் பறவைகள் பலவந்து வலையிற்படுமென்ப பரமானந்தத்துடன் வேடன் பதுங்கி யிருக்குங்கால் திடீரென வானில் மேகங்குவிந்து மின்னலும் பேரிடியுமாய் மழை பொழியத் தலைப்பட்டது. உடனே கிராதகன் வலையிலகப் பட்டுழலும் புறாவைப் பைதனிலடைத்து மாரியின் மிகுதியால் அம்மரத்தடியில் ஒரு மூலையிலேயே ஒண்டி யிருந்தனன். "நன்மை செய்தார் நலம் பெறுவார், தீமை செய்தார் தீமை பற்றி நலிவார்" என்ற பழமொழிப்படி பெரு மழையைப் பொறுக்கமாட்டாத வனசரன், ஆடையின்றி வாடையினால் மெலிந்து, கையுங்காலும் குளிரினால் நடுங்கி விறைத்து, அம்மரத்தடியிலேயே சோர்ந்துகிடக்க நேர்ந்தது. அச்சமயம் ஆகாரத்துடன் திரும்பி வந்த ஆண் புறா, தன் பேடையைக் காணாது பெரிதும் பிரலாபித்து இங்கு மங்கும் ஓடிப்பார்த்தும் தன் நாயகியைக் காணாததால் பெருமூச்செறிந்து சிறிது நேரம் அசைவற்றிருந்தது. வேடன் கையிற் சிக்குண்டு ஏங்கியிருந்த பெண் புறா தன்னைக் குறித்து ஆண்புறா வாய் விட்டலறுவதைக் கேட்டதும்

தன நாயகனைக கூவியழைததது "என உயிரின் இருக்கையே! இதுபொழுது நானே வேடன் பைதனிலகப்பட்டேன. இனி எனனைபபறறித தாஙகள வருநதுவதனல் மெய்வருததம ஒன்றைத தவிர வேறு பயன் கிட்டப போவதிலலை விதி வசததால நாமிருவரும பிரிய நோநதது. வினைபபயனை வெலவதறகு வேதமுதலாம எனைத தாய நூலகததும மாாககம கூறபபட்டிலது. ஆதலின இனி நடககவேண்டிய காரியததினை யோசிபபதே சாலச சிறநதது" எனலும, பழையதனம மீணடும கிடைககப் பெறற வரைபபோல மனமகிழநது "பாதகனுகிய வேடன கையிலிருநது வெளிககிளமப ஏதோ யுகதி சொலலப போகினறது நமபிரியை" எனறு ஆவலுடன ஆணபுறு எதிா பாாததிருககையில, அபபெடை தனபதியினை நோககி "என அனபே! இநநிமிஷமுதல எனனுறவைத தாஙகள் துறவெனறு கொளவதே தகுதியாகும ஏனெனில, யான இதுபொழுது வேடன பையிலிருநது உய்யுமவகை ஒனறு மறியேன நிறக, வேடனே இககாலை மழை குளிா காறறு இவைகளால மாயநதவனபோல ஓயநது கிடககின்றுன. மேலும பசியால மிகவும பாதவிதது வாடினன் எனறே சொலலவேணடும. அதுவுமனறி, தன பசிப் பிணியைப போககிககொளள நமமிலலமடைநது எனனையே அனனமாககககொணடு வலைவிரிததது அகபபடுததிக கொணடனன. ஆதலின நமமனைககு இவன விருநதாளியுமாயினன. இவனது பசிபபிணியைக களையாது நாம வாளாவிருததல படுகுகில வீழ்வதறகு ஏதுவாகும. அதிதியின ஆயாசததைபபோககி அனபுடன அனனமளிப்பின் நாம நலல பதவியடைவோம, இதற கையமிலலை. இககணமே தாஙகள எவகேனும சென்று தீக்கொணர்நது

விருந்தினனது குளிரைப் போக்கவேண்டும். பின்னர் நாமே இவ்வேடுவன் எண்ணியபடி இவனுக்கு இரையாவதே மேல். உறங்குவதுபோலும் சாக்காடு, உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு; அன்றியும், ஆறிலும் சாவு நூறிலுஞ் சாவு வருமாதலின், நாம் என்றைக்காயினும் ஓர்நாள் இறந்தே தீரவேண்டும். இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா, வளமிய வான்பெருஞ் செல்வமும் நில்லா, புத்தேள் உலகம் புதல்வரும் தாரார், மிக்க அறமே விழுத்துணை ஆவது—என்பது முதுமொழியாதலின், அவரவர் செய்த நல்வினை தீவினை ஆகிய இரண்டுமே ஆவியைக் கூற்றுவன் கொண்டு குதித்தோடும்பொழுது உடன்வரும். இத்தகைய ஆன்றோர் அமுதமொழிகளைத் தாங்கள் அறியீரோ? நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே. ஆதலின் எதுவுமறியாத யான் எல்லா மறிந்துணர்ந்த தங்களுக்குக் கேவலம் பெண்புத்தியால் இத்துணை எடுத்துரைத்ததை மன்னித்து என் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்” என் மிகுந்த பணிவுடன் பகன்றது. “அன்னைதயையும் அடியாள் பணியும் மலர்ப் பொன்னின் அழகும் புவிப்பொறையும்—வன்னமுலை, வேசித்துயிலும் விறல் மந்திரி மதியும் பேசில் இவையுடையாள் பெண்” என்ற வெண்பாவிற்கோர் இலக்கணமாயிருந்த பெண்புறவின் போதனையால் மனந்தெளிந்த ஆண்புறா அக்கணமே அதிவேகத்துடன் பறந்து சென்று காட்டிடையே சுவாலை விட்டெரியும் கனலிலிருந்து ஒரு சிறிய கொள்ளிக்கட்டையைத் தன் அலகில் கொத்திவந்து, வேடன் முன்னேயிட்டு, அங்கு சிந்திக்கிடந்த குச்சிகளைச் சேகரித்து இரக்கையை வீசித் தீமூட்டி அவ்வேடனது குளிர் நடுக்கத்தை யகற்றிச் சூடு

றைக்கப்பண்ணியதும், ஆகாயத்தில் அதிக விசையுடன் கிளம்பி அந்நெருப்பிலேயே வீழ்ந்து வேடுவனுக்கு இரையாயது. அற்பப் பறவையின் உதாரத்தையும் அறிவையும் கண்டதிசயித்தவேடன், ஓர்புறம் புறா மரித்ததைக் குறித்து வருந்தியும், மற்றோர் புறம் பசிப்பிணியினால் துன்பமடைந்தும், பசிவந்திடப் பத்தும் பறக்குமாகையால் பசியின் கொடுமையால், வெந்து கிடக்கும் புறாவைத்தின்று பசி தணிந்தான். நல்லோர் உணவு நாவினில் கிடைக்கப் பெற்றவேடன், அறிவு தலைப்பட்டு "அந்தோ! நான் மனிதனாய்ப்பிறந்தும் பகுத்தறிவின்மையால் விலங்கிற்குச் சமானமாயினேன். இப்புறவோ அற்பப் புன்பறவையாய்த் தோன்றியும் அறிவு நிரம்பிய காரணத்தால் என்னினும் மேம்பட்டதாய் விட்டது என் பையிற் கட்டுண்டு புலம்பித் தவிக்கும் தன் பேடையின் துயரத்தை ஒரு பொருட்டாக மதியாது பசியினால் பரிதவிக்கும் என் உயிரைக்காப்பாற்றக் கருதித் தன்னையே எனக்கு ஆகாரமாக வழங்கி உயிர் துறந்த புறவினும் கடையனாயினேன் யான்" எனப் பெரிதும் வருந்தி, உடனே தன்னிடம் சிக்கியிருந்த பெண் புறவையெடுத்து அதன் இஷ்டப்படியே எங்கேயாவது சென்று சேர்க என்றுவிட்டு விட்டுட்டான். நல்ல வேளையாய் நாம் நமன் கையிலிருந்து தப்பித்துக்கொண்டோம் என்று மகிழ்ந்து தன்னிருப்பிடஞ்சென்றதோ பெண்புறா? இல்லை! இல்லை! ஆனால் "இல்லறமே நல்லறமென இதுகாறும் நாமும் நமக்கணவனும் கூடி வாழ்ந்தோம். இக்காலை நம் பிராண நாதன் பசியால் நலிந்து மெலிந்திருந்த வேடுவ விருந்தினனுக்கு உணவாக நேர்ந்தனன். நாதன் போன பொழுதே நம்நாதமும் போயினது. மகிழ்நன் மடிந்த பொழுதே வாழ்வும் மடிந்தது. பர்த்தாவுக் கேற்ற பதி

விரதையாக நாமிருப்பின் நம்நாயகன் செய்த வண்ணமே
நாமும் விருந்தாக நோதலே மேல் அல்லாமல், பதியங்கும்
பாரியாள் இங்குமாக இருப்பது எள்ளளவும் பொருந்தாது
படுநரகுதான் பிராப்தியாகும் கொண்டானிற் சிறந்த
தெய்வமில்லையாதலின், ஏககாலத்தும் புருஷனண்டையி
லேயே இருந்து வாழ்வது கற்புடை மங்கையரின் ஒழுங்
காகும். எனவே நாமும் கணவனடைந்த கதியை யடை
வதே உத்தமம்" என்றுன்னி, உயரக்கிளம்பித் தன்னாய
கன் விழுந்திறந்த நெருப்பில் தானும் விழுந்து பிராணனை
விட்டது. உடனே அந்தரத்தினின்றும் துந்துமி முழங்
கவும் பொன்மாரி பொழியவும் அப்புறாக்க ளிரண்டும் திவ்
வியதேகம் பெற்று, தெய்வீக விமானத்தில் தேவர்கள்
போற்ற, சிவபெருமான் பாதார விந்தமாம் பரமபதஞ்
சென்று சார்ந்தன. புறாக்களிரண்டும் தன்னை விருந்தா
கப் பாவித்துத் தங்களையே ஆகாரமாக அளித்த பெரும்
பேற்றால் யாவரும் எய்தற்கரிய பரமபத மடைந்ததைக்
கண்ணாரக் கண்டு களித்த வேடன் "ஐயையோ? புத்திக்
குறைவால் மாபாதகம் பண்ணி நரகடைய லாயிற்றே என்
தலைவிதி! என் செய்வேன் தெய்வமே! இனியான்
இருந்தென்ன? இறந்தென்ன? பாவத்திற்கு அஞ்சாது
கொலைத் தொழிலையே மேற்கொண்டு என்வயிறு வளர்த்
தேனே! காசிக்குச் சென்றாலும் இக்கருமம் தொலை
யாதே! நல்லாரைக் கண்டாலும், அவர் குணங்களை நாவி
னால் துதித்து நானிலத்தில் வீழ்ந்திறைஞ்சினாலும், அவ
ரோடு இணங்கி அடிமைத் தொழில் புரிந்து வந்தாலும்
நற்கதிசென்று சேர்வர்—என்று பெரியோர் கூறுகின்ற
னர். அங்ஙனமிருக்க, அத்தகைய நல்லாரையே யான்
என் பாழ்வயிற்றி லடக்கிக் கொண்டேன். எனக்கு நற்

கதி கிட்டாதா" என்றுள்ள முருகி, நெஞ்சம் பதைத்து, கொழுந்துவிட்டெரியும் காட்டுத் தீயிற்றானும் குளித்தனன் தட்சணமே அவ்வேடுவனும் உயர் பதவி யடைந்தான். இனி அகமும் முகமும் ஒருங்கு மலர்ந்து, வந்த விருந்தினரை வைகலும் ஓம்பி உயர்பதமடைந்த பக்த சிகாமணிகளைக் குறித்த பலகதைகளிருப்பினும், இப் புன் புறவின் கதையை ஆதாரமாக எடுத்துக்காட்டிய காரணம் என்னையெனின், கவிச் சக்கரவர்த்தி எனப் பெயர்பெற்ற கல்வியிற் பெரிய கம்பர்,

"பேடையைப் பிடித்துத் தன்னைப்
பிடிக்க வந்தடைந்த பேதை
வேடனுக் குதவிசெய்து விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடு பெற்றுயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமிதன்றே."

என்று கூறியுள்ளா ராதலின் என்க.

## 10-வது கதை. இனியவை கூறல்.

திருக்குறள். இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

பரிமேலழகர் உரை —அறம் பயக்கும் இனிய சொற்களும் தனக்கு உளவாயிருக்க, அவற்றைக் கூறாது பாவம் பயக்கும் இன்னாத சொற்களை ஒருவன் கூறுதல், இனிய கனிகளும் தன் கைக்கண் உளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனோடு ஒக்கும்.

குறிப்பு:—தனக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் இனிய மொழிகள் தன்னிடமிருக்க அவ்வின் மொழி

கூறுது கடுஞ்சொல சொலவதானது அமுததததின் உருசி பொருந்திய பழஙக ளிருககக காஞசிரஙகாய் தினனது போலாகும. நம வாயினின்றும வெளிவருஞ சொற்கள் இனசொல கொடுஞசொல என இருவகைபபடும். சகத திலுள்ளார கழுதை கததுவதைக கேட்டதும் அருவ ருப படைகின்றனா. குயிலின குரலேயோ ஆவலுடன் கேட்டானநதிககின்றனா. ஏனெனில அககுரலகளின் கடுமை இனிமை இவைகளே ஹேதககியே. நிறக நாநயமி ருபபின் நாணயம (தனம) ஒருவரிடததில நிலைததிருக கும நாநயமிலலேயேல நாணயம பறநதுவிடும இதனே யறியா மாநதா சிலா தஙகளே யடுதது வநத ஏழைகளு ககு ஏதேனும கொடுகக இஷ்டமிலலையாயினும இனிய சொலலேயேனும வழஙகா திருககினறனரே ! தீவினை எனற கமமியறுல வாய பூட்டிடபபட்டாரபோலும ! இனிய மொ ழியைத் தவிரதது வன்சொல வழஙகுவது கையிலே கரும்பி ருக்க வேம்பு தேடியது போலன்றே !

உதாரணம்.—கோதாவரி நதிககரையில திருமகளின உறைவிடமாய் விளஙகிவநத வசசம் எனெருரு தேசம உண்டு அநநாட்டின் தலைநகா புஷ்பபுரி அபபுஷபபுரி யெனனும பட்டினததில உருததிர சாமா என்னும ஓா அநதணனிருநதான். அவனுககு மனைவியா இருவா அவ ாகளுள மூதத பததினி புததிர னெருவனைப பயநது அப பொழுதே காலெஞ சென்றனள். ஆதலின அப பசசைப பசுங் குழவியை இளையவளே போஷிகக நேர்நதது. தங் கை பிள்ளையும் தன் பிள்ளையாமா என்பது பண்டைமொ ழியல்லவா ? தன வயிற்றுப்பிறந்த பாலனைப்போல் ஸக ளததிரததின் சிறுவனைக் காப்பாற்றப பெண்களுக்கு மனம பொருநதாதென்பது வெளிபபடை. ஆதலின் அக்

குழந்தைக்குச் சிறிதும் நெய் கலப்பில்லாத அன்னத்தினை உண்பித்து வந்தாள் இளையாள் நெய்யில்லாத உண்டி பாழ் என அம்மை சொன்ன வசனம் பொய்க்குமோ? ஆகவே, அத்திக்கற்ற குழந்தைக்கு நாளடைவில கண்டோர் அனை வரும அருவருக்கும் வண்ணம வயிறு மாத்திரம் முன வந்து மற்றைய அவயவம பலவும சுருங்கிச் சிறுகத் தலைப பட்டன. ஐயோ! பாவம! இதனைக் கண்ட அபபையன தந்தையாம உருத்திர சாமன ஒரு நாள தன் இல்லக கிழத் தியை நோக்கி "கொடியவளே, விதியின பயனால பிறந்த பொழுதே தாயை யிழந்த இக்குழந்தையினைக் கண்டு மன மிரங்கிச் செம்மையாய அமுதூட்டி வளாக்காது யாவரும பாாத்துக் கைகொட்டி நகைக்கும வண்ணம இத்துணைத் தாழ்ந்த நிலைமையிற கொணாந்து விட்டனை உனது மனம இரும்போ! கேவலம முதிாந்த கறபாறையென்றே சொல்லவேண்டும அடிபாதகி! தாரமும் குருவும் தலை விதி என்ற பழமொழியின் உண்மையை உனனிடமே முத ன்முதல அறியலானேன" என்று சினந்தான் சாகசம் பலவும கைவந்த அவ்விளையாள் தன் மணாளனை நோக்கி "நாத! யான் கடவுளறிய ஒரு சிறிதும வேறறுமையின்றி என வயிற்றுப்பிறந்த மக்களினும பதின்மடங்கு மேன்மை யாகவே பாதுகாத்து வருகினறேன். அவன உடலின் கூறு பாடானது எனது போஷணையை முனனுக்கு வர விடாது மூலையிலொளிக்கச் செய்கின்றது போலும. ாதில்லா விடின அவவுடலாவது ஏதேனும சுகமடைந்ததோ வெனின் அதுவுமில்லை தாயில்லாபபிள்ளை யென்று பெரிதும கரு ணைகூாந்து நறபெயர் கிடைக்க வேண்டு மென்று மிகு ந்த ஆசையுடன எத்துணை தான் வருந்திப் பாலும் அன் னமும் பரிவுடன் அளிப்பினும் அவையாவும் சாம்பலிற்

பெய்த ஆகுதியென்னப் பயனற்றவாய்ப் போவதுமல்லாமல், நன்றாய்ப் போஷிக்கவில்லை என்ற பட்டப் பெயர் ஒன்றினையும் எனக்களித்து விட்டது. இவன் என் வயிற்றுதித்த மகவாயின் வளரினும் வளராவிடினும் என்னை ஒருவரும் குறைகூற மாட்டார்களன்றோ? என் கைராசி நன்று நன்று! தோஷிக் கைபோலும். செய்தீவினை யிருக்க யான் என்னையே நொந்து கொள்ள வேண்டுமே தவிர தாங்கள் கூறுவதிற் கோபங் கொள்வது மதியீனம்" என்று தான் கற்ற வித்தை அனைத்தையும் கணவனிடத்து நடித்துக் காட்டினள். பெண்கள் சாகசத்திற்கு முன் புருஷர்களது ஆண்மை சிறிதும் பலிக்காதென்பது வெளிப்படையல்லவா? அதனால் அதத்துணை விவரித்துச் சொல்லிவந்த தன் மனைவி குற்றமற்றவளாகவே யிருத்தல் வேண்டும். இதனை நாம் முன்பின் தீரயோசியாது அவள்மீது பழிசாத்தி மனம் நோகப்பண்ணினமே என்று தனக்குத்தானே வருந்தினான் வேதியனும். பின்னர் நல்லுணவுகளை நன்றாய்ப் பருகாதிருப்பது குமாரனுடம்பின் கூறுபாடென்றே எண்ணியிருந்தான் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? பின்பு அப்பிள்ளைக்கு இளமைப் பருவத்திலேயே விநஷ்டன் அதாவது பயனற்றவனாகிய பால விநஷ்டன் என்னும் பெயர் சூட்டப்பட்டது. எனவே தன் மகனின் விகாரவடிவத்தைக் கண்டு சகியாது அக்குழந்தையைத் தொடுவதற்கே அருவருப்புக் கொண்டவனாயினன் பிதா. அந்தோ பரிதாபம்! மாநிலத்தில் தோன்றிய அக்கணமே அன்னையை யிழந்து பின்னர் மாற்றாந்தாயினால் நாவிற்கினிய நல்லுணவு கிடைக்கப்பெறாது தந்தையினாலும் கைவிடப்பட்ட அக் குழந்தையின் நிலைமையை நினைக்க நினைக்கக் கல்லும் கரையும், மனமும் உருகுமன்றோ? அப்

பால் நாளடைவில் பாலவிநஷ்டனுக்குப பருவங்கள் சில கழிநதன. தனது சிறறன்னை சிறிய உணவளிக்காது எக்கணமும தொநதரவிறகும கடுஞ் சொல்லுக்கும் உள்ளாகி வருநதல உபாயததினுல நீக்கிகொள்ளக் கருதிய அக்குமாரன ஒரு நாள தன தநதை வெளியிலிருநது வீட்டிறகு வருமபொழுது "எநதாய் எனககுத தநதையா இருவா உளா" எனறு தனது மாற்றுநதாய் அறியக கூறினன். விதியையும மதியினுல வெனறு விடலாம என்றிருநதலினுல் புததியுளளாருககு எககாரியநதான கைகூடாது? பேசப்பிறந்தையோ, சாகப் பிறந்தையோ எனபது முன்னோர் மொழி ஆதலின, உருததிரசாமன தன புதல்வனது வாய் மொழியைச செவியிலேறறதும தன் மனைவி பாபுருஷ சாஙகததிய முடையவள என்று வெறுபபுற்று அனறு முதல மனைவியைத தீண்டாமலும எந்நாளுமபோல் அவளுடன உரையாடாமலும ஒதுங்கியிருக்கத தலைபபட்டனனென்பது நாம சொலலாமலே அமையும இஙஙனம திஙகள சில கழிநததன மேல் ஒருநாள அவன் மனைவி தான யாதொரு பிழையுஞ் செயயாதிருககையிலேயே மணளன் தனமீது வெறுபபுறறுப பேசாதிருபபதறகுப் பாலவிநஷ்டன் தன் மீது ஏதேனும குறை சொல்லியிருக்கவேண்டுமெனறே பூசனிக்காய் திருடியவன தோளைத் தொட்டுப பாாததது போல தன குறறததை நினைதது வருநதினள். குறறமுளள நெஞ்சு குறுகுறென்னும், குரும்பையுளளகாது ஆடுடென்னுமலலவா! ஆதலினுல் உடனே அவ்வினையாள முததாளின் புதலவனைப பரிவுடனழைததது அவனுககு மஞ்சனமாட்டி மடிமீதிருநதி நல்லாடையுடுததி உருசி பொருந்திய உணவினை யூட்டி மார்புறததழுவி முததமாடி உசசி மோந்து உள்ளங்கை முத்தமிட்டு

கொளுசிக் குலாவி "என கணமே! நீ உன தநதையாரிடத்தில என மீது ஏதேனும குறைகள கூறினையோ?" என்று அனபுடன வினவினள அவவளவுதான் தாமதம. சாண் பிளளையாயினும் ஆண்பிளளையான அபபாலவிநஷடன "இது தானு? எனனைத தாழவு படுததபபடுதத இதனிலும பலகோடி மடஙகு உனககுக கேடுண்டாகக வழி தேடுவேன யான எனபதைக கணடிபபாய் அறிநது கொள உன மககளுககு மாததிரம நலலுணடி யளிககினறனை? எனககோ வெனறுல அதனில எட்டில ஒரு கூறு கிடைபபதும துாலபமே. குதிகாலில ஒட்டிய அழுககுபபோ லலலவா நினைததுவிடடாய் நீ எனனை. வினையிட்டவன் வினை யறுப்பான் தினை யிடடவன் தினை யறுப பான் எனபதை அறியாயோ நீ. அறியாதிருபபின இது பொழுது தெரிநதுகொள. உனககுத தெரிநத விததையை நீ காடடினுல எனககுத தெரிநத விததையை யான காட டாது போவேனு" என்று கலலுககுக கல அணடக கொடுததது போல வார்ததை கூறினன பையன எடுததியமபிய மாறறததினைச செவியுறற இளையவள இடியுண்ட நாகமபோல உடல நடுஙகி உளளம பதைதது நறபுத்தி தலைப்பட்டவளாய்க் "குழநதாய்! உனனை இனறு முதல் எததுணை மேன்மையில இருததப்போகிறேன் என்பதை நீயே பார்ககபபோகிருய், இனி எககாலததும மறநதும உனககுத துனபஞசெய்யேன இது சததியம! சததியம்!! நீ இபபோழ் தடைந்திருக்கும உடலிளைப்பினைமாதமொனறிறகெலலாம இருநத விடம தெரியாது ஓட்டிவிடுகிறேன. பேதமை என்பது மாதாககு உடன் தோனறியதலலவா? ஆதலின, அறியாப் பெண் புத்தியால் இதுகாறும் உன அன்னபானுதிகளைக் கவனிததேனிலலை. இது

மிகவும் தவறே! எனினும் இதுகாலை நீ என் மீது தயை கூர்ந்து மன்னித்தல் வேண்டும். அதுவு மன்றி, உனது தந்தையார் சினத்தைத் தணிக்கப் பெரிய மனது பண்ணு வாய். அபாயஞ் செய்தவாக்கை அதனைப் போக்கும் உபாய மும் தெரியும். மேலும், பெண்ணென்றால் பேயுமிரங்கு மாதலின் இச்சமயம் நீ என்னைக் கை தூக்கி விடவேண் டும். ஏனெனில், கணவன் உயிருட னிருக்கும்பொழுதே புருஷனை யிழந்த பாபிபோலாயினேன் புத்தியீனத்தால்” என்று மிகவும் கெஞ்சிக் கூத்தாடினள். குளிர்ந்த அருளை யுடையவனே அந்தணனாதலின் விற்பிடித்து நீர் கிழிய எய்த வடுப்போல் தன் சினமாறி “அன்னாய்! அஞ்சேல்! உனது இரக்கம் நிரம்பிய இனிய மொழியினைக் கேட்டதும் என்மனம் கனலிலிட்ட மெழுகுபோ லுருகா நின்றது” என்று பதிலுரைத்து மீண்டும், பட்டறிந்த சிற்றன்னையை விளித்து “அங்ஙனமாயின் இன்று என் தந்தையார் வெளி யிலிருந்து வரும்பொழுது உன் சேடியர்களைக்கொண்டு கண்ணாடி யொன்றினை முகத்திற்கு நேராகக் காட்டச்செய். அதற்குமேல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்” என்று கூறினன் பாலவிநஷ்டன். நாவின் நுனியில் நயமிருக்கின் பூமாதும் நாவினிய நல்லோரும் நண்ணுவா ரெனின் இனிய சொல்லினால் கிட்டாத காரியம் யாதுளது! சந்திரனது குளி ர்ந்த கிரணங்களைக் கண்டு கடல்பொங்குகின்றதே யொழி யக் கதிரவனது வெம்மையைக் கண்டு பொங்குமோ? பொங் காது. கடுஞ்சொல் ஒருவனை யிடர்ப்படுத்தும்; இன்சொல் லோ அவனை அவ்வாபத்தினின்று நீக்கும். பிறகு, முன்னா ளில் ஐயிருதலையையுடைய இராவணன் கைலையங் கிரியைப் பெயர்த்தெடுத்து அம்பிகையைக் கண் கலங்கச் செய்தும் பின்னர் அவ்விராக்கதன் கூறிய இனிய சொல்லால் உருத்

திருமூர்த்தி இலங்கேசனுக்கு வெற்றிவாளும் பேரருளும் வழங்கினரென்றால் பாலவிநஷ்டனிடம் இன்சொல் இயம்பி இளையவள் நற்பேறு பெற்றது ஆச்சரியமல்ல. இனி உருத்திர சர்மாவின் மனைவியும் பாலவிநஷ்டன் புகன்ற வண்ணமே சேடியாகளைக் கொண்டு செய்விக்க அக்காலை பாலவிநஷ்டன் தன் பிதாவை நோக்கி "எந்தையே! அதோ பாருங்கள் எனது இரண்டாவது தந்தையை" என்றான். அந்தணன் அதனைக் கேட்டதும் நல்லறிவு தலைக்கொண்டவனாய் "அம்மவோ! நாம் அறியாச் சிறுவன் வசனத்தை மெய்யென நம்பிக் குற்றஞ் சிறிதுமின்றிய மனைவியைக் காரணமின்றிப் பகைத்தனம்" என்று நொந்து அன்று தொடங்கித் தன்னில்லாளிடத்தில் என்றும்போல அன்பு பாராட்டத் தலைப்பட்டனன். இளையவளும் தான் முன்னர் பாலவிநஷ்டனுக்கு வேண்டிய உணவளிக்காதும் கடுஞ்சொல் கூறியும் வந்ததனால் அடைந்த வெட்கக் கேட்டினையும் பின்பு இன்சொலியம்பி இன்னல் போக்கி இன்பமோடு கணவனுடன் வாழ நேர்ந்ததையும் பசுமரத்தாணிபோல பதியப்பெற்று இன்மொழியே இடுக்கண்கற்றும் என அதனையே கைப்பிடித்துச் சுகமே வாழ்ந்து வந்தனள்.

## 11-வது கதை. செய்ந்நன்றி யறிதல்.

திருக்குறள். நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

பரிமேலழகர் உரை:—முன் ஒருவன் செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று, அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன.

குறிப்பு —ஒருவன் செய்த உபகாரத்தை மறத்தலா காது மேலும் நமக்கு நன்றி புரிந்தோர் மற்றொருகால் தீமைகள் புரிந்தா ராயினும் அவர்முன்னர் நமக்குச் செய்த உதவியை மதித்து அவர்செய்த தீமையை மறந்து அவரை யென்றும் மறவாதிருத்தல் வேண்டும். ஔவை யும் நன்றிமறவேல் என்று கூறினள்

உதாரணம்:—காத்தற் கடவுளாகிய திருமால் பூபா ரந்தீர்த்தற் பொருட்டுக் கிருஷ்ண னென்னுந் திருநாமத் துட னவதரித்துத் தன் மருகர்களாம் பாண்டவர்பக்கல் அன்புபூண்டு அவர்கள் வேண்டு கோளுக்கிணங்கித் துரி யோதனனிடத்தில் தூதுநடந்தா ரென்பதை நமரேய ரனைவரு நன்கறிவர். அங்ஙனம் தூது சென்ற காலையில் துரியோதனன் "பாண்டு மைந்தர்க்கு எள்ளளவும் பூமி கொடேன், வேண்டுமேல் போர்புரிந்து பெற்றுக்கொள்ள லாம்" என்பதிலளித்ததும் அத்துரியோதனனுக்குத் துணையாக பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர், கர்ண னென்னுங் காளை முதலிய வீரசிங்கங்க ளிருப்பதை யுன்னி, அவர்களிற் சிலரைப் பேதோபயத்தால் வேறுபடுத்தி, முடி வில் கர்ணனைத் தனியே யழைத்து "வள்ளலே! பாண் டவ ரைவரும் நின் தம்பிய ராவர்; பூர்வம் துர்வாஸ, மஹரிஷியிட மிருந்து கற்றமந்திரத்தின் மகிமையால் உங்க ளறுவரையும் குந்தி பயந்தனள். இம்மாநில அரசுரிமை யைத் தாங்களன்றி வேறு யாவர் அடையக்கூடும்? ஆத லின் இச்சமயம் நீ நினது தம்பிமார்களைச் சார்தலே சாலச் சிறந்தது" என்றுரைத்தனர் கிருஷ்ணமூர்த்தி. இத னைக்கேட்டதும் கொடையிற் சிறந்த கர்ணன் தன் மாமனை நோக்கி, "தங்கள் வாய்மொழியால் என் பிறப்பின் உண் மையை யறிந்த காரணத்தால் இன்று நான் என் தம்பியர்

பக்கல் சேர்வனேல் இக்காசினியி லுள்ளார் என்னை ஏசு வாரன்றே? உள்ள நாள் உள்ளமட்டும் உண்பித்து வளர்த் தவனைக் கைவிட்டு என் தம்பியர் மீது காதல்கொண்டு அவரைச்சார்ந்து வாழ்த் தலைப்படின் செய்ந்நன்றி கொ ன்ற மாபாதகத்திற்கு உள்ளாக வேண்டுமென்பது திண் ணம்" என மறுத்ததும் கிருஷ்ணபகவான் ஒன்றும் முறை க்க வழியில்லாது குந்தியைக் 'கானம் பால் செல்' கென மொழிந்தனர். மந்தைக்கு மேய்ச்சென்ற பசு, மாலையில் தன் குழக்கன்றின் நினைவு வந்ததும் விரைவாய் வீடு வந்து சேர்வதேபோல் குந்தி தேவியும் தன்மூத்த புதல்வனைப் பார்க்கப் பாக்கியம் பண்ணினேனென்ன மகிழ்ந்து அதிசீக் கிரமே கர்ணனது மாளிகை யடைந்தனள். குந்தியின் வரவை வாயிற்காவலரால் அறிந்த கர்ணனும் விரைந்து வந்து அத்தேவியின் பாதகமலங்களில் வீழ்ந்திறைஞ்சி உள்ளே அழைத்துச்சென்று பொன்னாற்செய்த பீடமொன் றில் இருக்கச்செய்து "அன்னையே! தாங்கள் ஈங்கு வந் தது என் நற்றவப்பயனே! வந்த காரண மென்னையோ" என்று ஆவலுடன் வினவினன். வினவியதும் அம்மாது "என் கண்மணியே! யான் இளமைப்பருவத்தில் எனது தாய் தந்தையருடன் இன்பமாய் வாழ்ந்து வருகையில் அங்கு வந்த தூர்வாச முனிவருக்குச்செய்து வந்த வந் தனை வழிபாடுகளால் அம்முனிவரிட மிருந்து மைந்தரா ளித் தரவல்ல ஐந்து மந்திரங்கள் அறிந்துகொண்டேன். அறியாப் பிள்ளையாதலின் அம்மந்திரத்தின் உண்மையினை யறிய ஆவல் பூண்டு முதன் மந்திரத்தை யுச்சரித்த மாத்தி ரத்தில் கதிரவனது பேரருளால் உன்னைப் பயந்தேன். அக் காலை யான் மங்கைப் பருவம் வாய்க்காத நங்கையாயிருந்தே னாதலின் வடுவஞ்சி அக்கணமே உன்னை ஒரு பெட்டியி

லடக்கிக் கடலிடை விடுத்தேன் மதியீனத்தால்" என்று கண்ணீர் சொரிந்தனள். மாயனார் தந்திர மிதுவென மதித்த கர்ணன் "தேவியே! தாங்கள் என்னை ஈன்றெடுத்த தாயென் றுரைத்தும் அதனை நம்புவதற் கிடமில்லை. ஏனெனில், என் குலத்தினையும் மரபினையு மறியாது பலரும் என்னை ஏளனஞ் செய்ததனால் வருந்தி யிருந்தேனாதலின் பணம்பேய் கொண்ட பெண்கள் பலர் தாம் தாம் தாயென்று விளம்பித் தனத்தை நணிமிகப்பெற யத்தனித்தனர். அது கண்டு யான் தேவர்களை வேண்ட அவர்கள் என்மீது கருணைகூர்ந்து மெய்யான தாயைத் தவிர்த்து மற்றெவர் உடுப்பினும் அவர்கள் துணைபுறுவர்' என்று கூறி ஓர் பட்டாடையை உதவினர். அங்ஙனமே என்னை வந்து சார்ந்த பல பெண்களை யான் அவ்வாடையினால் பரீட்சித்ததும் அவர்கள் அத்துகிலினால் என்புரு வாயினர். ஆதலின், இதுகாலை தாங்கள் அவ்வாடையினை யுடுத்து உபத்திரவமின்றியிருப்பின் உங்களை யான் உண்மைத் தாயெனத் தேர்தல் கூடும்" என்றதும் அத்துகிலினை வாங்கி 'மடியில் கனமிருந்தாலல்லவா வழியிற் பயமுண்டு.' அதுவே போல 'நான் மெய்யான அன்னை யென்பதை நீ இத்துகிலால் அறிந்துகொள்' என்று அதனை யுடுத்து ஒரு சிறிதும் உபத்திரவ மடையாது வீற்றிருந்தனள் பாண்டுவின் மனைவி! அக்கணமே கர்ணன் தன் அன்னையின் அடியிணைகளில் வீழ்ந்து ஆனந்த பாஷ்பத்துடன் உடல் புளகாங்கிதமா யிருக்கையில் குந்திமாதேவி தன் மைந்தனை ஆதரத்துடன் இருகையாலும் வாரியெடுத்து மார்போடணைத்து முத்தமிட்டு "அந்தோ பாவியேன் உன்னைப் பரிவுடன் வளர்த்தெடுக்கப் பாக்கியம் செய்திலனே!" என்று வாய்விட்டலறி மீண்டும் தன் புத்திர ரத்தினத்தைநோக்கி

"மதலாய! உன இளைஞா ஐவரும நினது மலரடியினை அனபுடன் வணஙகி உரிமையுடன மனமொதது ஏவல் புரியவும பூவுலகததிலுளள பாாததிப ரனைவரும வநது வணஙகவும உனது வீரமும செலவமும விளஙகவும பார னைதமையும ஒரு குடைககீழ் ஆண்டு குரு குலததரசாக ளுக் கெலலாம அரசனுய் வாழ வருவாய்! என கண்ணே! மாணிககமே!" என று மிகவும இரஙகி வேணடினள அக காலை கர்னன "அனனுய்! இனறுை என அறியா எனனை அனைவரும தோபபாகன் மகனென ஏசிபபேசியும அதை யொரு பொருட்டாக மதியாது அனறே எனககு முடிக விதது மனனா பலரும வநதிறைஞச அரசுதநது என னுடனுணடு உரிய தமபியரும சுறறததாரும எனனடி வணஙகத தோறறமும ஏறறமும அளிததான துரியோ தனன. மேலும அததுரியோதனன ஒருநாள வேட் டையி னிமித்தம கானகஞ் சென றிருந்த காலையில யானும அவன மனைவியான பானுமதியும ஏகாநதமான இடததில சூதாடிக கொணடிருககு, அமமனனன தூரததில வரு வதை யறிநத பானுமதி சடிதியில எழுநது செலல, அவன வருகையை யுணராதயான ஆடடததின நடுவே எழுநது செலவது தகாதெனறு அவள மடியினைபபறறி யிழுகக, அவ ளது மேகலாபரணம அறுநது மணிகளெலலாம சிநதிககிட க்கையில துரியோதனன வநது "காறு என்னசெய்தாய" என்றும கேளாது எனனை ஆாவமுடன நோக்கி "அண்ணு! நான இமமணிகளைப பொறுக்கவோ அலலது கோககவோ? யாதுகட்டளை யிடுகினறீா" என்று அகம மலர்நது நகை யரும்பி நினற இராச ராஜனுககும பாண்டவர்க்கும போரென றறிநதும அவனுககாகப போா முனையிறசெனறு உயிா கொடுககாது பஞசவாகளைச சேர்நதுவாழின என

ஆண்மையும் வீரதீரமும், உதாரத்துவமும் என்ன பயனு டைத்து? அன்றியும் நான் அவனுக்கு இதுவரை யாதொரு உதவியும் செய்யாதிருக்க அவன் அளவில்லாத உதவியினை வலுவில் செய்தானன்றோ? ஒருவன் நமக் குத் தினையளவு நன்மை புரியின் அதனை யாம் பனையனைத் தாகவல்லவோ கொள்ளல் கடனாகும். எனவே அம்மன் னர் மன்னன் பனையனைத்து உதவிபுரிந்திருக்க, அதனை மறந்து உன் புத்திரர் பக்கல்சென்று சேர்வது அழகோ! ஆண்மையோ! அல்லது அறந்தானாகுமோ? இனியும் கேள் ஆவின் மடியினை யறுத்த மாபாவிகட்கும், மகளி ர் கருவினைச்சிதைத்த கொடியோர்க்கும், பார்ப்பனர்க் குக் கொடுமை புரிந்த பாதகர்க்கும் ஒருவிதமான பிராயச் சித்தம் இருப்பினும், செய்ந்நன்றி கொன்ற ஒருவனுக்கு உய்வு ஒருநாளும் இல்லை எனவே இத்தகைய கொடிய பாதகத்திற்கு நான் உள்ளாவது தங்களுக்குச் சம்மத மாகுமோ? சம்மதமாகாதாகலின், பிறைச் சந்திரன் வள ருங்கால் அதனிடமிருக்கும் குறுமுயல்தானும் உடன் வளர்ந்து அப்பிறை தேய்த்தாலும் தேய்வதேபோல், என்னை இதுகாறும் வளர்த்து வந்த துரியோதனன் வைப வங்களுடன் வாழ்ந்துவந்த காலையில் அவனிட மிருந்தது போலவே, அவனுக்கு ஆபத்து வந்த காலத்திலும் அவ னுடனிருந்து வேண்டிய உபகாரத்தை மனமாரச் செய்யி னன்றோ என் பெயரும் புகழும் நிலைத்திருக்கும். ஆதலி னால் அன்னையே என்னை நரகிற் சென்று சாரும் வண்ணம் செய்யாதீர். இதனைத் தவிர்த்து தாங்கள் எதை விரும்பி னும் அதனைக் கொடுக்க உடன் படுகிறேன். இது நிச சயம். பலபேசிப் பயனென்? பூசலோ விளைந்தது, நீர் இங்குவந்த காரணமென்" என மிகவும் பணிவுடன்

புகன்றான். இதனைக்கேட்ட குந்தியோ அன்று தன் மகனைப் பேழையில் விடுத்ததை விடப் பன்மடங்கு வருந்தி வாய்குளறி நொந்தழுதாள். உடனே மகனும் தாயின் கண்ணீரைத் துடைத்து இனிவருந்திப் பயனென்ன? என்று தேற்றியதும் "மைந்த! பார்த்தன் நின்னுடன் போர்புரியின் உன்னிடமிருக்கும் நாகாஸ்திரத்தை ஒரு முறையேயன்றி இருமுறைவிடாதிருப்பாய், மற்றும் அர்ச்சுனனொழிந்த மற்றைத் தம்பியரோடு மலையாதிருத்தல் வேண்டும்" என்று ஒப்பற்ற இரண்டு வரம் பெற்றாள் குந்தி. பின்னர் கர்ணன் தன் அன்னையை நோக்கி "தாங்கள் என்னிடமிருந்து இரண்டுவரம் பெற்றீர்கள். அதுவே போல் தாங்களும் எனக்கு இரண்டு வரம் கொடுத்தல் கடமை. ஒன்று, தனஞ்சயனுடன் நான் போர்செய்து அவன் கையால் மாளுவனேல் அக்காலை எவருமறிய என்னைத் தங்கள் மைந்தனென்று உரைத்து எனக்குரிய ஈமக் கடன்களை என் தம்பியரால் நிறைவேற்றல். மற்றொன்று பாரதப்போர் முடியுமளவும் நான் தங்கள் புதல்வன் என்பதைப் பாண்டவருக்கு அறிவியாதிருத்தல்" என்றதும், குந்திதேவி அங்ஙனேயாக என்றியம்பி மூத்த புதல்வனைக் குறித்து வன்துயர் மேன்மேல் வளர அழுதழுது தன் மதலையைத் தழுவிச் சென்றனள். பின்பு கடை நாளில் கர்ணன் "தருமன் மகன் முதலான அரியகாதல் தம்பியரோடு எதிர் மலைந்து தறுகண் ஆண்மைச் செருவில் எனது உயிரனைய தோழற்காகச் செஞ்சோற்றுக் கடன் கழித்தேன்" என மிகவும் அகமலர்ந்தான்.

---

# 12-வது கதை. நடுவு நிலைமை.

திருக்குறள்.
சமன செயது சீதூககுங கோலபோல மைந
தொருபாற கோடாமை சானறோககணி

பரிமேலழகா உரை —முனனே தான சமஞக நினறு பின் தன கண வைதத பாரதகை வரையறுககுநது லாம்போல, இலககணஙகளான அமைநது ஒரு பககததுக கோடாமை சானறோககு அழகாம.

குறிபபு:—தராசு முன தான சமஞகவிருநது பினனும தன்னிடம வைககபபடட பாரததைச சரியாக அளவு செய்வதுபோல, வாதிப பிரதிவாதிகள ஆகிய இருவரது ஆசேஷப சமாதானஙகளை ஆழநதறிநது நியாயததை நன குணாநது வெளிபபடுததி, ஒரு திறததாரிடம சாாபாயிருநது நீதிதவறுதிருததல, அறிவிற சிறநத பெரியோாககு அழகாகும. இதன உண்மையையும தவறின அதன் கெடுதியையும வறபுறுததும பொருட்டு அதிவீர ராம பாண்டியனும தாமியறறிய வெறறி வேறகையில,

“ இருவா தம சொலலையும எழுதரங கேட்டே
இருவரும பொருநத உரையாராயின
மனுநெறி முறையின வழககிழநதவா தாம
மனமுற மறுகி நினறழுத கணணீா
முறையுறத தேவா மூவா காககினும
வழி வழியீா வதோா வாளாகுமமே ”

எனறு கூறியுள்ளாா. இநநீதிகளை ஒரு சிறிதும உணராமாநதர் சிலர் நியாயம கூறபபுகுவதாக நடிதது பட்சபாதபபடுவது பேதமையினும பேதமையனறோ?

உதாரணம் :—இககாசினியில பூதவுடப்பழிந்தும் புகழுடமபுடன் விளஙகி யிருககும பஞ்சபாண்டவர்கள் முன்னாளில், மயனென்னும அசுரதத்சனால கட்டி முடிக்

கப்பெற்ற அழகு வாய்ந்த மாளிகையில் இனிதே காலங்கழி த்து வருநாளில் ஒருநாள் நாரதமுனிவரது தூண்டுதலினால் இராஜசூயமெனனும் அரிய பெரிய வேள்வி யொன்று இயற்றத்தலைப்பட்டனர். அந்த யாகத்தைச் செவ்வனே நிறைவேற்ற ஏராளமான பொருள் வேண்டியிருந்ததனால் வீரசிகாமணிகளாகிய பீமன் அர்ச்சுனன் முதலியோர் நாற் றிசைகளிலும் தண்டெடுத்துச் சென்று பலதேசத்து மன் னர்களிடமிருந்து அளவற்ற தனத்தைக் கொணர்ந்து சேர் த்தனர். இந்நில வுலகத்தில் நிலைபெற்ற தாமம், அர்த்தம், காமம் என்ற மூன்றனுள் நடுவே யுள்ளதாகிய அர்த்தம் (தனம்) இருப்பின் எக்காரியந்தான் கைகூடாது? ஆதலின் பஞ்சபாண்டவர்கள் பணத்தின் உதவியைக்கொண்டு யாக த்தைக் குறைவற நடத்தத்தொடங்கினர். யாகம் தொட ங்கி முடியும் நாள்வரையில் ஒவ்வொரு தினமும் விப்பிரசி ரேஷ்டர்களுக்கும் க்ஷத்திரியர் முதலிய பலர்க்கும் அன்ன மிடுவது இக்காலத்திலும் நியதியாக நடந்து வருகின்றதென் பது வெளிப்படை. மேலும் இராஜாதிராஜனாகிய தரும புத்திரன் யாகமியற்றுங்காலையில் ஒவ்வோர் தினத்திலும் இலட்சக்கணக்கான ஜனங்களுக்குப் போஜன மளிக்கவே ண்டு மன்றோ? ஒவ்வொரு வேளையிலும் குறைந்தது நாலை ந்து பந்தி மனிதர்கள் சாப்பிடவேண்டி நேரிடும். ஒரு பந்தி ஜனங்கள் அன்னமருந்தி எழுந்ததும் அதேயிடத் தைச் சுத்தம் செய்து மறுபடியும் இலைகள் போட்டுப் பரி மாற வேண்டிவரும். வேதங்களை நன்குணர்ந்த வேதியர் கள் ஒரு பந்தி ஜனங்கள் உண்டெழுந்த இடம் மிகவும் நன் றாகச் சுத்தம் செய்யப்பட்டிருப்பினும் அவ்விடத்தில் உட்கார்ந்து அன்னம் புசிக்க ஒருப்படார். ஆதலினால் இக்குறையை நீக்க உபாயம் யாதெனத் தருமபுத்தி

ரா ஆலோசிக்கையில் பாண்டவர்களுக்கு உதவிபுரிவதையே விரதமாகக் கொண்ட கண்ணபிரான் "மைத்துன! ஸப்த சமுத்திரங்களுக்கு அப்பால் தீவு ஒன்றுளது அவ்விடம் புருஷாமிருகம் (மனிதமுகமும் மிருகவுடலும் பொருந்திய பிராணி) வாசம் பண்ணுகிறது. அதைப் போன்ற பரிசுத்தமான பிராணி வேறெதுவுமில்லை ஏனெனில் அதன் காற்றுவாடை பட்ட இடமனைத்தும் மிகுந்த பரிசுத்தமான பூமியாகிவிடும். ஆதலின் அம்மிருகத்தைத் தருவித்தல் வேண்டும்" என்றனர். அசாத்தியமான காரியங்களனைத்தையும் முடிக்கவல்ல ஆற்றல் வாய்ந்த வீமசேனனை யழைத்து "மைந்த! எழுகடலுக்கும் அப்பால் ஒரு தீவில் புருஷாமிருகம் இருக்கின்றது. அம்மிருகம் மிக்க பலமுள்ளது. அம்மிருகம் வந்த பின்னரே நாம யாக காரியம் தொடங்கவேண்டும் அன்னசாலையில் அம்மிருகத்தின் காற்று வாடை வீசிய மாத்திரத்தில் அச்சாலை பரிசுத்தமாகும். ஆதலின் இப்பொழுதே நீ சென்று அதை இங்கு அழைத்துவரப் புறப்படவேண்டும். அம்மிருகத்தின் விருத்தாந்தம் ஒரு சிறிது உனக்குச் சொல்கிறேன் கேள். நீ அம்மிருகத்தைக் கண்டதும் 'நீ வந்தால் தான் எங்களது யாகம் இனிது நிறைவேறு' மென வேண்டிக்கொள். அதுவும் உடனே சம்மதி செய்யு மென்பதற்குத் தடையில்லை ஆயினும் அது உன்னை ஓர் உறுதி கேட்கும் அஃதென்னையெனின் 'நீ எனக்குமுன் சில காததூரத்திற் கப்பாலேயே முன் சென்று கொண்டிருத்தல் வேண்டும் அவ்வாறு என்னால் குறிக்கப்பட்ட காததூரத்திற் கப்பாலேயே நீ செல்லாது போனால் நீ எனக்கு இரையாக மனமிசையவேண்டும்' என்பதே. அம்மிருகத்தினால் குறிக்கப்பட்டகாத தூரத்திற் கப்பா

லாகவே நீ செல்ல முடியாது போய்விடும். அங்ஙனமா
யின் நீ அப்பிராணிக்கு உணவாகாதிருக்க ஒரு வழியு
ண்டு. என்னவென்றால் அம்மிருகம் மிகுந்த சிவ பக்தி
யுள்ளது வரும் வழியில் கோயில்கள் காணப்படுமேல்
அக்கோயிலை மூன்று முறை வலம் வந்து ஈசனுக்குத் தப பூஜை
புரிந்தபின்பு உன்னைத் தொடர ஆரம்பிக்கும் அது
பூசை புரியும் நேரத்திற்குள் நீ வெகு காத தூரம் வந்து
விடலாம். நான் சொல்லும் மந்திரத்தை, அம்மிருகம்
உன்னைக் கிட்டிய பொழுது உச்சரி. உடனே ஒரு சிவாலய
மும் அதனைச் சுற்றி நந்தவனமும் தடாகமும் காணப்படும்
அம்மந்திரத்தின் உதவியால் நீ அம்மிருகத்தின் நிபந்தனை
க்குத் தவறி உயிரிழக்காது சுகமே திரும்பி வரலாம் என
றாலும் நீ அம்மிருகத்தை யழைத்துக்கொண்டு பட்டினம்
வந்து சேருமவரையில் மூன்று முறைதான் உச்சரிக்கலாம்.
நான்காவது முறை உச்சரித்தாலும் அதன் பயன் சித்திக்
காது. ஆதலினால் மூன்றாவது முறை மந்திரத்தை உச்சரிப்ப
தற்குள் இராஜ்ஜியம் வந்து சேரும்படி அதனைக் கடுகி வழி
நடந்து வருதல் அவசியம்" என்று அச்சிவ மந்திரத்தை
யுபதேசித்தார் கிருஷ்ண மூர்த்தி. உடனே பீமசேன
னும் தன்னாலியன்ற வளவு விரைந்து சென்று அப்புருஷா
மிருகத்தைக் கிட்டி, தான் வந்த காரியத்தை அதனிடம்
வணக்கத்துடன் தெரிவித்தான். மிருகமும் பீமனது
வேண்டுகோளுக்கிணங்கி "வீரசிரேஷ்ட! நான் உன்னு
டன் வந்து வேண்டிய உதவி புரியத்தயாராயிருக்கிறேன்.
ஆயினும் ஒரு நிபந்தனை உள்ளது. அதாவது நீ எனக்கு
முன் நாற்காத தூரத்திற்கு முன்னேயே செல்லவேண்டும்.
நான் உன்னைத் தொடர்ந்து வருவேன். அங்ஙனம் வருங்
காலையில் நீ என் எல்லையில் அகப்படுவாயாகில் உன்னை

நான் வயிறார உணபேன எனபதறகு எளளளவும ஐய மில்லை!! என்றது.

வாயுமைநதனும அங்ஙபநதனைககுடபட்டு, தனதந்தையை மனததில தியானிததுககொணடு காறறிலும கடுகி நடநதுவநதான புலிககுப்பிறந்தது பூனையாயப்போகாது எனற பழமொழி உணமையாயினும அமமிருகம நடநது வரும இடததினினறு நாறகாத தூரததிறகபபால நடநது வரமுடியலை ஆகவில்லை. மிருகமோ அவனைக கிட்டிவிட்டது. உடனே கிருஷ்ணபகவான கறறுககொடுதத மநதிரததை யுசசரிததான மநதிரஙகளின் மகிமை ஒருகாலும் பொயககாதாகலின அககணமே வாவியுடன சூழநத நநதவனததுடன சிவாலயம தோனறியது அதனைககண்ட புருஷாமிருகம மிகுந்த பகதி விசுவாசததுடன தடாகத்திலிறஙகி நீராடி நநதவனததிலிருநத பூககளைககொயது சிவபிரானைத துதிதது வணஙகி ஆடிபபாடியது. இதறகுள் பீமன பிழைததேன பிழைததேன என நெடுந்தூரம ஓடி வநதான. இமமாதிரி புருஷாமிருகம தனனை நெருங்குமிடஙகளில மநதிரஙகளை யுசசரிகக அஙகஙகுத தோனறிய சிவாலயததில தரிசனஞசெயது பினனரே புருஷாமிருகம் வழிநடககத தலைபபட்டது. முடிவில் பீமன் தன் இராஜ ஜியததிறகு அதிக சொறபதூரததில மிருகததின எலலையில ஒருகாலும தன எலலையில ஒருகாலுமாக நடககுஞ சமயதது அபபுருஷாமிருகம பீமனைப்பறறி "அபபனே! நீ என எல்லையில அகபபட்டுககொணடாய் ஆதலின் எனக்கு ஆகாரமாக போவதைததவிர உனக்கு வேறு வழியில்லை" எனறது. பீமனோ "இதென்ன விநதை? என் எல்லையில்தானே நானிருககின்றேன். எல்லை தபபிப்பிடித்தால நான் உனக்கு இரையாவதெப்படி" என்றான். இவ

விதம புருஷாமிருகமும பீமனும நெடுநேரம் வாதாடி யாதொரு தீர்மானததிறகும் வராமல கடைசியில தரும புததிரரிடஞசென்று தஙகள வழககைச் சொல்லிக்கொணடனா. தருமததின வேலியெனப் புகழ்பெறற தருமராஜன இருவாவாய மொழியையுஙகேட்டு பீமனைப்பாாதது 'தமபி! மிருகததின எலலையைததாணடி உன ஒருபாதி யுடலேயிருநதது ஆதலின அபபாதியுடலே உனதாகும். மறறைபபாதி மிருகததின எல்லையிலிருநததனுல் அபபஙகு மிருகததிற்கு உரிததாகும், எனறுசொலலி மிருகத்தினை நோககி "உன எலலையில பீமனது ஒரு பாதியுடலேயிருநதது அதனை நீ தட்டினறி யுணணலாம" எனறனா. தருமபுததிரரது நடுவு நிலைமையைககணட சபையோரனைவரும அவரை வியநது புகழநதனா மிருகமும அரசன தனதமபியென கிஞசிததும அவன மீதிரஙகி நடுவு நிலைமை தவறாது கூறிய வாய்மொழியைககேட்டு "அரசே! தஙகள தமபியின உடலைததினன எனககு இஷடமிலலையெனினும தஙகளது பட்சபாத மின்மையைப பலாககும அறிவிகக எண்ணியேனே யனறி வேறிலலை" எனபபுகன்று பீமனது உடலைததின்று தொழுநது, பினனா தருமபுததிரா தான எடுதத யாகததை நன்கு நிறைவேறறிச சுகமே வாழநது வநதார்.

இககாலததிற சிலா ஒருவனிடமிருந்து சிறிது தனம் பெறறு அதன பொருட்டுத தஙகளது மனசசாட்சிககு விரோதமாய்த தாஙகள் கண்ணுாரக் கண்ட நியாயததையுஞ சொலலாது நடுவு நிலைமை தவறி பொய்க்கரி புகல முன் வருகினறனர். அது பேதமையினும பேதமையன்றோ? அததகையோர் பின்வரும பாடலைக்கனவிலும் நனவிலும் கருதுவாராக

ஆரம் பூண்ட மணிமார்பா! அயோத்திநகரரசே! அண்ணா கேளாய்
ஈரமிருக்க மரமிருக்க இலைகளுதிர்ந்த வாறேது?
வாரங்கொண்டு வழக்குரைத்துமணமேல் நின்று வலிபேசி
ஓரஞ்சொன்ன குடியதுபோல் உதிர்ந்து கிடக்கும் தம்பியரே.

## 13-வது கதை. அடக்கமுடைமை.

திருக்குறள்
யாகாவா ராயினும் நாகாக்க, காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

பரிமேலழகர் உரை.—தம்மாற் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும் நா ஒன்றனையும் காக்க; அதனைக் காவாராயின் சொற்குற்றத்தின்கண் பட்டுத் தாமே துன்புறுவர்.

குறிப்பு:—மாந்தரனைவரும் தங்களது ஐம்பொறிகளையும் மனத்தையும் அடக்கியாள வேண்டுவது அவசியம். அவ்வாறு அவைகளெல்லாவற்றையும் அடக்கச் சக்தியில்லாது போவாரேயாயினும் நாவை மட்டுமாவது அடக்கித் தீய சொற்கள் நாவினின்றும் வெளிப்படாதிருக்க முயல்வது இன்றியமையாத காரியம். அங்ஙனம் நாவடக்கமில்லாது வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்வார்களேயானால் மிகவும் வருந்தநேரிடும்.

உதாரணம்:—பூமகளும் நாமகளும் பொலிந்து வாழ்ந்த சோழநாட்டினகண் ஆறைநகரில் ஏகம்பவாணன் என்னுமோர் சீமான் வாழ்ந்துவந்தான். பூர்வ ஜன்ம புண்ணியத்தால் அவனுக்கிருந்த செல்வம் இத்துணைத்து என்று சொல்லப்புகின் தமிழ் மூவேந்தர்களாம் சேர சோழ பாண்டியருக்குச் சமானமாக அத்துணை வாழ்வுடனிருந்தான் என்று சொல்வதே சரியாகும். அக்கா

லததிருநத பிரபுககளில முதன்மையாக அவன எண்ணப படடு வநதானாதலின மூவேநதாகளும அவன பதவிககுரித தான கௌரவமளிததே வநதனா. ஓாநாள அமமனனா மூவருமம ஏசுபபவாண முதலியாரைக காணவநத சமயததுத அவன கழனிககுச சென்றிருநதனன. இதனையறி யாத வேநதா, முதலியாா மாளிகையில உளரோ என்று விசாரிகக அவவேசுபபனது மனைவி "முதலியாாகழனி காணபபோயினா" என்றனள. அதுகேடட வேநதா முதலியாா முடி நடபபோயினரோ என்று ஏளனமாகப பொருளபடுமபடி கூறினா. உடனே மனைவி தன கண வனை மூவேநதருமம பரிகசிககின்றனர் என்றுதோநது அவா களைநோககி "இராஜ சிஙககஙகளே! முதலியாா முடி நடு வதுமெய்யே! அவா கேவலமாய் நாறறு முடிநடாா. ஆனால வேநதாகளது முடிகளைபபறிதது, அவாகளது சேனைக ளைச சினனபினனமாககி, உயுததகளமாகிய கழனியில அவறறை எருவாக இடடு, அககழனி நிரமபச் சிவநதரதத மாகிய நீரைததேககி, தாம ஏறிசசெலலும படடதது யானையாம பகடடைவிடடுது மிதிககசசெயது சேறாககி, அககுழைசேறறில தான பறிததெடுதத வேநதா முடிகளை வரிசையாக நடடு, வெறறியாம வேளாணமைசெய்யவே சென்றிருககின்றனா" என்று பொருளபடுமபடி,

சேனை தலையாககிச செஙகுருதி நீரதேககி
ஆனைமிதிதத அடிசசேற்றில—மானபரன்
மாவேநதனே கம்பவாணன் பறிததுநட்டான
மூவேநதர் தஙகள் முடி.

என்றொரு வெனபா எழுதியனுப்பினள. அவர்கள் அப பாடலைப பாாதது "ஓ! பெண்பால் பிதறறிய வார்ததை" யென அலட்சியஞ் செயது தஙகள் நாடு திரும்பினர்.

சிறிது நேரத்திற் கெல்லாம் கழனிக்குச் சென்றிருந்த முதலியும் வீடு வந்து சேர, அவன் மனையாள், மூவேந்தர் வந்து ஏசியதையும், தான் அதற்குப் பதிலளித்ததையும் அறிவித்து எவ்விதத்திலேனும் அம்மூவேந்தரையும் மானபங்கப் படுத்தாது போனால் தான் கூறிய வாய்மொழி பழுதுறுமென வணக்கத்துடன் விண்ணப்பித்துக் கொண்டனள். ஏகம்பனும் சேர சோழ பாண்டியரது அகம்பாவத்தை யடக்கவேண்டுமெனக் கருதித் தன்னிடமிருந்த பூதத்தை யனுப்பிச் 'சேரனைத் தூக்கிவா' என்றனன். அவ்வாறே பூதம் இரவிற் சென்று சேரன் உறங்கிக்கொண்டிருந்த மஞ்சத்துடன் அவனைத் தூக்கி வந்து சேர்த்தது. சின்னாள் காறும் சேரனைச் சிறையிலடைத்து வைத்துப் பின்னர் யாரால் கேட்டேன் நோயால் (வாயால்) கேட்டேன் எனும் பழமொழியைச் சிந்தித்து வருந்திய சேரன் வேண்டுகோளுக்கிணங்கி அச்சேரராஜனை விடுவித்தான். ஏகம்பன் அம்மாதிரியே பூதத்தின் உதவியால் சோழனையும் சிறை செய்தான். சோழனும் "ஐயகோ! அடங்கா மன்னர்களை யெல்லாம் புறங்கண்டு இப்பாரெங்கும் புகழ்க்கொடி நாட்டி வெற்றியுடன் வாழ்ந்து வந்த நாம் இக்காலை நம் குடிசனங்களில் ஒருவனாகிய ஏகம்பனிடம் சிறைப்படவும் காலம் நேர்ந்ததே! ஆ! படுகுழியில் சிக்குண்ட களிறு போலப் பிரலாபிக்கவும் விதிபோலும்" என்று வலையிலகப்பட்ட சிம்மம் போலப் பொருமி யிருந்தான். வாய்ப் பதட்டம் வரிசை கெடுக்கும் என்னும் முதுமொழி பழுதுபடாதன்றோ! நாள் சில கழிந்ததன்மேல் சோழன் சிறையினின்று விடுவிக்கப்பட்டுத் தன் நாட்டையடைந்தான். கடைசியிற் பாண்டியனிடம் பூதத்தை யேவ அவன் வேப்பமாலை தரித்துள்ளானாதலின் பூதம் அவனை யணுகப்பயந்து

திருமபிவிட்டது. அதனை யறிநத ஏகம்பன் வேப்பமாலை தரிததிருககும வரையில பாணடியனிடம பூதம செல்ல முடியாதாகலின வேபபநதாரை வஞசனையாய்க கவா க்கருதி நாட்டியப பெண்களில திறமை வாயநத நால வரை ஏவி, தஙகளது ஆடல பாடலகளினல அதனைன வனை மயககி அவன அணிநதிருககும மாலையைப பெறறு வருமபடி அனுபபினன அஙஙனமே அநநஙகையா நால வரும பாணடிய சபையடைநது இநதிர சபையில நர்தத னஞ செய்யும அரமபையாதி கனனியரை விடபபதின மடஙகு ஆடிபபாடி அமமன்னவனை மகிழ்வித்தனர். மதுரை யரசனும ஆனநத பரவசனாய் அப்பெணகளுக்கு விலை யேறபபெறற ஆடையாபரணஙகளை யளிகக அவாகள அப்பரிசை ஏற்றுககொணடாரிலலை ஆயினும பாாத்தி பனை நோககி "அரசே! இது சமயம தாஙகள அனபுட னளிதத பட்டாடைகளிலும முததுமாலை இரததினமாலை களிலும எங்களுககு ஆசை செனறிலது. தாஙகளணிந திருககும வேபபமாலையே நாஙகள விருமபுவது" எனறு ணாததினா அமமொழிகளைச செவியி லேறற பாணடி யன வேபபநதாரை யளிக்க மனமிலலாது மௌனஞ சாதி ததிருநதான. உடனே அநநாரியரில ஒருத்தி "தோழி களே! முனனம இநதிரன மீது கைவளை யெறிநது வெறறி கொண்ட மீனததுவச பாண்டியன ஆறைநகா வாசியா கிய ஏகமபவாணனது பேய வருமெனறஞசி யலலவோ தான அணிநதிருககும வேபபநதாா தநதளிகக உடனபட விலலை" எனறுமை கருததுத தோனற,

இலகு புகழாறை ஏகமபவாணன
அலகை வரும வரும எனறஞசி-உலகறிய
வானவர்கோன் சென்னிமிசை வணகை வளையெறிந்த
மீனவர்கோன ஙகவிடான வேம்பு.

என்னும பாடலைப பாடினள். அது கேட்ட பாண்டியன் பெணகள புனைனிலையில அவமானம நேரிடும்படி மாலைய ளியாதிருபபது சரியனறு! மானம் பெரிதோ பிராணன் பெரிதோ? எனறுன்னி மானமே பெரிதாகலின அதற்கஞசி உடனே மாலையை யீநதனன. பெணகளும் பாண்டியன் உயிருககுச சமானமெனச சொல்லககூடிய மாலையைப் பெறறதும அடஙகா மகிழ்சசிபூணடு முதலியைககண்டு அவனிடம அதனைச சோததனா உடனே ஏகமபன தன் அலகையை (பூதம) யழைததுபபாணடியனைத தருவிதது முன சேர சோழரைச சிறையிலிட்டது போலவே அபபா ணடியனையும அருஞசிறையில வைததனன். சிறிது காலம் சென்றதும பாணடிய மனனன் சிறையினினறும விடுபட் டான முனனம இநதிப பிரதத நகரில இயறறப பெற்றி ருநத ஸ்படிக மணடபததில வழி தெரியாமல திகைதத துரி யோதனுதியரைககணடு பரிஹசிதத துரோபதை அரசவை யில துகிலுரியப பட்டாளனறோ? ஆதலின் எவரும தங கள பஞசேநதிரியஙகளில மறறையதை அடக்கமுடியாது போயினும நாவொனறையாவது அடககியாளல வேணடும. இலலையேல அககுறறததால பெரிதும வருநதுவரெனபது நாம சொலலாமலே அமையும. அனறியும வாய்க்கோழு ப்பு சீலையால் வடிநதது எனற பழமொழியை மறவாது நாவை நனகு அடககி வருவதே சாலசசிறநத தெனபது வெளிபபடை. கீழே காட்டியிருககும பாடலை ஆழ்நத றியபபுகின மேலே காட்டிய கதை உண்மையென நமபு வதற கிடமுண்டு

தேருளப புரவி வாரணத தொகுதி திறை கொணர்ந்து
வரு மனன! நின தேச மேது? உனது நாம மேது.
புகல. செஙகையாழ தடவு பாணரே!
வாரும. ஒதத குடி நீரும நானும், மகதேவன்

ஆறை நகர் காவலன் வாண பூபதி மகிழ்ந்தளித்த
வெகு வரிசை பெற்று வரு புலவன் யான்,
நீரும் இப்பரிசு பெற்று மீண்டு வரலாகும்,
அவன் முன்றில்வாய் நிததிலசசிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம் * ஆரும் நிற்கும்,
உயர் வேம்பும் நிற்கும், வளர்பனையும் நிற்கும்,
அதனருகிலே அரசும் நிற்கும், அரசைச சுமந்த
சில அததி நிற்கும் அடையாளமே.

## 14-வது கதை. ஒழுக்கமுடைமை.

திருக்குறள் ஒழுககத்தின் எய்துவர் மேன்மை, இழுககத்தின
எயதுவர் எயதாப பழி.

பரிமேலழகர் உரை:—எல்லோரும் ஒழுககத்தானே மேமபாட்டை எய்துவர்; அதனினறு இழுககுதலானே தாம் எய்துதறகு உரிததலலாத பழியை எய்துவர்.

குறிப்பு —யாவரும் தஙகள் வருணாசிரம தாமத்தில் தவறாதிருபபரேல் மேன்மையும் புகழும் அடைவர். பிராமணர்களோ தஙகள் ஆசாரததில வழுவின தஙகள் குலததிறகுரிய மேன்மையை யிழபபதுடன தாழநத வருணததிலுதித்தவரினும் கடையோராவர் இஃதுபற றியே விநாய புராண முடையார் 'தாழ்நத வருணததுதிததவரும ஒழுககததால தககோராவர்; மேலாம் வருண ததுதிததிடினும வீழ்நத ஒழுக்கத்தார் இழிவர்" எனறு

* ஆர்=ஆத்திமாலை சூடிய சோழன், வேம்பு=வேபபமாலை புனைநத பாணடியன், பனை=பனை மாலை பூண்ட சேரன், அரசு= மறற அரசர்கள். அரசைச் சுமந்த அததி=அரசாகளைத தாஙகிய யானைகள்.

கூறியுள்ளார். பிறகு ஒழுக்கந்தவறிய ஒருவன் பெயரும் புகழும் பொருளும் கெட்டு, சீர் கேடடைவது மல்லாமல் அவன் மீது பகைமை கொண்ட மற்றவன் விரோதம் காரணமாக அவன் மீது அடாப்பழி கூறுவானாயின் அதனையும் உலகத்தார் அவனது அநாசாரத்தை நோக்கி அவன் அத்தகைய அடாப்பழி செய்திருப்பான் என்று நிச்சயமாய் நம்புவர்.

உதாரணம்:—பல்வளங்களும் நிரம்பப் பெற்ற பாடலிபுத்திரத்தில் வெகு நாளைக்குமுன் சௌந்தரன் என்னுமோர் அந்தணனிருந்தனன். அவன் வேதாகமங்களை ஐயந்திரிபறக்கற்றவன்; சாஸ்திர புராணங்களின் கடலைக்கரை கண்டவன், மிகுந்த ஆசாரசீலன், சுருங்கச் சொல்லின் அறிவு, ஒழுக்கம், இவைகளில் வேதியர் திலகமாக விளங்கிவந்தான். ஆதலின் அந்நாட்டிலுள்ள அனைவரும் அவ்விப்பிரனைத் தெய்வத்திற்கு அடுத்த படியாக மதித்து மரியாதை செய்து வந்தனர். அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும் என்பது முதுமொழியன்றோ? ஆகவே அந்நாட்டரசன் தனக்குச் சந்தேக விபரீதம் நேர்ந்த பொழுதெல்லாம் அவ்வந்தணனை வரவழைத்து அளவளாவியறிந்து வந்தது மல்லாமல் தனக்கு அவகாசம் கிடைத்த காலங்களில் சாஸ்திரங்களின் உண்மைப்பொருள்களை அவனிடம் உசாவி வந்தான். இவ்வாறு மிகுந்த வைபவத்துடன் அரசனாலும் பிரஜைகளாலும் யாவரும் எய்தற்கரிய புகழும் கௌரவமும் பெற்று வந்த சௌந்தரன் இல்லறத்தைச் செவ்வனே நடத்தி வேதியர்க்குரிய ஒழுக்க வழக்கங்களில் ஒரு சிறிதும் குறைவின்றி வாழ்ந்து வருகையில் ஒரு நாள் மாலைப் பொழுதில் நீராட நதிக்கரை சென்றனன். சென்ற நெறியில் எதிர்ப்பட்ட இழிகுல மங்கையைக்

கண்டு மதிமயங்கி அவளது இயற்கை யழகிற்குத்தன் மன த்தைப் பறிகொடுத்து வெற்றுடம்புடன் வீடு திரும்பினான் திரும்பியுமென்? அன்றிரவு கழிவது அவனுக்கு ஒரு யுக மாகவே காணப்பட்டது. மறு தினம் மாந்தி செல்லுகை யிலும் அக்கன்னிகையைக் கண்டு எரியிலிட்ட மெழுகுபோல் உள்ளமுருகி "நங்காய்! இதுகாலை என் விரகவேதனையைத் தீர்க்காவிடின் என் ஆவி ஒரு க்ஷணமும் தரியாது" என்று வேண்டினான். அதற்கு அந்தையல் "விப்ர சிரேஷ்ட! தாங்களோ உயர் குலத்திலுற்பவித்தவர், யானோ நீச குலத் தில் தோன்றியமாது. இதனை யாலோசித்தறியாது காம த்தால் மதி கலங்குதல் நற்றோர்க்கு அழகுமன்று ஆண் மையுமன்று. கற்றறிந்த பெரியோர்க்கு, பேதைப்பெண் ணாகிய நான் அறிவுறுத்தல் பொருந்தாது" என்றிடித்துக் கூறினள். அவ்வனிதையின் வசனம் சௌந்தரன் கொ ண்ட ஆசைக்கனலை அதிகரிக்கச் செய்ததே யல்லாமல் அவித்தபாடில்லை. ஆதலின் அந்தணன் மீண்டும் அப்பெ ண்ணை நோக்கி "இக்காலை என்னைக் களிப்பித்து காமக்க டலினின்றும் கரை யேற்றாது போயின் உன் காலணை யிலேயே என் பிராணனைப் போக்குவேன் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை" என்னும் "யானோ கன்னி கழி யாப்பெண். தங்களுடன் அந்தரங்கமாய் வாழ்ந்து வரின் என் குலத்துளோர் என்னைப் பிரஷ்டை யென்றொதுக்கி விடுவர். ஆகவே என்னை ஆயுளளவும் மனைவியாகப் பாவி த்து என்னுடனிருக்க உடன்படின் தங்கள் மனக்கோ ரின் வண்ணம் நடக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றனள் அத்தெரிவையும். மறையவனும் மங்கையின் மொழியின் வண்ணம் நடப்பதாய் வாக்குறுதி செய்து அந்நிமிஷமே அவளைத் தன் காமக் கிழத்தியாக் கொண்டனன். சிறிது

காலம் வரையில் ஒருவருமறியா வண்ணம் அவளுடன் அந்தரங்க சல்லாபம் பண்ணி வந்தான். நீசப் பெண்ணின் நேசம் ஏற்பட்ட தின முதல் அவனது குலதர்மம் ஒவ்வொன்றாய் அவனை விட்டகன்று வந்தது. பின்னர் தான் வேதவிதிப்படி அக்கினி சாட்சியாக மணம் புரிந்த மனைவி மக்களின் பாசமும் காற்றாய்ப் பறந்தோட, புதிய மனைவியின் இல்லத்திலேயே அல்லும் பகலும் அன்புடனுறைந்து வரத் தலைப்பட்டான். தலைமயிரும் கூரிய நகமும் வெளியிற் பல்லும் தத்தம் நிலைமையில் நிற்கும் வேதியரும் தங்கள் தங்கள் நிலைமையிற் றவறாதிருப்பினன்றோ பூச்சியம் பெறலாகும்? நிலைதவறின் பூச்சியத்தைப் பறந்து விடுமென்பது திண்ணமல்லவா? அவ்வாறே சௌந்தரனும் தந்நிலைமை தவறி நீசப் பெண்ணின் பால் நேசமதிகரித்து அவளுடனேயே காலத்தைக் கழித்து வந்தது மல்லாமல் தனது பூர்வகுலத்தின் தர்மத்தை முற்றிலும் கைவிட்டுப் புலால் முதலியனவும் புசிக்கத் தலைப்பட்டு விட்டான். முன் அவனைக் கண்டதும் வந்தனை வழிபாடு புரிந்து வந்த அரசன் முதல் மக்கள் பலரும் அவனைக் கண்ணுறக் காணவும் சகியாதவர்களாயினர் என்பதை நம் நண்பரே நன்கறியக் கூடுமாதலின் நாம் சொல்லாது விடுத்தனம். நாளடைவில் ஆசாரமிழந்த பாவத்தால் பிராமண தேஜஸையுமிழந்து நீச சாதியிற் பிறந்தவனைப்போலவே காணப்பட்டான் சௌந்தரன். ஆண்டு பல சென்றதும் அப்பெண்ணினிடமாகச் சௌந்தரனுக்குப் புதல்வர் நால்வரும் புதல்வியர் மூவரும் தோன்றினர். ஆள் ஏற நீர் ஏறுமல்லவா? எனவே சௌந்தரன் தன் பாரி குடும்பத்தைக் காப்பாற்ற வகை காணாது கூலிவேலை செய்து வயிறு வளர்க்வும் விதி நேர்ந்தது. என் செய்வான்? அந்தோ பரிதா

பம! பலராலும் பூஜைக்குப் பாத்திரமாய் விளங்கி வந்த சௌந்தரன அவ்வூரிலேயே கூலிவேலை செய்து உண்டு வாழ ஒருப்படுவதெப்படி? ஆகவே அந்நகரைவிட்டு வேறு நகரம் குழந்தை குட்டி குடிசுகளுடன ஓடிவிட்டான. மற்றொரு பட்டணம் சோந்தாலும் நிழல ஒருவனைத் தொடாவதுபோல அவனது தீவினையும விடேன விடேன எனப பின பற்றியது. ஆசாரம் காசிட்டுக்கொளளும் எனனும பண்டை மொழியும பொய்க்காதலலவா? ஆசாரம இருப்பினன்றோ காசும கிட்டும. ஆசாரத்தை அடியோடு விட்டுவிட்டால திருமகளும தன தமக்கையைக காட்டி மறைந்து விடுவள எனபது வெளிப்படை. சௌந்தரன குலாசாரத்தில வழுவாது வேந்தனாலும நன குமதிக்கப்பெற்று வந்தகாலையில அவன பெயரும புகழும பாரெங்கும பரந்திருந்தது. இது சமயம அவன வருணா சிரம தாமத்தில தவறிய பாவத்தால உருமாறி யிருந்தும அவனை இன்னான என உய்த்துணாந்தாரில சிலா அவனைக கண்டு பரிதபிக்கலானா. மற்றுஞ் சிலர் 'அந்தோ! ஆசாரத்தினின்று வழுவின நாமும இப்பாடுபடவேண்டும" என றுணாந்து தங்கள் ஒழுக்கத்தில குன்றாது வாழ முயன்றனா. இங்ஙனமிருக்க ஒருநாள சௌந்தரன கூலி வேலை கிடைக்கப் பெறாது கானகஞ் சென்று விறகு வெட்டிவரச சென்றான. அங்கு வழி நடுவே யிருந்த தடாகத்திலிறங்கி, தாகசாந்தி செய்துகொண்டு கரைதனில சற்றே இளைப்பாறி யிருக்கையில குளக்கரையின மற்றொரு மூலையில பளீர பளீர என மினனுவதைக்கண்டு அவவிடம சென்று பாாசக, முத்துமாலை யொன்றினைக் கண்டு ஆனந்தத்துடன அதனை யெடுத்தான. அவ்வளவு தான தாமதம. கடந்த இரவு பாடலி புத்திரநகரின அரண்மனையில கள

வர் பலர் புகுந்து அரசனது ஆடையணிகளைக் களவாடிப் போயினமையால் காவலனது ஏவலினால் காவலாளிகள் கள்வனைத் தேடிவாராநிற்கச் சௌந்தரனிருக்கும் குளக்கரை வந்து சேர்ந்தனர். வந்து சேர்ந்ததும் அவனிடம் மாலையிருப்பதைக் கண்ணுற்று, கையுங் களவுமாய்த் திருடன் அகப்பட்டுக் கொண்டான் எனக் களித்த சேவகர்கள் சௌந்தரனைப் பிடரி பிடித்திழுத்து வந்து அரசன் சமுகத்தில் நிறுத்தினார். வேந்தனும் சீர்குலைந்திருக்கும் வேதியன் கையில் முத்துவடம் இருப்பது கண்டு இனி சாட்சியம் வேண்டுவதில்லையென உன்னி அவனைச் சிறையிலிடக் கட்டளையிட்டான். அச்சமயம் அருகேயிருந்த மந்திரி அவனை உற்று நோக்கி "நிருப! இதோ நிற்கும் திருடன் முன் நம் சபையை அலங்கரித்திருந்த சௌந்தரன் போலக் காண்கிறான்" என்றனன். மன்னவனும் சற்றே நிதானித்தறிந்து "ஆ! நம் சபைக்கு அணியாய் விளங்கி வந்த சௌந்தரன் என்னத் தடையில்லை, ஐயோ! இப்பாவி தன் பதவியை யிழந்து மல்லாமல் சோரம்பண்ணவும் துணிந்தது விசனிக்கத்தக்கது? என்றாலும் என் செய்யலாம்; நெறி தப்பி நடக்கும் ஒருவனைத் தண்டித்தல் இராஜ நீதியே யாகும். அன்னமிட்டார் வீட்டில் கன்னமிட்டது போல் முன்னர் நம்மரண்மனையில் சிறப்புப் பல பெற்று வரிசையுடன் வாழ்ந்து வந்ததையும் மறந்து நமக்கே இரண்டகஞ் செய்தான்? இவனை என் செய்தாலென்ன? நீதியே யன்றி அநீதியாகாது எனினும் முன்னிருந்த பழக்கத்தால் இவனைத் தண்டிக்கவும் மனம் வரவில்லை. தண்டியாது விடுவதும் சரியன்று" எனக்கலங்கினன். அச்சமயம் விழுந்த பிள்ளைக்கு அரிவாள் மணை உதவியது போல் முன் சௌந்தரனிடம் அருளை கொண்

டிருந்த பிரதானி யொருவன் எழுந்து "அரசே! தாங்கள் இவன் மீதிரங்குவது பொருந்துமாயினும் உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் மாபாவியைக் கொடூர தண் தனைக்கு ஆளாக்காது வறிதே விட்டு விடுதல் தர்மமன்று. இவன் திருடியிருப்பான் என்பதற்குச் சந்தேகமேயில்லை! இவன் கையிலிருக்கும் முத்து மாலையே தக்க சான்றாகும். மோகத்தின் வலையிற் சிக்கி குடும்ப பாரத்தை விருத்தி செய்து கொண்டான் வயிறு வளர்க்க வழி காணாது களவாடத் துணிந்தனன் என்பதற்கு ரஷ்தமேனும் ஐயமில்லை. ஆதலின் இவனுக்கு ஏற்ற பரிசாம் தண்டனையை விதித்தலே சாலச்சிறந்தது" எனப்புகன்றான். இச்சங்கதி நகரெங்கும் பரவவே சௌந்தரனது பழைய மனைவி மக்களும் புதிய பெண்டிர் பிள்ளைகளும் ஓடோடியும் வந்து அவனைக் கட்டிக் கொண்டழுதனர். பட்டணத்திலுள்ள பிரஜைகளனைவரும் கும்பு கூடி அரசவையடைந்து வேடிக்கை பார்த்து நின்றனர். அவர்களிற் சிலர் சௌந்தரன் நிலைமையைக் குறித்து வருந்தினர். மற்றுஞ் சிலர் குலதர்மத்தை யிழந்தவனுக்கு உரிய சிட்சை கிடைத்தல் பொருந்துமென்றனர். வேறு சிலர் பழைய சகவாசத்தை யரசன் நினைந்து ஒருசமயம் மன்னித்தல் கூடும் என்றனர். இவ்வாறு பலரும் தங்கள் தங்களுக்குத் தோன்றியவாறு வருந்தியும் இரங்கியும் நிற்பாராயினர். சௌந்தரனுக்கோ அக்காலை வயது எண்பதுக்குமேல் இருக்கலாம். ஆங்காலம் எல்லாம் அக்கிரமம் பண்ணி வந்து சாங்காலத்தில் சங்கரா சங்கரா என்பது போல சௌந்தரன் தற்காலம் தானடைந்திருக்கும் தன்மையும் முன் நிலைமையையும் உன்னி உன்னி உள்ளாவி சோர்ந்து துடித்தான். சௌந்தரனது வயோதிகத்தையும், அவன் இருபால்

மனைவிமக்கள் படுந்துயரத்தையும், முன் தான் அவனிடம் வைத்திருந்த மதிப்பையும் யோசித்து அரசனும் சௌந்பால ஒரு சிறிது இரங்கினன். பிறகு ஒழுக்கத்தில் தவறியதனால் அந்தணன் அடைந்த கேட்டையும் மானக்குறைவையும் நினைக்க நினைக்க மனமுருகாது போவாராகும் நேயா?

## 15-வது கதை. பிறனில் விழையாமை.

திருக்குறள்.
பகை பாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

பரிமேலழகர் உரை :—பிறனில்லாளைக் கண் நெறிகடந்து செல்வானிடத்து, பகையும், பாவமும் அச்சமும், குடிப்பழியும் என்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம்.

குறிப்பு —பிறன்மனைவியை இச்சிப்பவனுக்கு இம்மையில் விரோதமும், பயமும், பழியும் உண்டாகி மறுபிறப்பில் பாவத்தால் வாதனையும் நேரிடும். இதுபற்றியே அறம், புகழ், கேண்மை, பெருமை இந்நான்கும், பிறன் தாரம் நச்சுவார்ச்சேரா பிறன் தாரம், நச்சுவார்ச்சேரும் பகை, பழி, பாவம் என்று, அச்சத்தோடு இந்நாற் பொருள் என்று நாலடியார் முறையிடுகின்றது.

உதாரணம் :—பூர்வம் இந்தியாவின் வடபாகத்தில் மனு நெறிப்படி செங்கோலோச்சி வந்த நந்தன மஹாராஜனது சபையில் புலவர்க்கோர் திலகம் போல விளங்கி வந்தார் வரருசி யென்பார். அவர் கல்விக்கடலைக் கரை கண்டவராயினும் பக்தபராதீனராகும் பரமசிவனை யடைந்து இலக்கண நூலைச் சம்பூரணமாகத் தெரிந்து கொள்ளச்

சென்றனர். அக்காலே தனது மனைவி உபகோசை யென் பாளைப் பிரிந்து போகும்படி நேர்ந்தது. தன்னிடமிருந்த தனம் யாவையும் தனது உயிர் நண்பனாயிருந்த இரணிய குபதனிடம் சேமஞ் செய்து போயினர். ஈதிங்ஙனமிருக்க அவர் பாரியை உபகோசை ஒரு நாள் நீராடுவதற்காகக் கங்கை சென்றனள். அன்றையதினம் அப்பெண்மணி யணிந்திருந்த வெண்மையுடை அவளுக்கு இயற்கையழகினை விளக்கேற்றிக் காட்டுவதா யிருந்தது. கங்கை சென்று நீராடித் திரும்பி வாராநிற்க வரும் வழியில் எதிர்ப்படும் அனைவர் கண்களும் அவள் மீது படியாது திரும்பா தென்பது நிச்சயம். ஆகவே அப்பட்டணத்து மந்திரிகளில் ஒருவனாகிய குமாரன் என்பான் மிகுந்த விரகவேதனைக்குள்ளாகி அக்கணத்திலேயே தன் வாதனையைத் தீர்க்கவேண்டுமென அவள் பாதங்களில் வீழ்ந்து மன்றாடினன். மிகவும் திகபிரமை கண்ட அப்பெண் இன்ன செய்வ தென்று தோன்றாது திகைத்து "இதுகாலை பேசச்சரிப்படாது. அடுத்த நாளிரவு தனித்து வரின் யோசிக்கலாம்" என்று வந்து விட்டனள். பின்னொரு வீதியில் அரச புரோகிதர் எதிர்ப்பட்டு மந்திரியைப்போலவே சில பசப்பு வசனங்களைப் புகன்றனர். அதற்கும் அப்பதிவிரதை முன்னவனுக்குக் கூறிய பதிலையளித்து விரைவாய் வீடு திரும்பினள். மீண்டும் வரும் வழியில் அந்நகரைக் காத்து வரும் கொத்துவால் அவள் காலில் வீழ்ந்து கெஞ்சாதும் கெஞ்சினன். அவனும் முன்னவரிருவருக்கும் அளிக்கப்பட்ட விடையைப் பெற்று மிகுந்த களிப்புடன் 'மறு நாள் பொழுது எப்பொழுது விடியும்' என எதிர்பார்த்திருந்தான். பின்னர் புலி வாயினின்றும் அதிர்ஷ்டவசத்தால் தப்பிய மான் பேட்டினைப்போல் உள்ளம் பதைக்க இல்லம் வந்து அத

துணை அவமானத்திற்கும் காரணமாயிருந்த தனது இயற்கை யழகினை வெறுத்தவளாய் வருந்தியிருந்தனள். இவ்விவரங்களை ஒருவரு மறிந்திலர். மற்றை நாள் அதிகாலையில் அவசர நிமித்தம் சிறிது பொருள் வேண்டுமெனத் தன சேடியருள் ஒருத்தியை இரணிய குப்தனிட மனுப்ப அவன் பணத்தை மூட்டையாகக் கட்டிக்கொண்டு "எண்ணிப பத்து அங்கையிட்டால இந்திரன் மகளும ஆங்கே வெண்ணெய்க் குன்று எரியுற்றாற்போல மெலிந்து பின் நிற்கும்" என்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்து உபகோசையால வந்து "பெண்ணே! இன்று என்னுடன் மருவியிருப்பின வாருசியால வைக்கப்பட்ட அவ்வளவு தனத்தையும தந்து விடுகின்றேன. இல்லையேல ஒரு காசு கூட அளியேன" என வெருட்டினன. என்செய்வாள! அந்தோ பாவம! பட்டகாலிலே படும கெட்ட குடியே கெடும் என்பது போல ஒருவர் பின ஒருவராய் அவளது கற்பைக் கலைத்துச் சுகமனுபவிக்க யோசித்தனர். என்றாலும 'சிறைகாக்கும காப்பு எவன செய்யும்? மகளிர் நிறை காக்கும காப்பே தலை' என்ற வள்ளுவனார் வாக்கிற்கோர இலக்கண மாயிருந்த அதனையல மற்றையோர்க்குக் கூறியதையே அவனுக்கும கூறினள இரணிய குப்தனும் தன் எண்ணம பலித்ததெனன அகம மலர்ந்து சென்றான உடனே உபகோசை, சேடியர்கள மூலமாய் நிரம்பவும் கீலெண்ணையைத் தருவித்து அதிற்கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களைப பெய்து சுகந்த பரிமளங்கமழும்படி. தயாரித்தனள். குறித்த காலம நெருங்கியதும் குமாரன் என்னும் மந்திரி ஆடையணிகளால தன்னை யழகு படுத்திக்கொண்டு உபகோசையின் வீட்டையடைந்தான். ஆபத்துக் காலத்தில் அறிவென்னுந் துணைவனைக் கைகொ

ண்ட அவ்வனிதாரத்தினம் "நீராட வாருங்கள்," என அவனை இருள் நிறைந்த அறைக்கு இட்டுச் சென்று சேடியரை ஏவித் தைலம் புகட்டக் கட்டளையிட்டனள். சேடியர்களும் ஆடிப் பாடித் தைலம் புகட்டத் தொடங்கினர். அதற்குள் இராஜ புரோகிதரும் வந்து சேர்ந்தார். ஆசாரியார் வரவறிந்த மந்திரிக்கு அக்கணமே பாதியுயிர் போய் விட்டதென்னலாம். உடனே தனக்குப் பணிவிடை புரியும் சேடியரை எவ்விதமேனும் தன்னை ஆசாரியார் அறியா வண்ணம் மறைக்கும்படி மன்றாடினன் மந்திரி. சுகந்த கிலெண்ணை உடல் முழுவதும் தடவியாயிற்று. ஸ்நானம் மாத்திரம் நடைபெறவில்லை. ஆயினும் சேடிகள் மந்திரியின் வேண்டுகோளுக்கிணங்கி அவனை அங்குக் கிடந்த நெற்குதிரொன்றில் ஒளித்து வைத்தனர். விதியின்றி மந்திரியும் அதனுள் ஒடுங்கிக் கிடந்தான். பின்னர் சுருக்கிச் சொல்லின் புரோகிதருக்கும் கொத்துவாலுக்கும் மந்திரிக்கு நடந்தது போலவே மரியாதையாவும் நன்கு நடந்தேறின. முடிவில் சங்கேதப்படி இரணிய குப்தனும் ஆங்கு வந்து சேர்ந்தான். அவனை உபகோசை இருட்டறைக்கு அழைத்துச் சென்று "ஆசைக்களஞ்சியமே! இப்பொழுதாவது என் கணவன் தங்களிடம் வைத்துச் சென்ற தனத்தை யளிக்க மனமுண்டா?" என்றதும் அறிவிலியாகும் இரணிய குப்தன் உபகோசை தனக்குச் சொந்தமாயினள் என்று களி கூர்ந்து "நானே யளிக்கத் தடையில்லை" எனப் பதிலளித்தான். அச்சமயம் அவ்வறையைக் கிட்டி "இவ்வில்லுறையும் தெய்வங்காள்! வர்த்தகர் கூறிய வார்த்தைக்கு நீங்களே சாட்சி" என்றனள் உபகோசை. பிறகு வியாபாரிக்கும் மங்கள ஸ்நானம் நடத்தக் கட்டளை பிறந்தது. அவ்வாறே இரணிய குப்தனுக்குத் தைலம் தேய்

ந்து முடிவதற்கும் பொழுது விடிவதற்கும் காலம் சரியா யிருந்தது. உடனே சேடிகள் அம்மூடனை நோக்கிப் "பேதையே! இக்கணமே உன் இல்லம் சேர்ந்து விடு. இன் றேல் மரியாதைகள் நடை பெறும்" என்றனர். இரணிய குப்தன் மிகுந்த கோபத்துடன் அவர்களைத் தூஷிக்கத் தலைப்பட்டான். அவ்வளவு தான் தாமதம். அவனுக்கு ஆத்த சந்திர பூஜை நிறை வேறியது மல்லாமல் வெளியே துரத்தவும் பட்டான். என் செய்வான்? சொல்லவும் முடியவில்லை, மெல்லவும் முடியவில்லை. சொன்னால் வெட்கம்! அழுதால் துக்கம்! இறுதியில் ஒன்றுந் தோன்றாதவனாய் வீடு நோக்கினன் இரணியகுப் தன். 'பதிவிரதைகளுக்குப் பங்கமிழைத்தவர்கள் பெற்ற பெரும் பரிசை விரைந்து பாருங்கள்' என்று விளக்கேற்றிக் காட்டுவான் போலக் கதிரவனும் குண திசையில் உதமாயினன். நாய்கள் யாவும் இரணிய குப்தனைப் பின் பற்றிக் குரைத்தன. அவனைக் கண்ட சிலர் பைசாச மென ப்பயந்து சுரங்கொண்டனர். வேறு சிலர் அவனை உற்று நோக்கி நிதானித்தறிந்து வீட்டிலிருந்தவர்களையும் அழை த்து வந்து கைகொட்டிப் பரிகசித்தனர். இம்மாதிரி தெரு வில் மிகுந்த அவமானமடைந்த இரணிய குப்தன் மானமிழந்து தன் பிராண னொன்றுடன் வீடு சேர்ந்தான். பின் சற்று நேரத்திற் கெல்லாம் உபகோசை நந்தன ராஜன் சபா மண்டபஞ் சார்ந்து தன் கணவன் இரணிய குப்தனிடம் வைத்துவிட்டுப்போன மூல தனத்தை வாங்கித் தரும்படி விண்ணப்பஞ் செய்து கொண்டாள். உடனே அரண்மனைச் சேவகர் இரணிய குப்தனிடஞ் சென்று "அரசன் கட்ட ளையால் அழைத்துப் போக வந்தோம்" என்றதும் தன் உடலெங்கும் நிரம்பியிருக்கும் கீலெண்ணெயை ஒருவாறு

சத்தம் செய்து கொண்டு இராஜ சபை வந்து சேர்ந்தான். வந்ததும் அரசனை நோக்கி 'வரருசி தன்னிடம் எள்ளளவும் பொருளை வைத்துச் செல்ல வில்லை" என்று சொல்லி விட்டான். உபகோசை மற்றவர்களையும் வெளிப்படுத்தும் பொருட்டு இராஜனை நோக்கி 'நிருப! என் கணவன் மந்திர வன்மையால் இல்லுறைத் தெய்வங்களை நெற் குதிகளில் அடக்கஞ் செய்திருக்கின்றனர். கடந்த இரவு வாத்தகன் மறு நாள் பொருள் தருவதாக அவைகளின் முன்பு பகர்ந்ததற்கு அத் தெய்வங்களே சாட்சி சமுகத்தில் அவைகளைத் தருவித்து விசாரிப்பின் உண்மை வெளியாகும்' என்றனள். அம்மடந்தையின் வசனம் அரசனுக்கு மிகுந்த வியப்பை யுண்டாக்கிய தாகலின் குதிர்களை உடனே சபைக்குத் தூக்கி வரும்படி கட்டளையிட்டான். அவ்வாறே குதிர்கள் மூன்றும் சபைக்குத் கொண்டு வரப்பட்டன. பின்னர் உபகோசை அக்குதிர்களை நோக்கித் "தெய்வங்களே! நேற்றிரவு வாத்தகன் உங்கள் முன்னிலையில் கூறிய வசனத்தை உள்ளவாறே வெளிப்படுத்தாவிடின் இக்குதிர்களினின்றும் உங்களை வெளிப்படுத்தித் துரத்தியடிப்பேன்' என்றனள் அவள் பேசி முடியுமுன் அத்தெய்வங்கள் மிகவும் பயந்து "அரசனே! நடந்த இரவு வரருசி தன்னிடம் வைத்துப் போன பொருளை யாவையும் தருவதாக ஒப்புக்கொண்டான் வாத்தகன். இது உண்மை!" என்று உரக்கக் கூவினார்கள்

பின்னர் வாத்தகனும் விதியன்றி உண்மையை ஒப்புக்கொண்டான். குதிரில் இல்லுறைத் தெய்வங்கள் இருக்கவாவது! அவைகள் சாட்சி சொல்லவாவது! என்று அவையிலிருந்த பலருக்கும் அடங்கா வியப்பு உண்டாயது. ஆதலின் அதனைப் பரிசோதித்தறிய ஆவல் பூண்ட

மன்னவன் உபகோசையின் சம்மதத்தின் மீது குதிர்களைத் திறக்கச் செய்தான். கரிய திருக்கோலத்துடனும் சுகந்த கீலெண்ணையுடனு மிருக்கும் மூன்று தெய்வங்களும் வெளிக்கிளம்பின. ஆங்கிருந்த ஒருவர்க்கேனும் அவர்களை இன்னாரென அறியக் கூடாது போயிற்று. முடிவில் உபகோசை யென்பாள் அரசனது வேண்டுகோளுக் கிணங்கிச் சென்ற தினம் தான் கங்கைக்குச் சென்று நீராடி வருகையில் தன்னை வந்து மந்திரி, புரோகிதர், கொத்துவால் முதலிய மூவர் கெஞ்சிக் கூத்தாடியதையும் அவர்களுக்குத் தான் சாதுரியமாய் விடை பகர்ந்து தப்பியதையும், இரவில் அவர்களுக்கு மரியாதை செய்வித்ததையும் சவிஸ்தாரமாகக் கூறினள். பின்பு அரசன் உபகோசையின் கற்பின் திறத்திற்கு மெச்சி அவள் கணவனது பொருளை இரணிய குப்தனிடமிருந்து வாங்கிக் கொடுத்தது மல்லாமல் அப்பெண்கள் நாயகத்தைச் சகல மரியாதை யுடன் அகத்திற்கு அனுப்பி வைத்தான். அதன் பின்னர் இராஜ சட்டப்படி அந்நால்வர் பொருளையும் பறி முதல் செய்து பட்டணத்தினின்றும் அவர்களை விரட்டி விட்டான். நற்குலத்தி லுதித்த உத்தம நங்கையர்கள் தங்களுக்கு எவ்வித இடையூறு நேரினும் கற்பினின்று ஒரு சிறிதும் தவறார்கள் என்பது வெளிப்படை. அதுவு மல்லாமல் பிறர் மனைவியை இச்சிப்பவர் படாத பாடு படுவானன்றோ?

## 16-வது கதை. பொறை யுடைமை.

திருக்குறள்.
பொறுத்தல் இறப்பினை யென்றும், அதனை
மறத்தல் அதனினும் நன்று.

பரிமேலழகர் உரை:—பொறை நன்றாகலான் தாம் ஒறுத்தற்கு இயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப்

பொறுக்க, அதனை உடகொள்ளாது அப்பொழுதே மறததல பெறின அபபொறையினும நன்று.

குறிப்பு:—அனனியா நமககுத தீங்கிழைப்பின அவரை ஏறறவாறு தண்டிகக நமமால் முடியுமாயினும அவா மீது கோபங்கொள்ளாது பொறுமை யோடிருததல மிகவும் நல்லது. மேலும அவா நமககுச செயத கெடுதியை அந நிமிஷமே மறநது விடுதல அபபொறையினும மேனமையுடைதது.

உதாரணம் —பஞ்சபாணடவா துரியோதனாதியருடன் சூதாடி அரசிழநது, பன்னீராண்டு வனவாசமும ஒரு வருஷம அஞ்ஞாத வாசமும செய்யுமபடி நோநததென பது யாவரும அறிநததே! அவவாறு அவாகள தஙகளைப பிறா இனனாரென அறியாவணணம உருமாறி முறையே கஙகபட்டா, பலாயனன, பிருஹனனளை, தாமககிரநதி, தநதிரிபாலன எனவும துரௌபதி சைரநதரி யெனவும நாமஞ் சூடிக்கொணடு விராட ராஜனது மாளிகையில வேலையி லமாநதனர். துரியோதனனோ பாணடவாகள எங்குளா ரெனக்கணடறியும வண்ணம நாறபககஙகளிலும வேவுகாராகளை யனுபபி அறுதியில, இவரும மசச நாட டில வசிததல வேணடுமென ஊகிததறிநது அவாகளைக கணடு வெளிபபடுததி விடின மறுமுறை அவாகள ஈராறு வருஷம அரணியததில சஞ்சரிககுமபடி அனுபபி விடலா மென ஆசை கொணடு அவ்விராட மனனனுடன போா புரியச சென்றனன். இஙஙனம போா புரியின விராட னரண்மனையில வாழ்நது வரும பாணடு புததிரா அமமன் னவனுககு உதவி புரிய வருவா, அககாலை அவாகளைப பகிரஙகபபடுததி விடலாம என்பதே துரியோதனன கொண்ட சூழசசியாகும. கௌரவா தன நாட்டின மீது

தண்டெடுதது வநததை யுணாந்த விராட பூபதி 'என் செயவதெனத' திகைதது நிறக அவன மைந்தன உதத ரன பிருஹனனனையைச சாரதியாகக கொண்டு யுதத களஞ்சாநதான. எனினும் அது வரையில் போர் முக ததைககண்டறி யாதவனு தலினுலும அரசாககுரிய ஆண் மை, வீரம, தீரம முதலியன அமையபபெருதவ னுதலினு லும கௌரவரது கடறபெருஞ சேனையைக் கணடஞசி வநத வழியே ஓடடம பிடிததான. புறஙகாடடி யோடிய உததரனைப பிருஹனனனை தேறறிததானே போககோ லம பூணடு உததரனைச சாரதியாக நியமிதது அபாகக ளுடு சென று தேவாகளும கண்டதிசயிககும வணணம சமா முறுககி வெறறிமாலை சூடினன. எனறுலும உதத ரனே வெறறி வாகை பெறறு வருகினருன என விராடனு ககுத தூது விடுததான. வெறறி வாகை பெறறு வரும் தன புதலவனை எதிாகொணடழைககக மநதிரிகளைச சேனை யுடன அனுபபித தான கஙகபடடருடன கவறுடி யிருந தான விராடன ஆடடததின நடுவே தன மகன கொணட வெறறியை நினைதது நினைதது ஆனநத பரவசனுய விரா டன உததரனது புகழை விவரிககவே, கௌரவ சேனையை முறியடிதது வெறறி பெறறவன அாசசுனனே யெனறறி நத கஙகபடடா விராடனை நோககி 'நிருப! தேவாகளும அமரில முனநிறக மாடடாதபடி அததனை விலலாணமை வாயநத பீஷம துரோணாகளை உததரனு ஜயிகக வலல வன்? நமதரணமனையில பேடியுருச சமைநது வதிநது வரும பிருஹனனளையே வெறறி பெறறிருககவேணடும' எனறனா. இவ்வசனததைச செவியிலேறற மசச பூபதி "மிகசசிறநத விலலாளியான என குமாரன வெறறி பெற றிருகக அதனை மறுதது ஒரு பேடியைப புகழவது உசித

மல்ல" என வெகுண்டான். உடனே கங்கபட்டர் குறுநகை நகைத்து "அரசே! அப்பேடியின் பெருமையைத் தாங்கள் அறியீர் போலும். அல்லாமலும் வீரசிங்கங்களாகிய பீஷ்மா, துரோணா, கிருபா, கர்ணன, அசுவத்தாமன் இவர்களைப் புறங்காட்டி யோடும்படி செய்ய உத்தரன் ஆற்றலுடையவனல்லன். அவன் போர் முகத்தைக் கண்டதும் நடுக்கமுற்றிருப்பான், பிருஹன்னளையே வெற்றி கொண்டிருத்தல் வேண்டு மென்பது திண்ணம்" என மறுபடியும் இயம்பினர். கங்கபட்டரது வார்த்தை விராடனது கோபக்கனலைக் கொழுந்து விட்டெரியச் செய்த தென்பது வியப்பல்லவே! ஆகலின் அம்மன்னவன் கங்கபட்டர் மீது கோபமூண்டு அவரது கன்னத்திலடித்தனன் பாசிகையினால். உடனே கங்கபட்டரது நாசியினின்றும் உதிர வெள்ளம் பெருக்கத்தலைப்பட்டது. அச்சமயம் கங்கபட்டராகிய தருமர் உதிரம் தரையில் விழாதபடி ஒரு கையால் நாசியை அமுக்கிக்கொண்டனர். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சைரந்தரி விசனமும் பயமும் கோபமும் அதிகரித்தவளாய்க் கங்கபட்டரது அருகே சென்று உத்தரியத்தால் அவ்விரத்தத்தை ஒத்தி ஒரு பொற்கிண்ணத்திற் பெய்தனள். இதனைக்கண்ட விராடன், கங்கபட்டருக்கும் சைரந்தரிக்கும் அந்தரங்க நேசம் இருத்தல் கூடுமென உன்னி அவளை நோக்கி "நீ கங்கபட்டருக்குச் செய்யும் உபசாரத்தின் காரணத்தை யறியேன்" என்றவளவில் வண்ணமகள் கூறுவாள்:- "இராஜனே! இக்கங்கபட்டரது உதிரத்தில் எத்தனை துளிகள் பூமியில் விழுகின்றனவோ அத்தனை வருஷகாலம் உமது ராஜபதத்தில் அநாவிருஷ்டி உபத்திரவம் சம்பவிக்கும். ஏதோ கொஞ்ச காலம் தங்கள் அன்னத்தைப் புசித்து வந்த பாசத்தினால் உம்

மீதிரங்கி உதிரம் தரையில் வீழா வண்ணம் காத்தேன். விசுவாசம் காரணமே யொழிய வேறொன்றுமில்லை" என்பதே!

பிறகு உத்தரன் அமர்க்களத்தினின்றும் வந்தனன் என்கைக்காவலோர் வேந்தனுக்குரைத்தனர். அப்பூபதியும் 'இக்கணமே என் மகனை இங்கழைத்து வருக' என்றனன். அத்தருணம் கங்கபட்டர் வாயிலோனைத் தனியே அழைத்து "இது சமயம் உத்தரன் ஒருவனை மட்டுமே இங்கழைத்துவா. பிருஹன்னளையை உள்ளே விடவேண்டாம். ஏனெனில் என்னைப் புண்படுத்தி உதிரம் ஒழுகும் வண்ணம் செய்தவனை அவன் கண்ணுறக்காண்பனேல் கோபாவேசங்கொண்டு அவனை ஆவிகொள்வன். பின்னர் இந்நாடும் நிர்மூலமாகிவிடும்" என்று கட்டளையிட்டனர். அவ்வாறே உத்தரன் மாத்திரம் உள்ளே வந்து தருமராஜனைப் பார்த்தபடியே தன் தந்தைக்கு வணக்கஞ் செய்தான். வணங்கி யெழுந்ததும் தன் பிதாவை நோக்கி "கங்கபட்டர் உடலினின்று உதிரம் ஒழுகும்படி புண் செய்தான் யாவன்? அத்தகையானுக்குக் கேடு விளையுமே! கேடுவரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" எனப் பதைபதைத்தான். விராடனோ "மைந்த! மதிகெட்ட கங்கபட்டரை அடித்தவன் யானே! நீ கொண்ட வெற்றிப்புகழைச் சகியாது உன் வீரத்தை அவமதித்தானாதலின் அத்துராத்மாவைத் தாடனஞ் செய்தேன். இதில் என்ன தவறு கண்டாயப்பா நீ?" எனப் பதிலளித்து, தன் மைந்தனை மார்போடணைத்து "மதலாய், நீ எவ்வாறு துரியோதனாதியரை அபஜயப்படுத்தி வெற்றிமாலை சூடினை? அதனையறிய ஆவல் பூண்டுள்ளேன் யான்" என்று வினவினன்.

இவவாறு தநதையும தநயனும உரையாடியிருக்கை யில கஙகபட்டா சபையை விடடகனறு தான எபபொழு துமிருககுமிடஞ் சோநதனா அசசமயம பீமனும அாசசு னனும் தங்கள் தமயனைக்காண வநது அவா முகம வாட்ட முறறிருபபதைககண்டு 'ஏதோ சமபவம நோநதது போலும" எனவறிநது மெளனமாய் நின்றனா. அகத் தினழகு முகத்தில் தெரியு மலலவா? தரும புததிரரும தன் தமபியரை உறறு நோககித "தமபிகாள! பாரததிப னும யானும சூதாடியிருககை அவன தன் மகன் உததரனைப் புகழநது பேசினன அது கணட யான பிருஹனனளையே வெறறி சூடியவன எனறதும அவன என்மீது வெகுணடு சூதாடு கருவியால கனனததிலடிததனன் உடனே உதிர மொழுகியது. இதனை நீஙகள அறியின அவவிராடன தன தாயாதிகளுடன அநதகனுலகு சேர்வனே எனறு வருநதுகினறேன அது பறறியே உஙகளைககணடதும நான மெளனஞசாதிததிருநதேன" எனறு கூறினா. ஆ! ஈதனறோ பெரியா தனமை? சிறியவா ஒரு பிழை செய யின மேலவா பொறையைப பூஷணமாகக கொணடு பிழை செயதாரைக குறிதது 'அநதோ! அவவறிவிலி மையை இடருககுளளாககிய காரணததால நாச முறுமே" எனறு அவன மீதிரஙகுவா

சிறந மூககு நுனியில கோபஙகொளளும பீமன "பொறுமை பொறுமையெனறு நமது அணணா முதத ணணா அனறு அரசவையில அபபாவியாதுகில உரியுங காலததும நமமை யடககினா இககாலையோ தானே விராட ராஜனால அடிபடடு இரணம படடும அவனழி நது போய்விடுவானே' எனறேஙகுகினறனா. இபபொ ழுதே அபபனனை விராடனைப புததிர பெளததிரஙகளு

டன ஆவிதுணிதது அநதகனுக்கு விருநதூட்டி நம தணணுவை அவனது அரியாசனததில அமாததிய பின னரே அனனம புசிப்பேன" என்று இஃது முழககம போல காசசனை செயதான். ஆசசுனனே வெளில "நமது தமையனாது பொறுமையினுல நமககு இவவளவு கேடு கள விளைகினறன. இனி அரைககணமும காலநதாழ்ததல அழுகனறு விராடனைப பநது மிததிர களததிரஙகளுடன வேரறுதத பினனரே வேறு காரியம பாரககவேணடும" எனறு ஆககிரங்கொணடான அககாலே தருமா பூணடி ருந்த பொறுமையை நாம எனனென்று எடுததுப புகழு வது. தமபியாககு உததரவளிபபின உடனே விராடராஜன காறறிலகபபடட தூசிபோலாவானனறோ ? கோபம யாரி டததுசசென்று பலிககுமோ அவனமீதுகூட பபொறை கொளளுதலனறோ சானறோரககழகு ! சுருஙகச சொல லின 'எலலாம ஒறுககும மதுகை உரனுடையாளன பொறையே பொறை' எனற சமணமுனிவா வாககிறகு இலககணமாயிருநதனா கஙகபட்டா ஆகவே தருமா தமபியரைநோககி "நீஙகள சொலவது உணமைதான சொலலியவணணம செயது முடிககும ஆறறலும தஙக ளுக குணடெனபதை நான நனகறிவேன. எனறாலும பொறுமையெனனும பேரணியைக கழறறியெறிய ஒருப படேன யான போறுததாா அரசாளவா போங்கிரூா காடாளவர்எனற பணடைமொழியை யறியீரோ ?" எனறு அவாகளைச் சாநதபபடுததினா ாதிஙஙனமிருகக விராட ராஜன, தன மைநதன உததரன வெறறி கொளளவில லையெனறும, பிருஹனனளையே வெறறிவாகை சூடி- யவனெனறும உணர்நது "ஐயகோ! ஆய்நதோய்நது பாரா தான தானசாசககடவது எனறபடி நாம நாசமடைந

விடும்படி நேரிடுமே! என்செய்வேன் தெய்வமே. குணமெனனும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தலரிதே! கடல் கொதிப்பெடுத்தால் விளாவநீர் எங்கே? என்றபடி பாண்டவர்க்கு அபராதஞ் செய்தேன் அவர் கோபமுள்ளவரேல் இனி ஒருகணமும் இந்நாடு தரியாது என்று அறிவு தலைப்பட்டவனாய் ஓடோடியும் வந்து தருமபுத்திரர் இருக்குமிடந்தேடி அவர்காலில் வீழ்ந்திறைஞ்சி "மன்னர்மன்ன! சிறியேன் அறியாது செய்த பெரும்பிழையைப்பொறுத்து எனக்கும் என் நாட்டார்க்கும் அபயமளிக்காதுபோயின் இப்பொழுதே என்னுயிர் என்னை விட்டகலும்" என்று வாய்விட்டலறி மிகவும் கெஞ்சினான். கங்கப்பட்டரும் விராடனை வாரியெடுத்து "அரசே! ஏன் இத்துன்பம்? அஞ்சேல்! உமக்கு அபயமளித்தேன்" என்று அவனைத் தேற்றினார். தருமரொழிந்த மற்றைப்பாண்டவர் நால்வரும் விராடன் மீது கோபம் ஒருபக்கம் அலைக்க, தருமரது பொறுமை யொருபக்கம் வலிக்க ஒன்று முரையாது நின்றனர். பின்னர் விராடனது வேண்டுகோளுக்கிணங்கி அவன்மகள் உத்தரையைத் தன் தம்பி அர்ச்சுனனுக்கு மணமுடித்து இன்பமாய் வாழ்ந்தனர்.

## 17-வது கதை. அழுக்காறாமை.

திருக்குறள்
அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

பரிமேலழகர் உரை:—அழுக்காறு பகைவரை ஒழிந்தும் கேடு பயப்பதொன்று; ஆதலின் அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடு பயத்தற்கு அதுதானே அமையும்.

குறிப்பு.—பொறாமையென்னும் துர்க்குணம் ஒருவனிடத்திருக்குமாயின் அவனுக்குக் கெடுதியைச்செய்யும் பகைவர்களில்லையாயினும் அப்பொறாமையே பலகேடுகளை உண்டாக்கும் ஆகலின் ஒருவரும் பொறாமை கொள்ளலாகாது.

உதாரணம்.—சோழராஜனால் சிறப்புப்பல பெற்று விளங்கிவந்த கம்பர் ஒருகால் அம்மன்னவன் மீது கோபங்கொண்டு அவன் நாட்டைவிட்டு அந்நிமிஷமே அகன்று போய்ச் சேரனையடைந்து அவனிடம் தான் கம்பரிடம் அடைப்பக்காரனாயிருந்ததாக அறிவித்து அவ்வேலையிலமர்ந்தனர். அங்ஙனம் வாழ்ந்து வருநாளையில் சேரராஜனது சமஸ்தான வித்வான்கள் கம்பராமாயணத்தை அரசன் மனமகிழப் பிரசங்கித்தனர். அடைப்பக்காரனாய் அரசனண்டையிலிருப்பவர் கம்பரென ஒருவருமறிந்திலர். புலவர்கள் இராமாயணத்தை வெகு திறமையுடன் எடுத்தியம்பியபோதிலும் பாடலின் சொன்னயம் பொருள் நயங்களை உள்ளவாறறிந்து உரைத்தாரில்லை. அதுகண்ட கம்பர் சேரபிரானை நோக்கி "அரசே! நமதரண்மனைப் புலவர்களது பிரசங்கம் இனிமையாயிருந்தபோதிலும் செய்யுளில் இலைமறைகாய் போலிருக்கும்பொருள் நயங்களை ஆழ்ந்தறிந்து சொல்வதாகக் காணப்படவில்லை" என்றனர். உடனே சேரன் "அதனை நீ எவ்வாறுணர்ந்தாய்" என, "நான் எக்காலத்தும் கம்பரருகேயிருந்து அவரது பிரசங்கமாரியை நன்கு பருகிவந்தேனாதலாற்றான்" என்று பதிலளித்தனர் கம்பர். அங்ஙனமாயின் உன்னாற் கூடுமேல் கம்பரிடம் கேட்டறிந்தபடி சிலபாகங்களைப் பிரசங்கஞ் செய்பார்ப்போம் எனச்சேரன் செப்பியதும் கண்டோரனைவரும் வியக்கும் வண்ணம் கம்பர் சிலபாடல்களைப்

பிரசங்கித்தனர். அடைப்பக்காரனது சொல்வன்மையைக் கேட்டானந்தித்த சேரன் அக்கணமே கம்பருக்கு மேன்மை பலபுரிந்து அவருடன் பந்திபோஜனமும் செய்யத் தலைப்பட்டுவிட்டான். அசல்வாழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி கிடப்பான் என்னும் பழமொழிக்கிணங்க, அடைப்பக்காரனிடம் சேரன் காட்டிவரும் அன்பையும் மதிப்பையும் கண்டு சகியாது அழுக்காறு கொண்டவித்வான்கள் எவ்விதத்திலேனும் அடைப்பக்காரனது அந்தஸ்தத்தைக்குறைத்து விடத்தீர்மானித்தவர்களாய் அரசனது நாவிதனைத்தனியே யழைத்து "எப்படியாவது அடைப்பக்காரனை உன் இனத்தானென்ன அரசனறியும்படி செய்யவேண்டு" மென அவன் கையில் ஏராளமான பொருளையளித்தனர். பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும் என்பது பண்டை மொழியல்லவா? ஆகவே நாவிதன் பாவாணரது வேண்டுகோளுக்கிணங்கி அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றத்தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தான். ஒருநாள் கம்பர் அரசவையிலிருந்து வெளியே வர நாவிதன் அவரைக் கட்டிக்கொண்டு "அண்ணே! உன்னைப்பிரிந்து வருஷங்கள் பல ஆயினவே! என் நல்வினைப்பயனால் இன்று உன்னைக் கண்ணாரக்காணவும் நேர்ந்தது" என்றழுதான்.

அச்சமயம் கம்பர் "இது வல்லாரொருவன் செய்த சூழ்ச்சிபோலும்" என நினைத்துத்தானும் அவனைக் கட்டியழுது பின்பு "தம்பி! உன்குழந்தை குட்டிகளைப்பார்த்து நெடுநாளாயின. ஆகவே அவர்களைக்காண எனக்கு அவாமேலிடுகின்றது" என, இருவருமாக அம்பட்டன் வீடு சென்றனர். பாலர், விருத்தர், குரு, தெய்வம் இவர்கள் முன்னிலையில் வெறுங்கையுடன் செல்வது உசித

மல்லவாதலின் கமபா நாவிதனமககளுககினிய நலலுணடி களவாஙகிசசெலல மறநதாரிலலை வீடு சோநததும மயிர் வினைஞன தன இலலாளைநோக்கி "அடி பெணணே! இதோ உனமூததார வநதார" எனறுன. உடனே அவ ளும ஓடிவநது கமபரைக கண்டுகளிதது அவருககு அபரி மிதமான ஆசார உபசாரங்கள புரிநதனள சிறிது நேரத திறகெலலாம கமபருககு நலலனனம பரிமாறபபடடது அககாலை கமபா "தமபி! நான உனவீட்டில உணபதறகு முன சில வழககுகள உன்னுடன பேசவேணடும் அவை யெனனவெனில நமமுடைய தநதைகாலததில நமது சொததுககள பிரிவினையாக விலலையலலவா? இதுவரை யில நீயே அவையனைததையும ஆணடனுபவிதது வநதா யாதலின என பாதிபபஙகை எனனிடம கொடுததலவசி யம மேலும இராஜாஙக ஊழியததை நான் சிலகாலம் அனுபவிபபது முறறிலும பொருததமாகும" எனறவள வில, அதனைமறுகக வகையிலலாது தான புலவாகளிட மிருநது பெறறதனததையும அரண்மனையில வேலைபாரக கும பாததியதைதயும கமபருககளிததான நாவிதன. பினனா கமபா "இராஜாஙகவேலையை முழுமனதுடன் நீ எனககு அளிததாயெனினும மனனவனிடம சென்று அவன அனுமதி பெறலவேண்டும" எனறனர். அவ் வாறே நாவிதனும அதறகுடன்பட்டான.

ஈதிஙஙனமிருகக "அடைபபககாரன அமபட்ட னெனபதை யறியாது அவனுடன சமபநதி போஜனமும் பண்ணிவிட்டோமே!" எனறு மிகவும மனம வருநதிய சேரன் முடிவில ஒருவாறு தேறி, கல்வியிறபெரிய கம்பர் அமபட்டனை அடைபபதொழிலிறகு ஏறறுககொண்டிரார். ஆதலின அதன உண்மையைததேர்தல வேண்டுமென மதி

ந்து வேவுகாரர்களைக்கூவி அவர்களிடம் தன் ஐயத்தைக் குறிப்பாலுணர்த்தினான். அவ்வாறே ஒற்றர்களும் விரைந்து சென்று ஓர் நொடிப்பொழுதில் திரும்பிவந்து "மன்னர் மன்ன! அடைப்பக்காரன் அம்பட்டன் என்பதில் எள்ளவும் ஐயமில்லை. அவன் இதோ சமூகம் வருவான் தன் குலத்திற்குரிய வேலையை ஏற்றுக்கொள்ள" என்று கைகட்டி வாய்புதைத்துச் சொல்லினர். அச்சமயம் அரசனது மனநிலைமை எவ்வாறிருந்திருக்குமென நயநேயர் நன்குணர்ந்து கொள்வாராதலின் அரசன்மனம் தீயிலிட்ட புழுப்போல் துடித்தது என நாம் சொல்லவும் வேண்டுமோ? சிறிது பொழுதிற்கெல்லாம் நாவிதர் இருவரும் அரசவை வந்து சேர்ந்தனர். சேர்ந்ததும் கம்பர் சேரனை நோக்கி "மன்னர்திலக! என் தம்பி இதுகாறும் அரண்மனை ஊழியஞ் செய்துவந்தான். இனி அதற்குரியவன் யானே" என்றியம்பி நாவிதன் எழுதிக்கொடுத்த சீட்டையும் காண்பித்தனர். அரசனும் 'அங்ஙனேயாகுக' என்று உத்தரவளித்தான். மீண்டும் கம்பர் "வேந்தே! ஒரு வேண்டுகோள். என் தந்தையினது அந்தியகாலத்தில் இரண்டு வயிரச்சிலம்புகள் (பெண்கள் காலிலணியும் ஆபரணம்) இருந்தன. அவற்றில் ஒன்று என்னிடமுளது. மற்றொன்று என் தம்பியிடம் இருத்தல்வேண்டும்" எனப் புகன்று கலைமகளைத் தியானித்த மாத்திரத்தில் அத்தேவியினது இடதுகாற்சிலம்பு தன் கைதனில் வரப்பெற்று அதனை யரசனிடம் சேர்த்து "இச்சிலம்பு நம்மரசியின் பாதகமலங்களில் அணிவதற்கு ஏற்றதாகும். ஆதலின் மற்றையதையும்பெற்று அரசிக்களித்தல் அவசியமாகும்" என்று வேண்டிநின்றார். அதுசமயம் அரசனருகேயிருந்த இராணியும் அச்சிலம்பின்மீதாசை கொண்டனள். உடனே

சேரன் பழைய நாவிதனை விளித்து 'இன்னொரு சிமைபு எங்கே' யென்றதும், என் செய்வான் நாவிதன்? ஒன்றுந் தோன்றாது ஆடுதிருடிய கள்ளனைப்போல் கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டதே என்றேங்கி நின்றானென்பது வியப்பல்ல. கம்பரும் அவனைப்பார்த்து "அடே! தம்பி! நமக்கேன் அச்சிலம்பு? தாமதியாது பார்த்திபனிடம் சேர்த்துவிடு" என்றார். நாவிதன் திகைப்பிரமை கொண்டவனாய் "என்னிடமில்லையரசே!" எனப்பணிவுடன் பகர்ந்தான்.

"கோலாட்டக் குரங்காடும் அதுவேபோல் பயமுறுத்திக் கேளாது நயமாகக்கேட்டபின் என் தம்பி கொடான் சிலம்பை! சமுகத்தின் கட்டளையையும் மதியாது என்னிடமில்லை யென்சாதிக்கின்றான் இனித் தாமதிக்க வேண்டியதில்லை." என்று கம்பர் சினந்தனர். உடனே காவலாளிகள் நாவிதனைக் கட்டியடிக்கத் தலைப்பட்டனர். அடி உதவுவதுபோல அண்ணன் தம்பி உதவார் அல்லவா? நாவிதனே கைகால்கள் நடுங்க வாய்குழறி "இராஜாதிராஜ! நான் யாதொரு பாவமுமறியேன். என்னை யிவ்வாறு புரியத்தூண்டியவர் நமது சமஸ்தான வித்வான்களே யாவர். அடைப்பக்காரன் என் அண்ணனல்லன். பணத்தாசையால் புலவர் கட்டுரைக் குடன்பட்டேன்" என்று அம்பலத்தில் பொதியவிழ்த்தான். இதனைச் செவியுற்ற நாவலர் பெரிதுமவருந்தி அரசன் யாதுகட்டளை யிடுவனோ வெனப்பயந்து உயிருண்டோ இல்லையோ என்னும்படி மரம் போல் அசைவற்று நின்றனர். வித்வான்களது துரோக சிந்தையைக் கண்டறிந்த காவலன் நெஞ்சம் புண்ணாகி "அந்தோ! நமது சோற்றையுண்டு வெகு விமரிசையுடன் வாழ்ந்துவரும் புலவரே உண்டவீட்டிற்கு இரண்டகம் பண்ணினர்" என வெகுண்டு அவர்களனைவரையும் கழுவி

லேறறக் கட்டளையிட்டான. அழுககாறறின் கேடு எவ வளவு பிரமாதமாய் விளைநதது பாருஙகள! பாவலர்க்கு சேர்ந்த மரணதணடனையையறிநத அவாகளது மனைவி மககள தலைவிரி கோலமாய ஓடோடியுமவநது கமபா காலிலவீழ்ந்து உயிாபபிசையிடுமபடி வேண்டிநின்றனா. உடனே கமபா அவாகளுக கபயமளிததது, சோனைநோககி “அரசகேசரி! மாதா, பிதா, குரு, புலவா, விகடகவி கள, தூதா, முதலியோா எலலையிலலாத குறறஙகள புரிந தாராலும அவாகளைககொலல மனுதாமசாஸ்திரம இடங்கொடுககவிலலை. ஆதலின புலவாகளைததணடியாது மனனிததலவேணடும” எனறெடுத்த தியமபினா.

பினபு தான இனனுன என்பதையும சிலமபுகிடைதத வழியையும அரசனுககும மறறுளோாககும அறிவுறுதத, அவ்வாசவையின நடுவே நனகு அலஙகரிதது அவவிடததே ஒரு கலசததில நாமகளை ஆவாஹனபபடுததி அததேவியின மீது ஓரநதாதிபாடி நினறனா கமபா. அககாலை நாமகள “அடே கமபா! எஙகடா என் சிலமபு” எனறு தனபதமலரை நீட்ட, கமபரும் முனபுதான பெறறிருநத சிலம்பை அததேவியாரின் இடது பதமலருகே காட்ட அதனைப் பெறற கலைமகள அநதாத்தானமாயினள். பின னரே யாவரும, அடைப்பக்காரனுமிருநதது கமபரென அறிநது ஆனநதத்தி வாழ்நதனர். உடனே சோழனும் அடங்கா மகிழ்பூத்து நமகவிச் சககாவாத்திக்குப பலவரி சைகள புரிநது அவரை எக்கணமும் விட்டகலாது இன்ப முடன் வாழ்நதுவநதான

# 18-வது கதை. வெஃகாமை.

திருக்குறள்

> நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
> குற்றமும் ஆங்கே தரும்.

பரிமேலழகர் உரை.—பிறர்க்கு உரியன் கோடல் அறன் அன்றென்னும் நடுவுநிலைமை இன்றி, அவர் நன் பொருளை ஒருவன் வெஃகுமாயின் அவ்வெஃகுதல் அவன் குடியைக் கெடச்செய்து பலகுற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும்.

குறிப்பு.—அயலாருக்குச் சொந்தமான பொருளைக் கவர்தல் தருமமல்ல என்பதை மறந்து, அவர் தருமவழியிற் சம்பாதித்த தனத்தை ஒருவன் கைக்கொண்டால், அவனுக்கு அப்பொழுதே கேடுகள் பலசம்பவிப்பதுடன் அவன் குடி நிர்மூலமாகிப் போம். ஆதலின் எவரும் நடுவு நிலைமை தவறி அன்னியர்பொருளைக் கவர்தல்கூடாது.

உதாரணம்:—புண்ணியபூமியாம் இப்பரதகண்டத்தில் ஏமாங்கதம் என்றொரு நாடு உண்டு. அந்நாட்டின் தலைநகர் இராசமாபுரம். குருகுலத்திலுதித்த சச்சந்தனென்னுமரசன் அந்நாடுமுழுவதும் செங்கோலோச்சி வந்தான். அவன் தண்ணளியில் தருமனையும், கொடையில் கன்னனையும், புஜபல பராக்கிரமத்தில் பீமனையும், அழகில் காமனையும், வில்லாண்மையில் பீஷ்மரையும் ஒத்தவன். இங்ஙனம் பெருமிதத்துடன் வாழ்ந்துவரும் சச்சந்தனது நலனிணைப்பயனைக் கண்டுகளித்த அவன் மாமன் விதய தேசத்தரசன் ஸ்ரீதத்தன் தன்மகள் விசயையை அவனுக்கு மணம்புரிவித்தான். தன் மனைவியின் பேரழகில் ஈடுபட்ட மன்னவன் சிறிது காலமும் அவளையின்றி அத்தையலுடன் வாழவெண்ணி, தன் மந்திரிகளில் ஒருவனாகிய கட்டியங்காரனென்பானுக்கு அரசுரிமையைக் கொடுக்க நிச்சயித்தவளவில், நிமித்திகன் முதலிய மந்திரிமார் பலர்

பார்த்திபனைக் கிட்டி "அரசே! முற்காலத்தில் காமத்தால் பெருமையை யிழந்து பழியெய்தியவர் பலருளர். ஆகவே தாங்கள் காமக்கடலிலாழ்ந்து, அரசை மற்றொருவன் மீது சுமத்துதல் சரியன்று. தேவியுடன் கவலையின்றி வாழ்விரும்பின் அரசுரிமையை எவர்மீதும் இருத்தல் வேண்டாம். 'எண்ணித் துணிக கருமம்' என்பது பொய்யில் புலவன் வாக்கு" என வற்புறுத்தினர். கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே என்பது முதுமொழியாதலின் அரசன் அமைச்சரைநோக்கி "யாவருக்கும் கருவிலேயே போகமும் வாழ்நாளும் அப்பொழுதே அளந்தன் எனவே எனக்குத் தாங்கள் எதுவும் உரைத்தல் அவசியமில்லை" யென அவர்களை யிகழ்ந்து கூறினன். உடனே சச்சந்தன் கட்டியங்காரனை யழைத்து அவனை நோக்கி "நீ இந்நாட்டினைச் சிலகாலம் காத்துவருதி" எனக் கட்டளையிட்டு அந்தப்புரம் புகுந்து தன் தேவியுடன் தானெண்ணியவண்ணஞ் சுகித்திருந்தான். திங்கள் சில கழிந்ததும் விசயை கருப்பமுற்றனள். அரசனும் மனமகிழ்ந்தான். ஒருநாளிரவில் அவ்வரசி மூன்று கனாக் கண்டு அவற்றின் பலனைத்தன் கொழுநன் மூலமாயறிந்து 'ஏதோ தீங்குநேரிடுமே' யெனப்பெரிதும் வருந்தியிருந்தனள். எனினும் அரசனைத்தேற்ற ஒருவாறு தேறியிருந்தாள் என்றே சொல்லவேண்டும். ஈதிங்ஙனமிருக்க உருசி கண்ட பூனையை யொத்த கட்டியங்காரன் காவலனைக்கொன்று இராசசியமுழுவதையும் தானே யடையக்கருதித் தன் மைத்துனன் மதனனுடன் பெருஞ்சேனைகொண்டு அந்தப்புரத்தை முற்றுகை யிட்டான். இம்மாதிரியான சம்பவங்கள்நேரிடக் கூடுமென்று கனவினால் உய்த்துணர்ந்த சச்சந்தன் தன் மனைவி விசயையைத் தேற்றி முன்ன

மேதான் செய்வித்த மயிற்பொறியின் மீதேற்றி அவளை வேறிடஞ் செல்லவிடுத்து, பின்னர் தானொருவனாகவே நின்று மிகுந்த வீரதீரத்துடன் போர்புரிந்தான் புரிந்துமென்? முடிவில் கட்டியங்காரன் கைவாளுக் கிரையாயினன் அந்தோ பாவம்! விதியின் பயனை யாரே விலக்குகிற்பார்?

பின்பு கட்டியங்காரன் வெற்றி முரசறைவித்துத் தானே நாட்டின் ஏகாதிபத்தியத்தைக் கைக்கொண்டான். கட்டியங்காரனது கொடுஞ்செயலைக்கண்டு பொருமியபூரா தார அந்நாட்டில் மருந்திற்கும் கிடைப்ப தரிதென நாம் சொல்லாமலே அமையும் பிறகு அந்தரத்தில் மயிற்பொறியின் மீதுசெல்லும் விசயை, வெற்றி முரசைக்கேட்டு இடியுண்ட நாகம் போல கலங்கி உயிர் சோர்ந்திருக்கையில் மயிற் பொறியும் ஒரு மரத்தின் மீது தாக்குண்டு அந்நகரத்தைச் சார்ந்த மயான மொன்றில் மெல்லென வீழ்ந்தது. வீழ்ந்ததுதான் தாமதம் அவ்விடத்திலேயே ஓர் மகவைப் பெற்றெடுத்தாள் விசயை முன்னமே தன் கணவனுக்கு நேர்ந்த விதியை நினைத்து அறிவழிந்திருக்கப் பின்னரும் பிரசவத்தின் அயாசசியால் உயிரும் மெய்யும் சோர்ந்து மரம்போல தரணியிற் கிடந்தனள் சிறிது பொழுதிற்கெல்லாம் சற்றே மூர்ச்சை தெளிந்து தன் குழந்தைக்குப் பாலமுதூட்டி அம்மகவை நோக்கி "என் கண்ணே! அரசனால் பல சிறப்புடன் மாளிகையில் தோன்ற வேண்டிய நீ பாவியேன் காண இங்ஙனம் பிறத்தல் தகுமோ? நீ கிடக்குமிடமோ பகைவனது; மெல்லிய பஞ்சணையில் பயில வேண்டிய நினக்குப் பாயலோ சுடுகாடாயினது யானும் திக்கற்ற பாவியாய்த் தனியே நின்று திகைக்கின்றேன் காலமோ நள்ளிரவு; நாய் நரிகளும் காடி புலிகளும் உறு

முவதே உனககுத தாலாட்டும கீதமாயின. இததுணை ஏழ்மையில தோன்றிய நீ எஙஙனம வளருவையோ அறியேன். நான் கூறிவநத மொழிகள ஒனறறகேனும பதிலுரையாது வாளா விருககினறனை" எனறேஙகியழுது பெருமூசசெறிநதாள பேதை விசயை அகதிககுத் தெயவமே துணை எனபது அமுதமொழியாதலின அவளது குலதெயவம விசயையின தோழியாகிய சணபகமாலை வடிவங்கொணடு அததையல முன தோனறி "அரசியே! சாதலும பிறததலும தன வினைபபயததினாகும, ஆகலும அழிவும பொருடகியலபு, நோதலும பரிதலும நுணணுணாவினமையனறோ? ஆதலின வருநதேல!" எனறு கூறி, சசசந்தனது நாமம தீட்டபபெறற மோதிர மொனறைக் குழநதையின கைதனிலணிநது 'பெணணே! இனி நீ குழவியைப பறறிக கவலையுறேல மைநதனை வளாததெடுக்க இதோ ஒருவன வருவான்" எனறதும, இருவரும ஒரு பககததில மறைநது நின்றனா. அககாலையில இறந்த தன குழநதையைப புதைததறகு மயானம வநது சேர்நத கநதுககடனெனனும வணிகன, தனியே கிடநத குழநதையைககணடு மிகுநத மகிழசசியடைநது கையிலெடுககையில குழநதை துமமிறறு அருகே நினற தெய்வம 'ஜீவ' எனறு வாழததியது. உடேன வணிகன கவலையினறி அககுழந்தையினை யெடுததுச சென்று தன மனைவியின கையிற கொடுதது "நின மகன இறநதானில்லை" எனறான. அவன தாரமாம சுநநதையும குழந்தையைப பரிவுடன வாஙகி வளர்தது வநதனள. பினனர் அபபிள்ளைக்கு ஜீவகன என நாமகரணஞ செயதனா. அதன பினபு சுநநதைககு நநதட்டனெனனும ஒரு புததிரன பிறநதான. இது நிறக,

மயானத்திருந்த தெய்வம் விசயைக்கு நற்பொருள்களை யறிவுறுத்தியதும் தன் மகன் ஜீவகன் இனிமேல் வாழ்வு ஆக்கம் உண்டாகுக வென்று தவ வேடங்கொண்டு நோற்றுக்கொண்டிருந்தனள். இவனது உண்மைத்தாய். தெய்வமோ புதல்வனுக்கு வேண்டிய உதவி புரிவதாகக் கூறி விசயையிடம் விடைபெற்றுச் சென்றது. சீவகன் தன் தம்பியுடன் கூடி இனிது வாழ்ந்து தக்க பருவம் வந்ததும் அச்சணந்தி யென்னும் ஆசிரியரிடத்து கல்வி, கேள்வி, வில்வித்தை முதலியன பயின்று அவைகளில் நிகரற்ற வனாயினன். சீவகனது புத்தி நுட்பத்தையும் கல்வி மேம்பாட்டையும் கண்டு களித்த ஆசிரியர் அவனைத் தனியே யழைத்துச் சென்று அவன் பிறப்பு வளர்ப்பை விவரமாய்க் கூறினார். உடனே சீவகன் 'இப்பொழுதே கட்டியங்காரனைக் கொல்வேன்' என வெகுண்டெழுந்தான். அச்சமயம் ஆசிரியர் அவனை நோக்கி 'மைந்த! ஆற்றல் மூன்றும் உபாயம் நான்கும் இடத்தோ டமைந்திடினும் காலங்கருதி யிருப்பர் கலங்காது ஞாலம் பெறுபவர். ஆதலின் இக்காலை நீ போருக் கெழுதல் பொருந்தாது. ஒருவருடஞ் சென்ற பின்னர் நீ எண்ணிய வண்ணஞ் செய்க. நீயும் வெற்றி பெறுவாய். இதுவே யான் வேண்டுவது'' என்று சொல்ல, ஆசிரியர் கட்டளையை வேதவாக்கிய மெனக்கொண்ட ஜீவகன் ஒரு வருஷகாலம் வரையில் தன்னை இன்னனென்னப் பிறரறியா வண்ணம் வாழ்ந்திருந்தான். அப்பால் நாளடைவில் காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி முதலிய பெண்கள் நாயகங்களைத் தன் புத்தி நுட்பத்தாலும் வீரத்தாலும் மணந்து உலக வாழ்வை ஒரு சிறிதும் குறைவின்றி அனுபவித்து வந்தான். சச்சந்தனது மைந்தன் சீவகன் எனக் கட்டியங்காரன்

அறியானாயினும் சீவகனது பெருமித வாழ்வையும், புகழ் பெருமைகளையுங் கண்டு சகியாதவனாய் அவனை எவ்விதத்திலேனும் மாய்த்து விடவேண்டுமெனப் பன்முறை வழி தேடியும் ஒன்றும் பயன்படவில்லை. பிறகு, ஆசிரியர் குறித்தபடி ஓராண்டு கழிந்ததும் ஜீவகன் தன் தந்தையாகிய கந்துக் கடனுக்கு மேல் நடக்க வேண்டிய காரியங்களைக் கூறி, தன் மாமன் மார்களையும் துணையாகக்கொண்டு நால் வகைச் சேனையுடன் யுத்தசன்னத்தனாயினான். இருதிறத்துச் சேனையும் போருக் கெழுந்தன. முடிவில் ஜீவகன் கட்டியங்காரனையும் அவன் பந்துவர்க்கங்களையும் கொன்று குவித்து வெற்றிவாகை பெற்று நின்றான். பின்னர் மற்றைய அரசர்களனைவரும் பார்த்து மகிழ்ந்தனர். தந்தையின் அரியாசனத்தில் வீற்றிருந்து மணி முடி சூடி, தத்தை முதலிய தன் தேவியர் எழுவரையும் வரவழைத்து அவர்கள் கண்டு களிக்க இலக்கணையை மணம் புரிந்து இராசமாபுரத்தே பன்னெடுங்காலம் நீதியுடன் அரசு செலுத்தினான் ஜீவகன். இதனைக்கேட்ட விசயையும் களித்தனள்.

## 19-வது கதை. புறங்கூறாமை.

திருக்குறள்

அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

பரிமேலழகர் உரை:—அறனென்பது ஒன்றில்லையென அழித்துச்சொல்லி அதன்மேற் பாவங்களைச் செய்தலினுந் தீமையுடைத்து; ஒருவனைக் காணாத வழி இகழ்ந்துரையால் அழித்துச் சொல்லி, கண்டவழி அவனோடு பொய்த்து நகுதல்.

குறிப்பு—ஒருவனைக் காணாத இடத்து அவன் புகழைக் கெடுத்துப் பேசி, கண்டவிடத்து அவனிடம் அன்புள்ளவன்போல் நடித்து மகிழ்தலானது, தர்மம் என்பது ஒன்றில்லையெனப் பேசி அதன்மேல் பாவங்கள் செய்வதைக் காட்டிலும் தீமையுடையது அதாவது அறனையழித்துச் சொல்லுதலினும் ஒருவனைப் புறங்கூறுதல் தீயது, அதனை மேற்பாவஞ் செய்தலினும் அவனோடு பொய்த்து நகுதல் தீயது என்பதே கருத்தாகும்

உதாரணம்.—மத்திய இந்தியாவிலுள்ள மாளவ தேசத்தை மனு நீதிப்படி ஆண்டு வந்தான் இந்திரசேனன் என்னுமரசன். முற்காலத்திலிருந்த மன்னர் பலரும் தங்கள் நாட்டிலுள்ளார் எவ்வித குறையுமின்றி இனிதே வாழ்ந்து வருகின்றனரா என்பதை யறியும்பொருட்டு இரவில் மாறு வேடந்தரித்து நகர் சோதனை வருவது வழக்கம். அவ்வாறே இந்திரசேனன் ஒரு நாளிரவு தன்னை யாவரும் இன்னானென அறியா வண்ணம் மாறு வேடம் பூண்டு நகர் சோதனைக்குப் புறப்பட்டு ஓர் வீட்டண்டை வந்து தங்கினான். அங்கு பலர் கூடி உரையாடிக்கொண்டிருப்பதை யறிய ஆவல் பூண்டு தெருத்திண்ணையில் பிச்சைக்காரனைப் போல் படுத்திருந்தான். அச்சமயம் ஒருவன் "நண்பரே! நமதரசன் பெருங்கொடையாளி என்பதற்குத் தடையில்லை. தன்னை யடுத்து வரும் பாவலர் இரவலர் அனைவருக்கும் அபரிமிதமாகப் பொருள் வழங்கி வருகின்றான்" என்றனன். "அஃதுண்மை. மேலும் நம்மன்னவன் நடுவு நிலைமை தவறாது நீதி புரிவது வெகு நேர்மை" என்றான் மற்றவன். இனியொருவன் "இத்தகைய அரசன் நமக்கு வாய்த்தது நமது பாக்கியமே!" என்று புகழ்ந்தான்.

வேறொருவன் "நண்பர்காள்! நீங்கள் சொல்லிவந்ததெல்லாம் மெய்தான் ஆனாலும் ஒரு குறையுள்ளது. என்ன வெனில் நன் மரத்தில் புல்லுருவி முளைத்தது போல நம் இறைவனது மந்திரி எப்பொழுது பார்த்தாலும் அரசனைக் கண்டு விட்டால் மிகவும் மகிழ்பவன் போல நடித்தது, காணாது விட்டதோ அரசைப்பற்றி வாய்க்கு வந்தவாறெல்லாம் இகழ்ந்து வருகின்றான் இதனையரசன் அறிந்து என் அப்பாவி மந்திரிக்குத் தண்டனை விதித்தல் கூடாது? நண்பர்களே! சமீபத்தில் மச்ச நாட்டிறைவன் நம் மரணமனைக்கு விஜயஞ் செய்திருந்த காலையில் மச்ச பூபதியுடன் பூங்காவில் உலாவிக் கொண்டிருந்த மந்திரி சுசாமா நம் மன்னவனைப்பற்றிப் புறங்கூறியதை என்னென்னுரைப்பேன்! அச்சமயம் எனக்கு வந்த கோபத்திற் கோரளவில்லை என்றாலும் அரசனது ஆக்கினைக்கஞ்சி மந்திரிக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தேன் இல்லையேல் அப்பொழுதே மந்திரியை எமபுரத்திற் கனுப்பியிருப்பேன்" என்று பதைபதைத்தான். இவ்வாறு மாநகரனைவரும் பேசிக்கொண்டிருந்ததைச் செவியுற்ற அரசன் "ஓ! நம் மந்திரியை இவ்வாறு ஜனங்கள் இழித்துக் கூறுகின்றனர் இதன் உண்மையை நன்கறியவேண்டு"மென எண்ணி அவ்விடத்தை விட்டகன்று மந்திரியின் மாளிகை வந்து அங்கு தெருத் திண்ணையில் சிறிது நேரம் தங்கினான் அங்கிருந்த வாயிற்காப்போர் இருவர் பின் வருமாறு உரையாடிக்கொண்டிருந்தனர் வீரன்:—"அண்ணே! நம்மரசனோ மனுநெறி பிறழாது அரசாண்டு வருகின்றான். மந்திரியோ வெனில் ஓயாது அரசனைப்பற்றி இகழ்ந்து வருவதை நீயும் நன்கறிவை! அதன் காரணம் யாதோ! என

க்கு விளங்கவில்லை அன்னமிட்ட கையை வெட்டினது
போல் மந்திரி நடந்து வருகின்றான்! தீரன்:—தம்பி! நீ
கூறி வந்தது முற்றிலும் உண்மையே! கெடுங்காலம் வந்
துவிட்டது போலும் அமைச்சனுக்கு! அதனால் தான்
அரசனைப்பற்றி நிந்தை மொழிகள் பல புகலத்துணிந்து
விட்டான் வினையிட்டவன் வினை யறுப்பான்!

இவை யனைத்தையும் கேட்டிருந்த அரசன் உடனே
அத்தலத்தை விட்டேகி வெளிக்கிளம்பினான் அக்காலை
நடு நிசி யென்றே சொல்லலாம் வழியில் தனித்து வரும்
ஒரு மனிதனைக் கண்ணுற்ற வரசன் அவனைப்பார்த்து
"நீ யார்" எனக்கேட்க "நான் என் வேலையி னிமித்தம்
செல்கின்றேன்" என்றான் அம்மனிதன் மீண்டும் அர
சன் "நள்ளிரவில் என்ன வேலையப்பா உனக்கு?" என்
றதும் "அடே! பாதி ராத்திரியில் என் வேலை யின்ன
தென்று அறியக் கூடவில்லையா உன்னால்? அரண்மனையில்
களவாடச் செல்கின்றேன்" என்று பதிலுரைத்தான்.
உடனே இறைவன் அக்கள்வனை நோக்கி "அப்பா!
நானோ பரம ஏழை! பிச்சை யெடுத்தே வயிறு வளர்க்
கின்றேன். என் மீது கருணை கூர்ந்து சிறிது பொருள்
உதவின் உன்னை ஒரு நாளும் மறவேன்" என்று வேண்
டினான் கள்வனும் அங்ஙனேயாகுக என்றியம்பி அர
சனையும் தன்னுடனழைத்துச் சென்று, தன்னிட மிரு
ந்த மையின் மகிமையால் உருவின் கத்தியுடன் அரண்
மனையைக் காத்து நிற்கும் வீரர்களைத் தூங்கப்பண்ணி
உள்ளே சென்று பசிலையின் உதவியால் பெட்டிகளைத்
திறந்து அங்கிருக்கும் பொன், வெள்ளி முதலிய நாணய
ங்களில் ஆசை கொள்ளாது மிகுந்த விலை பெற்ற மாணிக்
கங்கள் மூன்றிருத்தல் கண்டு அவற்றில் இரண்டையே

எடுத்து வந்து அரசனுக்கு ஒன்று கொடுத்து "இம் மாணிக்கம் உன் ஆயுள் பரியந்தம் போதும். அதனை விலைக்கு மாற்றி உன்னிடம் குடிகொண்டிருக்கும் தரித்திரத்தைக் களைந்தெறிந்து சுகமே வாழ்ந்திரு" என்று சொல்லித் தன் வீடு நோக்கிச் செல்லயத்தனித்தான். அச்சமயம் அரசன் கள்வனை நோக்கி "வந்தனம் உனது வள்ளன்மையை மிகவும் மெச்சினேன். அரண்மனையில் மூன்று மாணிக்கங்களிருந்தும் அவைகளில் ஒன்றை வைத்துவிட்டு, இரண்டு மட்டும் எடுத்துவந்த காரணம் என்னையோ" என்றதும் "அரசனிடமிருக்கும் பொருள்களில் இம்மாணிக்கங்களே மிக்க விலை பெற்றவை ஆதலின் அரசன் ஏமாந்து போகாதபடி அவனுக்கு ஒன்று மீதிவைத்தல் உசிதம், இதனை யறியாயோ" என்றியம்பிவிட்டுத் தன் வீடு சென்றான் கள்வன். அரசனோ கள்வனறியா வண்ணம் பின் சென்று அவன் வீட்டின் அடையாளத்தை நன்கறிந்து கொண்டு தன் மாளிகை சேர்ந்தான். மறுநாள் பொழுது விடிந்ததும் தன் மந்திரியை ஏவிப் பொக்கிஷத்திலிருக்கும் மாணிக்கங்களை எடுத்து வரச்சொன்னான் அரசன் அவ்வாறே மந்திரி கஜானா சென்று பார்க்க, பணப் பெட்டிகள் யாவும் திறந்து கிடப்பது கண்டு மாணிக்கத்தைப் பார்க்க ஒன்றே யிருந்ததனால் அதனை யெடுத்துத் தன் உடையில் மறைத்துக்கொண்டு ஓடி வந்து "அரசே! சென்ற இரவு நம்மரண்மனையில் திருட்டுப்போயிருக்கிறது. மாணிக்கங்களில் ஒன்றேனும் இல்லை" என்று மிகவும் வருந்துபவன் போல பாசாங்கு பண்ணினான். அவ்வளவு தான் தாமதம், உடனே அரசனது குறிப்பால் ஒற்றர்கள் பல்லக்குடன் சென்று கள்வனை யழைத்து வந்து இராஜ சமுகத்தில் நிறுத்தினர்.

மன்னவன் கள்வனை நோக்கி "கடந்த இரவு அரண்மனையில் களவு போயிருக்கிறது" என்று சொல்லி முடியுமுன், கள்வன் "இராஜ திலக! சென்ற இரவு அரண்மனை வந்து களவாடியவன் நான். தான் மூன்று மாணிக்கங்கள் இருந்தன. அவைகளில் ஒன்றை யரசனுக்கு வைத்து விட்டு மீதி யிரண்டில் ஒன்றை மிகவும் ஏழையென்று சொல்லிய ஒருவனுக்களித்தேன். மற்றொன்று என்னிடமுள்ளது" என்று கம்பீரமாய்ப் பதில் சொன்னான். இதைக்கேட்ட மன்னவன் கள்வனை நோக்கித் "திருட்டுத் தொழில் மிகவும் இழிவன்றோ" என்றதும் கள்வன் சொல்வான். "மன்னா மன்ன! இதோ தங்களருகே நிற்கும் மந்திரி புறங்கூறி வாழ்கின்றானே அதனிலும் என் தொழில் இழிவல்ல! அல்லாமலும் நான் ஏழை பஞதிகள் வீட்டில் திருடுவதில்லை. எனக்குப் பணம் தட்டிய பொழுதே செல்வர் வீடு சென்று அங்கிருக்கும் தனம் முழுவதையும் கவராது வராமல் என் குழந்தை குட்டிகளைக் காப்பாற்ற எத்தனை வேண்டுமோ அவ்வளவே எடுத்து வருவேன். இது என் குலத்தொழில்"

உடனே யரசன் "நேற்றிரவு உன்னுடன் வந்த ஒருவனுக்கு மாணிக்கமொன்றளித்தே னென்றாயே! அம்மாணிக்கம் இதுதானா பார்" என்று தான் பெற்ற மாணிக்கத்தைக் காட்டியதும் கள்வன் சிறிது கலங்கி "அரசே! ஆம்" என்றான். மறுபடியும் மன்னவன் திருடனை நோக்கி "மூன்று மாணிக்கங்களில் ஒன்றை வைத்து விட்டு இரண்டையே எடுத்துச் சென்றதாகச் சொன்னாயே! நீ வைத்துப்போன ஒரு மாணிக்கத்தையும் காணோமே" என்றதும் "விடியற் காலையில் முதன் முதல் கஜானா சென்று பார்த்தவனை அந்த ஒரு மாணிக்கத்தை

யும் திருடியிருப்பான்" என்றியம்பினான் கள்வன். உடனே மன்னவன் மந்திரியை நோக்க அவன் 'அரசே! ஒரு மாணிக்கம் கூட அங்கில்லை இஃதுண்மை" என்றான். கள்வனோ அரசனைப்பார்த்து "மந்திரி யிடந்தான் அம்மாணிக்கம் இருக்கவேண்டும். சோதனை போட்டால் நான் சொன்னது வெட்ட வெளியாகும்" என்றான். மந்திரி மிகவும் பயந்து மானமென்பதை யிழந்து "புத்தி யீனத்தால் ஒரு மாணிக்கத்தை எடுத்துக்கொண்டேன்" என்று சொல்லித் தான் மறைத்துவைத்திருந்த மாணிக்கத்தை எடுத்து நீட்டினான். இவற்றை யெல்லாம் பார்த்திருந்த சபையோர், அரசன் நகர் சோதனை சென்றிருந்ததையும், திருடனுடன் சென்று மாணிக்கம் பெற்றதையும், கள்வன் தன் தொழிலைச் செய்து வந்தும் பெருந்தன்மையுடனிருப்பதையும் அறிந்து அளவிலா ஆனந்தங்கொண்டு, மந்திரியின் மதியீனத்திற்குப் பெரிதும் வருந்தியிருந்தனர். பின்னர் அரசன், திருடன் மந்திரி இவர்களுடைய நடத்தையை யறிந்து இவர்களிருவருக்கும் விதிக்கவேண்டிய தண்டனை யாதென்று சபையோரைக் கேட்க, அவர்கள் "கள்வனுக்கு எவ்வித தண்டனையும் விதித்தல் அழகன்று. மந்திரிக்கோ கடுமையான சிட்சை விதித்தல் அவசியம். ஏனெனில் அவன் தங்களைப் புறங்கூறி வந்தான் என்பதைத் தாங்களறியாது போனாலும் நாங்கள் நன்கறிவோம். மேலும் அரண்மனையிலிருந்த மாணிக்கத்தைத் திருடியது பெருங் குற்றமாகும்" என்று ஒருமனதாய்ச் சொல்லினர். அவ்வாறே அரசனும் கள்வனுக்கு மரியாதை பலவும் பண்ணி, மந்திரியை வேலையிலிருந்து நீக்கி விட்டான். பிறகு மந்திரியும் தான் செய்த குற்றத்திற்கு மிகவும் வருந்தி அறிவு தலைப்பட்டு மான

மெனபதை யிழநது பிராண ஞெனறுடன வாழநது வநதான.

---

## 20-வது கதை. பயனில சொல்லாமை.

திருக்குறள் — சொலலுக சொலலிற பயனுடைய ; சொலலறக
சொல்லிற பயனிலாச சொல.

பரிமேலழகா உரை .—சொறகளில பயனுடைய சொறகளைச சொலலுக ; சொறகளில பயனிலலாத சொறகளைச சொலலா தொழிக

குறிபபு —ஒருவன் ஏதாவது சொல்லப புகுநதால், தனககும பிறாக்கும அறம, பொருள, இனபம முதலிய பயனகளை உண்டாககும சொறகளையே சொலலவேணடும. தனககாவது பிறாககாவது எவவித நனமையையும கொடுக கததகாத சொறகளைச சொலலலாகாது. அதாவது வெட் டிப பேசசும வீண பேசசுமபேசக கூடா தெனபதே கருததாகும.

உதாரணம :—சுமாா ஆயிரம வருஷஙகளுககு முன் சோழா குலததில திருததகக தேவா எனனும ஒரு முனி வா இருநதாா. இவா இளமையிலேயே நலலாசிரியரை யடைநது வடமொழியையும தெனமொழியையும நனகு பயின்று மிகக தோசசி பெறறிருநதார் இவா ஜைன மதத்தைச சார்நதவா. இளமையிலேயே இவர் மனம துறவறததில் அதிகப் பறறடைநதிருநதது. ஒரு சம யம இவர் தம ஆசிரியருடன் மதுரைபபதியை யடைநது அங்கு சில காலம வசிதது வநதார். கறறது கைமமண் அளவு கல்லாதது உலகளவு என்றிருததலினுல் திருதத கக தேவா மதுரைப்பதியிலிருநத தமிழ்ச சங்கஞ் சென்று

அப்புலவர்களுடன் கூடி நூற்பொருள்களை நன்காராய்ந்து அளவிலா மகிழ்ச்சி பெற்றிருந்தனர். ஒரு நாள் சங்கப்புலவர்களிற் சிலர் தேவரை நோக்கி "ஐய! ஜைன மதப்புலவர் ஒருவரும் துறவறத்தை வற்புறுத்தி நூல்களியற்றினர். ஆயினும் தமிழ் மொழிக்கு அங்கமாயுள்ள காமச்சுவையைப் பாராட்டிக் கூறினாரில்லை. ஆகலின் அகச்சுவையில் நூல்கள் பாட ஜைனரால் இயலாது போலும்" என்று கூறினர். அதற்குத்தேவர் "புவியரசர்போற்றும் புலவர்களே! இன்பச் சுவையைப் பாராட்டிக்கூறுதல் எம்மனோர்க்கு முடியாதென்று தாங்கள் எண்ணவேண்டாம். நாங்கள் பேரின்பத்தில் ஆழ்ந்திருப்பதனால் சிற்றின்பத்தில் வெறுப்புக்கொண்டுளோம்" என்று பதிலளித்தனர். இதனைக்கேட்ட சங்கப்புலவர்கள் "தேவரே! அங்ஙனமாயின் காமச்சுவை பெரிதும் விளங்க ஒரு நூலைத்தாங்கள் இயற்றலாமே" என்றார்கள். தேவரும் அவ்வாறு பாடத்துணிந்து, தம் ஆசிரியரிடஞ் சென்று தமக்கும் சங்கப்புலவர்க்கும் நேர்ந்த வாதத்தை வெளிப்படுத்தினர். உடனே ஆசிரியர் "சங்கப்புலவர்கள் கூறியவண்ணம் காமச்சுவைமுழுதும் விளங்க ஜீவகன் சரிதத்தை ஒரு காவியமாகப்பாடுக" என்று, "பாடப்புகுந்த நூல் முட்டின்றி இனிது முடிக" என ஆசியும் கூறினர். தேவரும் தம் ஆசிரியரது அருளைப்பெற்று, சீவகனது சரிதத்தை, சுமார் 3000 பாடலாக எட்டுநாளில் பாடி, ஆசிரியருக்குக்காட்ட அவர் தம் மாணாக்கரது கவித்திறத்திற்கு மிகவும் மெச்சி "இந்நூல் எக்காலத்தும் நின்று நிலவுக" என்றருளினர். நம் தமிழ்மொழியிற் சிறந்துவிளங்கும் காவியம் ஐந்தில் தேவரியற்றிய சீவகசரித்திரம் அல்லது ஜீவகசிந்தாமணி

என்பதுதான் முதன்மையானது இக்காவியத்தில் காமச்சுவை மிகுதியாகக் கூறப்பட்டிருப்பினும் ஆங்காங்கு எண்ணிறந்த நீதிகளும் நன்கு அமைந்திருக்கின்றன.

திருத்தக்க தேவர் தாம் பாடிய நூலை எடுத்துச்சென்று சங்கப்புலவர் முன் அரங்கேற்றினர். சொல்நயம், பொருள்நயம், காமச்சுவை, அலங்காரம், வருணனை முதலியன ஒருங்கே அமையப் பெற்றிருத்தலின் "இச்சீவக சிந்தாமணிக்கு எந்நூலும் ஈடாகாது. மேலும் இம்மாதிரி வேறொரு நூல் பாடுதல் யாவர்க்கும் அரிதரிது" என்று சங்கப்புலவர்களும் பாண்டியவரசனும் தேவரைப்பெரிதும் புகழ்ந்து மகிழ்ச்சியடைந்தனர். அச்சமயம் அங்கிருந்தவர்களிற் சிலர் "தேவர் பால சன்னியாசி யென்பது மெய்யாயின், காமச்சுவை நனிவிளங்கப்பாடுதல் அவரால் ஆகாத காரியம். ஆதலின் தேவர் சிற்றின்பத்தில் அனுபவமுடையவரா யிருத்தல் வேண்டும்" என்று தமக்குள் பேசிக்கொண்டனர். இதனை யறிந்த தேவர் தமது துறவின் தூய்மையைப் பலரும் அறியும்படி வெளிப்படுத்தல் அவசியமெனக்கருதி, பெரிய இரும்புக்கட்டியைத் தீயிற் பழுக்கக் காய்ச்சி வருவித்து "யான் இளமைமுதல் துறவியாயிருத்தல் மெய்யாயின் இது என்னைச் சுடாதொழிக. இன்றேல் பழுக்கக்காய்ச்சிய இரும்பின் கட்டியால் யான் வேதனையடைவது பொருந்தும்" என்று சபதம் கூறி அக்கட்டியைத் தம் கைகளாற் றொட்டும் நாவினாற் பரிசித்தும் தாம் யாதொரு துன்பமு மடையாது இன்ப முற்றிருந்தனர். முன்பு தேவரின் துறவில் ஐயங்கொண்டு தமக்குள் பேசிக்கொண்டவர்கள் எழுந்து வந்து "நாங்கள் அறியாமற் கூறிய அபவாதத்தைப் பொறுத்தருளவேண்டும். நாங்கள் கூறியது பயனில மொழி என்பது இப்பொழுது

னனக்குப் புலப்படுகிறது. எங்கள் குற்றத்தைப் பொறுத்து அருள்புரிவீராக" என்றுபலவாறு வேண்டி நின்றார்கள். திருத்தக்கதேவர் அவர்களை நோக்கி "நீங்கள் யாதொரு குற்றமும் செய்யவில்லை. ஏன் இவ்வாறு பதை பதைத்தல் வேண்டும்! என் துறவொழுக்கத்தின் தூய்மையைப் பலரும் அறியச் செய்தீர்கள். இதனால் நீங்கள் எனக்கு நன்மையே செய்தீர்கள்" என்று இன் சொல் கூறி அவர்கள் கொண்டிருந்த அச்சத்தை யகற்றினார். இவையனைத்தையும் பார்த்திருந்த சங்கப்புலவர்களும் பாண்டிய மன்னனும் தேவரது துறவின் தூய்மையையும், கவிபாடும் வன்மையையும், அவரிடமிருக்கும் அரியபெரிய குணங்களையும், வியந்து பாராட்டினார்கள்.

## 21-வது கதை. தீவினையச்சம்.

திருக்குறள்
மறந்தும் பிறன்கேடு சூழற்க, சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

பரிமேலழகர் உரை —ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணொழிக; எண்ணுவனாயின், தனக்குக் கேடு பயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும்.

குறிப்பு —பிறனுக்குக் கெடுதியைத் தரும் வினையை மறந்தும் ஒருவன் நினைத்தல் கூடாது. அவ்வாறு நினைத்தால் தருமம் அவனை விட்டு நீங்கிப் போய் விடும். அதுவுமல்லாமல் அவன் நாசமடைவான். ஆதலால் தீவினையை நினைத்தலும் ஆகாது.

உதாரணம் :—இக்காலத்திலிருக்கும் லண்டன் மாநகரைவிடப் பன்மடங்கு வளத்தில் சிறந்தோங்கிய புகார்

என்னும் பட்டணம் காவிரி நதி கடலொடு கலக்குமிடத்தில் இருந்தது. அந்நகரில் கன தனத்துடன் வாழ்ந்து வந்தார் சிவநேசர் என்னுமோர் வணிகர் திலகர். இறைவனது பேரருளால் அவருக்குப் பட்டணத்துப் பிள்ளையென்னும் குமாரன் தோன்றினன் அம்மைந்தனைச் சிலர் திருவெண்காடன் என்றும் அழைத்து வந்தனர். சிவநேசர் காலமானதும் பட்டணத்தார் தன் தந்தையின் பெருஞ் செல்வத்தை யடைந்து இந்திர போக மனுபவித்து வருகையில் பூர்வ ஜன்ம பரிபாகத்தால் இல் வாழ்வை வெறுத்துத் துறவியாய் நாடெங்கும் திரிந்து வந்தார். இவ்வதிசயத்தைக் கண்டோரிற் பலர் 'பித்த மிஞ்சி விட்டது பிள்ளைக்கு' என்றிகழ்ந்தனர். மற்றுஞ் சிலர் “பிறப்பை யறுத்தெறிந்து முத்தியைத் தர வல்ல தத்துவ ஞானம் உதித்து விட்டது” என்றெண்ணி அவரை யன்புடன் தொழுதனர். பிறகு தன் கையே பிச்சை யேற்கும் பாத்திரமாகக் கொண்டு சிற்சில மனைகளிற் சென்றிரந்து கிடைத்த தனையுண்டு, வெறுந் தரையே பஞ்சு மெத்தையென மதித்து வாழ்ந்து வந்தார் பட்டினத்தடிகள். யாவர்க்கும் எய்தற்கரிய தத்துவ ஞானத்தை எம்பெருமானருளாற் பெற்ற பிள்ளை யாரிடம் பலர் சென்று “ஐய! இப்புவிதனில் மாந்தரனை வரும் மதிக்கும்படி மிக்க தனத்துடன் வாழ்ந்து வந்தும் அப்பொருளைப் பலர்க்கும் வாரிக்கொடுத்து இக்காலை பலர்மனைதோறுஞ் சென்று ஏற்றுண்டு வசையுடன் திரிந்தலைவானேன்” எனக்கேட்டதும், “உண்மையே! குடியிருந்த வீட்டில் கொள்ளி வைக்குந்தனையும் (தாய்க்குத் தகனக்கிரியை செய்தல்) இவ்வுலகத்திலிருத்தல் வேண்டும். பின்னர் பரமனது பாதபங்கயங்களில் ஐக்கியமாக வேண்டும்”

என்று பதிலளித்தார் திருவெண்காடருக்கு உடன் தோன்றிய தமக்கை பொருத்தியிருந்தனள். அந்நங்கை "ஐயோ! இப்பாவியுடன் ஏன் பிறந்தேன் யான்? இதுவும் விதிவசமோ? தன் வீட்டுக் கதவைப்பிடுங்கி அண்டை வீட்டுக்குக் கொடுத்து விட்டு விடியு மட்டும் நாய் காத்தாளும் என்ற முதுரையின்படி, தன்னிடமிருந்த அருந்தனமனைத்தையும் அன்னியர்க்கு வாரிக்கொடுத்து, தான் பிறந்த குலத்தின் தூய்மையைச் சற்றேனும் கவனியாது ஜாதி மானத்தை விட்டு ஸகல ஜாதியாரிடத்திலும் சாதம் பெற்று மகிழ்வுடன் உண்டு வருகின்றானே! இன்னுள் நம்பியாம்! ஏற்படிகழ்ச்சி யென்பதை எள்ளளவும் சிந்தியாது இருந்துணிகின்றான் என்று பலரும் ஏசிப்பேசும் வார்த்தை வெளியில் தலை நீட்ட முடியாது செய்கின்றதே! என்செய்வேன்! குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்புபோல் தோன்றினனே" என்று பலவாறு நினைத்து வருந்தி "இப்பாதகன் உயிருடனிருப்பதை விட உயிர் துறத்தலே மேல். ஆதலின் இவனை எவ்விதத்திலேனும் கொன்று தீர்த்தல் அவசிய" மென்க் கருதி விட்டனள்

பெரியோர் "ஆடுவார், உன் மத்தர் போல் திரிவார், நகைத்திடுவார், அங்கைகொட்டிப் பாடுவார், இன்றிருந்த இடம் நாளையிருக்க மனம் பற்றார், கந்தையன்றி வேறுடுக்கை கொள்ளார், அவர் புகழ்ப்பெருமை இவ்வளவென்று மதிப்பவரார்," என்ற முது மொழியை அப்பெண் பாவி அறியாது போயினளே! அந்தோ! பாவம்! ஆதலின் ஓர் தினம் பட்டினத்தாரைப் பரிவுடனழைத்து உபசாரங்கள் பலவும் பண்ணி அகமும் முகமும் மலர்ந்தவள் போல் நடித்து நஞ்சுகலந்த அடை யொன்றை (சிலர் அப்ப மென்றும் பகர்வர்) அப்பெண் தன் தம்பிக்கு அளித்தனள்.

முறறு முணாநத முனியும அடைநதனை யனபுடன் கைதனி லெடுதது ஒடிததது, அதனுளளிருககும தீமையை ஆதி நாயக னருளால உணாநது புனனகை கொணடு " இது சமயம தஙகையாகு நஙகை யளிதத அடையில விஷங்க லநதிருககிறதெனபதறகு யாதொரு தடையுமிலலை இக காலை கைககணட டலனுக அவள செயத குறறததிற கேறற தண்டனை கிடைககாது போனுல பினனரும அவள் பலகேடுகள செயயககூடும ஆகவே ஏறற சிட்சை விதி தது நலவழி சேர அறிவுறுததலே சாலசசிறநதது " என றுனனி, தன் வினை தன்னைச் சுடும் எனனைக கொலல நீ யிடட ஓடடபபம் வீடடைச் சுடும் என்று சொலலி அவ வடையை அவள வீட்டின மீது போட்டாா

ஆறறல மிகுநத வேநதரையும அரிய தவதது முனிவரையும
போறறி யொழுகின எப்பொருளும போறறலாகும; அவமதிப்பின
தோறற மிகுஞசாாபின ரேனும சிதைவா, திகழுமபபுாா, சூரன்
சாறறிநதிரன மாலாதியரும தளநதாரெனில சாறறுவ தெனனே

எனபது பொய்யா மொழி யலலவா? அனறியும முறபகல செயயின பிறபகல விளையும எனனும மொழிக் கிணஙக அதிசீககிரததில அப பெணணின மனை பற்ப லா கணடு வியகக வெநது பிடிசாமபராயினது உடனே பட்டினததாரது தஙகை அறிவுதலைபபடடு தன பேதைப புததிககு மெதத்வும பிராலாபிதது அனறு முதல மனத் தாலும பிறருககுத தீஙகினை யுனனுது சுகமே வாழ்நது வநதாள எனபது நாம சொலலாமலே அமையும.

# 22-வது கதை· ஒப்புரவறிதல்

**திருக்குறள்** ஒததததறிவான் உயிாவாழ்வான, மற்றையான்
செததாருள வைககபபடும

பரிமேலழகா உரை:—உயிரோடு கூடி வாழ்வானு வான உலகநடையினை அறிநதுசெயவான, அஃதறிநது செய்யாதவன உயிருடையவனே யாயினும, செததாருள ஒருவனுககக கருதபபடும

குறிப்பு:—உலக நடையையபறிநது அதனபடி நடப பவனே உயிரோடுகூடி வாழபவனுவான். உலகநடையின வண்ணம நடவாதவன உயிருடைய வனுயிருநதாலும இறநதவாகளில ஒருவனுக நினைககபபடுவான. வேத நடைபோல உலகநடையும மனிதா எவரும அனுஷ்டிகக வேண்டிய விதியாதலின் உலகநடையில ஒருவனும தவற லாகா தெனபதே கருதது.

**உதாரணம்:**—திருமால துஷ்டநிககிரகம சிஷ்டபரி பாலனஞ் செய்தறபொருட்டு எடுதத அவதாரங்களில பரசுராமாவதாரம ஒனறுகும. பலலாயிர மாணடுகளுககு முனனா இருநத ஜமதககனிவரும அவா பததினி ரேணுகா தேவியும செய்த தவபபெறறால திருமால அவாகள வயிற றிற குமாரராய்த் தோனறினா. இககுழநதையே பரசு ராமர். இவா எல்லாம வலல இறைவனுகிய பரமசிவனை யடைநது அக்கடவுளருளால அஸ்திர சஸ்திரப்பயிறசி யில் மிகவும தேர்சசி பெறறவரானா. ஒருகால் இவர் தம முடைய பராக்கிரமததால கிரௌஞசகிரியை அம்பெய்து துளைததனரெனவும நமது புராணுதிகளால தெரியவரு கிறது. பிறக ஒருநாள் ஜமதக்னி முனிவர் பூசைசெய்யும பொருட்டுத தன மனைவியைவிளிதது "அபிஷேகத்திற குத தீாததமகொணாக" எனக்கட்டளையிட்டனர் அவ் வாறே ரேணுகாதேவியும நீர் நிலைசென்று தான் கொணா

ந்த குடத்தை நீரிலிட்டுத் தண்ணீர் முகக்கப் புகுந்தகாலை யில் ஆகாயத்தே அதிரூபலாவண்யமுள்ள கந்தருவனொரு வன் சென்றான் அவன் நிழல் நீர்நிலையில் தோன்றி யது தோன்றியதும் முனிவர் பத்தினி “ஓ! இத்தகைய சுந்தரம் வாய்ந்த புருஷனொருவனும் உளனோ!” என றெண்ணினாள் பின்பு குடத்தையெடுத்து இடுப்பில் வைத்துக்கொள்ளப் பன்முறை முயன்றும் குடமோ நீர் நிலையிலிருந்து எடுக்கக்கூடாது போயிற்று. என் செய் வாள் “அந்தோ! நாம் அன்னிய புருஷன் அழகைக் குறித்து மனதில் சிந்தித்ததனாலல்லவா இப்பாண்டம் எடு க்கக் கூடவில்லை நமது பதியோ தீர்த்தங்கொண்டு சீக்கி ரமே வா என்றனர். காலதாமதமாயின் என்ன கதி கிடைக் குமோ தெரியவில்லை” என்று பலவாறு வருந்தி அக் குடத்தை எடுக்க எடுக்க அது வரவேயில்லை ஒரு முகூர்த்த காலஞ்சென்ற பின்னர் குடமும் தூக்கமுடிந் தது உடனே அதிவேகமாய் நடந்து மனைவந்து சேர்ந் தாள் சேர்ந்துமென்? முனிவர் எதிர் பார்த்தபடி காலத் தில் அபிஷேகத்திற்குத் தீர்த்தம் வரவில்லை “காமதத் தின் காரணம் யாதென” முனிவர் கேட்க, என் சொல் வாள்? ஒன்றுஞ் சொல்லமுடியாது உணர்வின்றி நின் றாள் என்றே சொல்லவேண்டும் முனிவருக்கோ கோபம் பிறந்துவிட்டது. முக்காலமும் உணரவல்ல முனிபுங்கவர் தம் மனைவி தாமதித்து வந்ததை ஞானதிருஷ்டியா லறிந்த தம் கோபம் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்துவிட்டது.

“முற்றத்துறந்த முனிவருக்கு வெகுளிதோன்ற லாமோ? உள்ளங்கவர்ந்து எழுந்தோங்கும் சினத்தைக் காத்துக்கொள்வதன்றோ பெரியோர் கடமை! இவ்வா றிருக்க முனிவர் கோபங்கொள்ளலாகுமோ” என்று நம

நேயர்களுக்குச் சந்தேகம் உண்டாகலாம். கோபமானது அறுதியாய் வருகின்ற மாறுபாற்றி, துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்களை யுடைய தவசிகளுக்கும் சிற்சில சமயத்து உண்டாகும் என நம் முன்னோர் மொழிந்திருக்கின்றனர். இனி ஜமதக்னி முனிவருக்குக் கோபம் மூண்டுவிட்டதனால் தம்மருகே நின்ற புத்திரன் பரசுராமரை நோக்கி "உன் தாயைத் தடிக" என்றிட்டார் கட்டளை. அக்காலை பரசுராமரது நிலைமையோ மிகவும் பரிதபிக்கத்தக்கது. எங்ஙனமெனில் தந்தை சொல்மிக்க மந்திரமில்லை யாகலின் அவரது உத்தரவின்படி தாயை வெட்டிவிடவேண்டும். பிதாவின் கட்டளையை நிறைவேற்றப்புகின் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது முதுமொழியாகலின் தாயைக்கொன்ற மாபாதகத்திற்கு ஆளாகவேண்டியிருக்கின்றது. ஆதலின் இருதலைக்கொள்ளி எறும்புபோல இன்ன செய்வதென்றறியாது திகைத்து நின்றிருத்தல் வேண்டுமென்பதை நம் நேயர் நன்கறிவார்கள்.

'எல்லாமறிந்த நம் தந்தையிட்ட கட்டளையை மறுத்தல் அழகன்று அறமுமன்று" என நினைத்த பரசுராமர் உடனே தன் கையிலிருந்த கோடரியால் தாயை இரண்டு துண்டாக வெட்டித் தள்ளினார். தாமெண்ணிய வண்ணம் கட்டளையை நிறைவேற்றிய புத்திர ரத்தினத்தைக் கண்டு மகிழ்ந்த ஜமதக்னிமுனிவர் "பிள்ளாய்! நீ வேண்டிய வரத்தைக் கேள். அவ்வாறே அளிக்கச் சித்தமாயிருக்கின்றேன்" என்று சொன்னார். பரசுராமரும் மிக மகிழ்ந்து "தந்தையே! யான் வேண்டும் வரம் ஒன்றுதான். அஃதென்னையெனில் என் தாய் மீட்டும் உயிர் பெற்றெழுந்து நாமிருவரும் கண்டுகளிக்கும்படி நம்முடன் வாழ அருள்

புரிதல் வேண்டும். இதனைத் தட்டாது தாங்கள் தந்தருளக" என மிகவும் வணங்கி வேண்டினார்.

மைந்தன் விரும்பிய வரத்தை யளிப்பதாக வாக்களித்த முனிவரும் "அங்ஙனே யாக" என்றுசொல்லி முடியுமுன் ரேணுகாதேவியும் உயிர் பெற்றெழுந்து நின்றாள் மைந்தனும் கண்டுகளித்தான். முனிவரும் தம் புதல்வனது புத்தி கூர்மையைக் கண்டுவியந்து ஆனந்த பரவசமடைந்தனர்.

---

## 23-வது கதை ஈகை.

திருக்குறள். சாதலின் இன்னாத தில்லை இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை

பரிமேலழகர் உரை — ஒருவற்குச் சாதல்போல இன்னாதது ஒன்றில்லை, அத்துன்மைத்தாகிய சாதலும், வறியார்க்கு ஒன்றீதல் முடியாதவழி இனிது

குறிப்பு —எவருக்கும் சாவு என்றால் வருத்தமாயிருப்பதுடன் இறந்துபோக மனமவராது நம்மை யண்டிவந்த ஏழைகளுக்குக் கொடுக்கமுடியாத காலத்து, பூமிக்குப்பாரமாய உடல் வைத்திருப்பதைவிட உயிரைத் துறந்துவிடுதல் இன்பமாயிருக்கும் இதுபற்றி யன்றோ குமணனும் சீத்தலைச் சாத்தனுருக்கு எதுவுங்கொடுக்க வகையில்லாது தன்தலையை வெட்டிக்கொண்டு போகும் படி அகமலர்ச்சியுடன் சொன்னான்

உதாரணம் —காவிரி நதியின் வடகரையிலுள்ள திருநின்றவூரிலிருந்த காளத்தியப்பமுதலியார் என்னும் ஸ்ரீமான் அல்லும் பகலும் தன்னை நாடி வருபவர்க்கு வரையாது ஈந்து வந்ததனால் பாலர் முதல் விருத்தர் பலரும் காணுவதாரமென அவரைப் புகழ்ந்து வந்தார்கள். அந்நாட்டை

யாண்டு வந்த அரசனே எச்சிறகையாலும் காக்கத்தை
யோட்ட மனம் பொருத உலோபியாதலின் அவனை ஜன
ங்கள் எள்ளளவும் மதித்தாரில்லை. இதனை யறிந்த வேந்
தன் முதலியார் மீது அருளை கொண்டு அவரிடமிருக்
கும் பொருளனைத்தையும் பறித்துக்கொண்டான். தாழ்வு
வந்த காலத்தும் வாழ்வு வந்த காலத்தும் சலியாத சித்த
த்தை யுடைய முதலியார் அவ்வூரிலிருக்க மனம் பொருது
அப்பொழுதே தன் மனைவியுடன் புறப்பட்டு அயலூர்
சென்று அங்கிருந்த ஒரு சத்திரத்தில் இரவு கழிக்கு
மாறு படுத்திருந்தார். இதிங்ஙன மிருக்க, வறுமைப்பிணி
யால் பெரிதும் வாடிய புலவனொருவன் காளத்தியப்ப
முதலியாரிடஞ் சென்று பணம் பெற்று வரலாமெனப்
புறப்பட்டு வந்து அச்சாவடியின் ஒரு மூலையில் படுத்திரு
ந்தான். சிறிது நேரஞ் சென்றதும் பசி யென்னும் பகை
வன் பாவலனை வருத்த "நீளத்திரிந்து துழன்றாய நீங்கா
நிழல்போல, நாளைக்கிருப்பாயோ நல்குரவே! காளத்தி,
நின்றைக்கே சென்றக்கால் நீ யெங்கே நானெங்கே, இன்
றைக்கே சற்றேயிரு" என்று வித்வான் பாடியதைக் கேட்ட
முதலியார் "அந்தோ! அந்த நாள் வந்தானில்லை அருங்க
விப்புலவன் இந்த நாள் வந்தான்" என்று மிகவும் வரு
ந்தி "நாளையதினம் நம்மூர் சென்று இப்புலவன் ஏமாறிப்
போகா வண்ணம் அன்னமாவது அளிப்போம்" என்று
கருதி, விடியற்காலையில் தம் நாயகியுடன் பயண மாகித்
திரு நின்ற ஊர் சேர்ந்து மனைவியின் கழுத்திலிருந்த
திருவாபரணத்தில் சிலவற்றை விற்று, சாமான்கள் வாங்
கி, சமையல் செய்து வித்வான் வரவை எதிர் நோக்கி யிரு
ந்தார். கவிஞனும் காலையி லெழுந்து தான் குறித்த வண்
ணம் முதலியார் வீடு வந்து சேர்ந்ததும் அவரால் அறு

சுவை புணடி யளிககபபெறறுப பசியாறியதும தன் உள ளககருததை வெளியிட்டான. அசசமயம முதலியாரின மனம என்ன நிலைமையில இருநதிருகக மென நம நேயரே அறிநதுகொளவாராக. தனனை யடுதது வநதோர்ககு ஈய இயலாது சமயதது சாதலே மேல எனததுணிநது அவவாறே வீட்டின புறககடை சென்று அஙகிருநத பாமபுப புறறில கையிட்டார. உடனே மாநாகம வெளிக கிளமபித தனனிட மிருநத நாகரததினததை முதலியார கைதனில ககககிச சென்றது. பழைய தனம மீண்டும கிடைககபபெறறவன போல பெரிதும மகிழவடைநத முதலியார ஓடி வநது புலவனிடம மாணிககததைக கொடுததார. விதவானும ஆனநத மடைநது முதலியாருககு ஆசி கூறி உததரவு பெறறு, கடைததெரு சென்று மாணிககததை விலைககு மாறபபார்ததும அதன விலையை எவராலும மதிகக முடியாததால முடிவில அரசனிடம சென்று விலை கூறினன் இது வரையில அததகைய மாணிககததைக கணடறியாத மனனவன் "இவவிலை யுயாநத கல உனககேது" என்றதும முன பின நடநத சஙகதிகள ஒன்று மறியாத புலவன உளளதை உளளவாறே வெளியிட்டான. அரசனோ கோபா வேசஙகொணடு "நேறறே நாம களளததியினிட முளள பொருள முழுவதையும பறி முதல் செயதோம இவ்வளவு விலை யேறப் பெறற மாணிககஙகள பல அவன் சேமிதது வைததிருக்கிறன் போலும" என்றுன்னி இககணமே களளததியைக கையும பிடியுமாய் இஙகுககொணர்க என்று கடடளையிட்டான அவ்வாறே சேவகரும விரைநது சென்று களளததியை அரசவையில கொண்டு வநது நிறுததினா. "அடே களளத்தி உன் தன மனைததையும நாம பிடுங

கிகொண்டும உன்னிடம மாணிககமிருபப தெபபடி” என்று அரசன கேடக முதலியாா உணமையை வெளியிட்டனா “பாகறகாயைப பூனை கொண்டு போயிறறெனருல யாா அதனை நமபுவா! அதுவே போல பனனுகம உனககு இரததினம கொடுதத தெனபது நமபககூடியதாயிலலை. அது மெயயாயின நாம காண அவவரவம தனனிடமிருககும ஜீவரததினததையும கொடுததல வேணடும இலலையேல உன தலை இரவல” எனறு அரசன சினநதும, முதலியாா “அபபடியே யாகட்டும” எனறு அம மதி கெட்ட மனனவனுடன தன இலலம வநது புறறணடையில நினறு கொணடு “ஈசனே! இதுவும உன திருவிளையாடலோ” எனறு துதிதது நினறவளவில பனனுகம சீறிககொண்டு வெளிககிளமபி முதலியாரை மூனறு முறை வலம வநது தனனிட முளள ஜீவரததினததைககககி அரசனனடையில சென்று ஆவிதுறநதது இவவதிசயததைக கணடாாிற சிலா “அரசனுககு யாது கேடுவிளையுமோ” என்றனா சிலா “தாமம பொயககுமோ” எனறனா. மறறுஞ் சிலா, மதியிலலா மனனவன மாணடுபோகானு எனறேசினா. விதவாணே, முதலியாருககுக கேடு நேருமபடி நாமன்றோ காரணமாயிருநதோம”எனறேஙகினா இவவாறு பலரும எண்ணியிருக்க, அரசன ஓடிவந்து முதலியாாின அடியிணைகளில வீழ்நது “வளளலே! உன மகிமையை யறியாது சிறியேன செய்த பெருமபிழையைப பொருத தருளவது தரும மாகும” எனறு கெஞசினன கொடையிற சிறநத காளததி அரசனைத தூககி நிறுததி “என்ன தகாத காாியஞ் செய்தீா ' என்று பணிவுடன புகனறூா. பினனா அரசன மனமுவநது தான முன்பு காளததியிடம பறிததுக கொணட பணததை விடபபன

மடஙகு உதவ, அதனைப பெறறு முதலியாருமமுன்போல பாவலா இரவலா பலாகதும இலலை யெனனுமல ாநது புக ழுடன வாழநது வநதார்.

## 24-வது கதை. புகழ்.

திருக்குறள்
ாதல இசைபட வாழதல அது வலலது
ஊதிய மிலலை உயிாககு

பரிமேலழகா உரை —வறியாாககு ாக; அதனைற புக ழுணடாக வாழக, அபபுகழலலது மககளுயிாககுப பயன பிறி தொனறிலலை யாகலான.

குறிபபு —தரிததிராகளுககுக கொடுககவேணடும அதனால புகழ பெறறு வாழவேணடும இபபுகழை விட மககளுயிாககு வேறு பயன இலலை யாதலால

உதாரணம —இரவிசேயாகிய கனனனும இநதிரகுமா ரனாகிய அாசுனனும இளமை முதல ஒருவா மீதொருவர் வயிரஙகொணடிருநதனா ரெனபதை நம நணபர றிவாாகள பாரதபபோா பதினேழா நாளில அாசுனன "இனறு பொழுது சாயுமுன என எணணததை நிறை வேறறுவே" னெனச சபதம புரிநது அவவாறே கனனனுடன வெகு உககிரமாயப போா புரிநதனன. கனனனும தன வைரிக குச சளைததானிலலை சூரியாஸ்தமன சமயஙகிட்டியுந தன் மைததுனனது சபதம நிறைவேறாதது கண்ட கிருஷ்ண பகவான "விசயனை நோககி "நீ சிறிது பொழுது போர் செய்வதை நிறுதது" எனபபுகன்று வேதிய வடிவங்கொ ண்டு கனனன பால சென்று "வள்ளலே! மேருவினிடைத தவம பூண்ட யான நின் கொடைததிறததைச் செவியுற் றதும உன்னை நாடிவநதேன" என்றனா. அசசமயம்

கன்னன் விசயனது வெங்கணையால் ஆவி சோர்ந்து மெய் தளர்ந்து இரத்தத்தின் மீது கிடக்கின்றான். அவன் உயிரோ தன் நிலையினின்றும் கலங்கியிருக்கின்றது. இன்னும் சிறிது நேரம் தரித்திருக்குமோ இராதோ தெரியவில்லை. இரப்போர் வேண்டிய வண்ணம் கன்னன் பொருளுதவும் பொழுது அந்தணர் வந்தாரில்லை. என்றாலும் அந்தணர் கூறிய மொழிகளைத் தன் செவிக்கமுதெனக் கேட்ட கன்னன் அகம் மலர்ந்து "வேதியர் கொழுந்தே! இக்காலை யான் தரத்தகும் பொருள் இன்னதென்று சொல்லுக. அங்ஙனமே அளிக்கத்தடையில்லை" என்னும், கிருஷ்ணன் "நீ கொண்ட புண்ணிய மனைத்தையும் உதவுக" என்று வேண்டினர் உடனே இரவிசிறுவனும் "யான் செய் புண்ணிய மனைத்தையும் தந்தேன். மனமுவந்து கொள்க" என்று கைகுவித்து வணங்கினன். கண்ணனோ "மைந்த! இப்புண்ணியத்தை என் கையில் தாரை வார்த்துக்கொடுத்தலன்றோ அழகு" என்றதும், கன்னன் நீர்தேட எங்கு போவான்? தன் மார்பில் அம்புபட்டொழுகும் உதிர நீரால் தாரை வார்த்தான் கன்னன். இக்கன்னனது தானத்தைப் பெற்றுச் சென்றால் தான் அர்ச்சுனன் தன் சபதத்தை நிறைவேற்ற முடியும். அது பற்றியே கண்ணன் கன்னனிடமிருந்து தருமத்தை வாங்கிப்போக வந்தனர். பிறகு, கன்னனது கொடைத்திறத்தைக்கண்டு மெச்சிய கண்ணன் கொடையாளியை நோக்கி "உனக்கு வேண்டும் வரங்களை விரும்பிக்கேள். அவ்வாறே யான் தரத்தயார்" என்று கூறியவளவில் கன்னன் சொல்வான்:

"அந்தணர்திலக! வினையின் பயனால் யான் இன்னும் இவ்வுலகில் பிறவி யெடுக்கநேரின் இல்லை யென்று இரப்போர்க்கு இல்லை யென்றுரையா இதயம் நீ அளித்தருள்"

என்றான். கன்னன் பஞ்சபாண்டவர்க்கு முன்தோன்றிய வனாதலின் விப்பிரவேடங்கொண்டு வந்த கிருஷ்ணன் தன் மைத்துனனாகிய கன்னனை மார்புறத்தழுவி, கருணை நீராட்டி "அப்பனே! நீ எத்தனை பிறவியெடுக்கினும் அவற்றுள் ஈகையும் செல்வமும் எய்தி முத்தியும் பெறுவாய் முடிவில்" என்றருளி அக்கணமே கன்னன் கண்டுகளிப்ப, தமது நீலமேகச்சாமள நிறம் ஜொலிக்கவும், கைகளில் பஞ்சாயுதங்கள் விளங்கவும், தம் இருமருங்கிலும் பூமகளும் பொன்மகளும் விளங்கவும் அந்தரத்தினின்று காட்சி கொடுத்தனர். தேவர்களும் முனிவர்களும் தேடிக்காண முடியாத திருமாலைத் தன்னெதிரே காணப்பெற்ற கன்னன் பெரிதும் மகிழ்ந்து "எத்தவஞ் செய்தும் காணமுடியாத நின்னை என்கண்ணெதிரே காணப்பெற்றேன். இதைவிட யான் பெறும் பேறுமுண்டோ? தருமன் முதலிய என் தம்பியரோடு சமர்முறுக்கினேன்! என்னுயிரனைய தோழற்கும் செஞ்சோற்றுக்கடன் கழித்தேன் தேவர் கோவாகிய இந்திரனுக்கு என் கவசகுண்டலங்களை யீந்தேன். நான் பெற்ற நல்வினைப்பேறு அனைத்தையும் உனக்கே தந்தேன் நின்பாதாரவிந்தத்தை வணங்கப் பெற்றதுமல்லாமல் நினது துளவமாலை யணிந்த மார்பால் தழுவவும் பெற்றேன். என் தம்பியெய்த அம்புகளினால் ஆவிசோர்ந்தும் உனது திருநாமத்தை வாயாரச்சொல்லி வாழ்த்தும் பாக்கியமும் பெற்றேன் மாதவனே மாலவனே மாயவனே சரணம், யாதவனே கேசவனே மதுசூதனனே, சரணம்" என்று உணர்வுடன் பலவாறு துதித்து நின்றான். உடனே திருமாலும் "மைத்துன! அன்று இந்திரனை யனுப்பி உனது கவசகுண்டலங்களைப் பெற்றவனும் யான்; உன் தாய் குந்தியை யனுப்பி நாகாஸ்திரத்தை விசயன்மீது

இரு முறைவிடாது வாஙகொள விததவனும யான்; நின் பிறவியினுண்மையை அறிவிததவனும யான; நினது நாகக் கணையால் அரசுனன் ஆவி போகாது காததவனும யான்; அநதணனாய வநது உன தருமததைப பெறறவனும யான் தான என்பதை நீயே நனகறிவை! இநநிலவுலகததில நின்னைபபோல பெருநதவபபேறும ஈகையும செலவமும பெறறா யாவா" என்று கணணன மனமகிழ இயமபினா அககாலை தேவரும முனிவரும ஆகாயததில் குழுமி துநதுபி முழககினா, கீதமபாடினா பொழிநதன பூமழை பொனமழை!

---

திருககுறள நீதிககதைகள்

முதறபாகம்.

# இ ல் ல ற வி ய ல்

## ஸம்பூர்ணம்

இரண்டாம்பாகம் துறவறவியல்

அச்சிலிருக்கின்றது.

சீககிரம் வெளிவரும

THE INDIA PRINTING WORKS, MADRAS.